ஐந்தாண்டு அபிவிருத்தி

செங்கல்பட்டு ஜில்லா



ஐந்தாண்டு அபிவிருத்தி

செங்கல்பட்டு ஜில்லா

சென்னை சர்க்கார்
செய்தி இலாகாவின் வெளியீடு
1951

[விலை : அணா 4.

இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள ஜில்லாப் படத்தைத் தயாரித்து, அச்சடித்தும் கொடுத்தவர், சென்னை சர்க்கார் சர்வே இலாகாவினர் ஆவர். படத்தின் அளவு மிகப் பெரியதாய் இல்லாமையால், வெகு முக்கியமான குறிப்புகளை மட்டுமே அதில் காட்ட முடிந்தது.

இந்திய சர்க்கார் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவின் (Archæological Department) புராதனக்கலைகள் சம்பந்தமான பல அழகிய படங்களை வெளியிட அனுமதி தந்துதவினர். அவற்றுள் பெரும்பாலானவற்றை கடைசி அட்டைப்படத்தில் காணலாம்.

ஸ்ரீ எம். கே. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அளித்த சில படங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

படங்கள்

மேல் அட்டை :—


முதல் பக்கம் :

பெரியது—
மாமல்லபுரம் சிற்பம்.

சிறியது—
புதிய கிணறுகள் மூலம் நீர்ப்பாசனம்.

கடைசி அட்டை :

தஞ்சாவூர் கோயில், திருச்சி மலைக்கோட்டை, உதகமண்டலம் காட்சி, கோடைக்கானல் ஏரி, ராமேஸ்வரம் கோயில் உட்புறக் கலைக் கூடம், புகளூர் பாலம், மேட்டூர் நீர்த் தேக்கம், பாபநாசம் மின்சார நிலையம், திருவரங்கம் கோயில் சிற்பம், மாமல்லபுரம் சிற்பம், குற்றால நீர்வீழ்ச்சி



மேன்மை தங்கிய சென்னை கவர்னர்
ஸ்ரீ ஸர் கிருஷ்ணகுமார் ஸின்ஹ்ஜி பவ்ஸின்ஹ்ஜி,
கே. ஸி. எஸ். ஐ., பவ்நகர் மஹாராஜா.



கனம் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம்
மராமத்து மந்திரி




கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்
சுகாதார மந்திரி



கனம் ஸ்ரீ ஜே. எல். பி. ரோச் விக்டோரியா
உணவு மந்திரி




கனம் ஸ்ரீ பி. கோபால ரெட்டி
நிதி மந்திரி



கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா
முதல் மந்திரி



கனம் ஸ்ரீ வி. பெருமாள்சாமி ரெட்டி
கைத்தொழில் மந்திரி



கனம் ஸ்ரீ கே. மாதவ மேனன்
கல்வி மந்திரி



கனம் ஸ்ரீ பி. பரமேஸ்வரன்
கிராம அபிவிருத்தி மந்திரி




கனம் ஸ்ரீ ஹெச். சிதாராம ரெட்டி
ரெவின்யூ மந்திரி



கனம் ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி
விவசாய மந்திரி



கனம் ஸ்ரீ கே. சந்திர மௌலி
ஸ்தல ஸ்தாபன மந்திரி



கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் சுகாதார மந்திரி பதவியை 1951-ம் ௵ செப்டெம்பர் ௴ 17௳ ராஜிநாமா செய்த பிறகு கனம் ஸ்ரீ களா வெங்கடராவ் செப்டெம்பர் ௴ 26௳யிலிருந்து அப்பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னுரை

பொது ஜனப் பிரதிநிதிகள் சென்னை ராஜ்ய ஆட்சி முறையை மேற்கொண்டு இப்போது ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. நமது தேசத்தின் சரித்திரத்திலேயே இந்த ஐந்து வருஷ காலமும் ஒரு சோதனைக் கட்டமாகும். முற்கால ஆட்சி முறையின் சின்னங்கள், தற்கால மாறுதல்கள் காரணமாகத் தோன்றும் இன்னல்கள், வருங்கால நல்வாழ்வுக்குரிய பலமான அஸ்திவாரம் கோலவேண்டிய கடமை ஆகிய எல்லாவற்றையும், அரசாங்கம் ஏக காலத்தில் கவனிக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய சோதனைகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்குமிடையே, சர்க்கார் தங்கள் ஒரே லட்சியத்தை மறக்காமல் போற்றி வந்துள்ளனர். அதாவது, "எம் கடன் மக்களுக்குப் பணிசெய்து கிடப்பதே" என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். மக்களுடைய நன்மையைக் கோரியும், அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றவும்தான், ஜனப் பிரதிநிதிகள் அரசாங்க பதவியை வகித்து வருகின்றனர்.

எத்தனையோ காலமாக நாம் கண்டு கொண்டிருந்த இலட்சியக் கனவுகள், கடந்த ஐந்தாண்டுகளில் நனவாகி இருக்கின்றன. மதுவிலக்கு, ஜமீன்முறை நீக்கம், நீதி - நிர்வாகப் பிரிவினை ஆகிய சீர்திருத்தங்கள், நம்முடைய எதிர்கால சந்ததியாருக்கு மிகச் சிறந்த நற்பயன் அளிப்பதோடு, சமூக அமைப்பிலேயே ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மூல சாதனக்குறைவினால் ஏற்பட்ட முடக்கம், மற்றும் எத்தனையோ பெரிய சங்கடங்களுக்கும் இடையே, அநேக அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளன. இத்திட்டங்கள் கஷ்டமான உணவு நிலைமையை ஓரளவு சமாளிக்க உதவுவதோடு, பொதுவாகப் பொருளாதாரத் துறையில் ஸ்திரமான நிலையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த காரணமாயிருக்கின்றன.

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சி காலம் பூராவும் நீர்ப்பாசனத்துக்காகச் செலவு செய்த தொகைக்கு மேலேயே, நாம் கடந்த ஐந்தாண்டுகளில், அதன் பொருட்டு இந்த ராஜ்யத்தில் செலவிட்டிருக்கிறோம். 1945—46-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த நீர்ப்பாசனச் செலவு, 1951–52-ம் வருஷத்தில், சர்க்காரின் வரவு செலவுத் திட்ட மதிப்பின்படி, 10 கோடி ரூபாய்க்கு மேலாகியுள்ளது. இப்போது நமது ராஜ்யத்தில் மொத்தம் 101 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது.

தவிர, நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி இரு மடங்கு அதிகமாகியுள்ளது. மின்சார அபிவிருத்திக்கான ஐந்து வருஷத் திட்டத்தில் மூன்றில் இரு பங்கு பூர்த்தியாகிவிட்டது. இதன் மூலம் சுமார் 1,600 கிராமங்களுக்கு மின்சாரம் சப்ளையாகிறது. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுப்பதில் இந்தியா முழுவதிலும் சென்னை ராஜ்யமே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. 1945—46–ம் வருஷத்தில் மின்சாரத் துறையில் அரை கோடி ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாக மட்டும் சென்னை அரசாங்கத்தார் செலவிட்டனர். ஆனால், 1951—52-ம் ஆண்டிலோ, பட்ஜெட் மதிப்பின் பிரகாரம், ஒன்பது கோடி ரூபாய்க்குமேல் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐந்தாண்டுகளில், நீர்ப்பாசனத் துறையில் ஏறக்குறைய பத்து மடங்கும், மின்சாரத் துறையில் இருபது மடங்கும், அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது விளங்கும்.

இத்தனை சாதனைகளுக்கும் பொது ஜனங்களின் பூரண ஒத்துழைப்பே காரணமாயிருந்தது. சர்க்காருடன் மக்கள் மனமுவந்து ஒத்துழைத்ததால்தான், அநேக காரியங்களை நிறைவேற்றுவது சாத்தியமாயிற்று. ஆகவே, இவற்றை எல்லாம் சாதித்த பெருமை, நிச்சயமாக இந்த ராஜ்ய மக்களையே சார்ந்ததாகும். அதாவது பொது ஜனங்களாகிய உங்களுக்கே அப்பெருமை உரியதாகும்.

கடந்த ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்ட க்ஷேமாபிவிருத்திகளை விளக்கும் வெளியீடுகளில், இப்புத்தகம் ஒன்றாகும். உங்கள் சர்க்கார் என்னென்ன செய்தார்கள் என்பதை இதன் மூலம் உங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதை அறிந்து கொள்ளவேண்டிய உரிமையும், இதுபற்றித் தீர்ப்பளிக்கும் பொறுப்பும் உங்களுக்கே உண்டு.

பி. எஸ். குமாரசாமி ராஜா

அறிமுகம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே

காற்றிலே மிதந்து வந்த நாதஸ்வர ஓசை உள்ளத்தைச் சிக்கெனப் பிடித்து, இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தத் தொடங்கியது. அதுவும் அமைதி குடி கொண்டுள்ள முன்னிரவில் மலைமேலிருந்து அந்த அமுதகானம் அலை வீசி எழும்போது, அதில் யார்தான் திளைத்துத் தம் வசம் இழக்க மாட்டார்கள்!

திருக்கழுக்குன்றத்தின் தோற்றமும், அதன் படிகளின் ஒழுங்கும், காலதேவனின் அடிச்சுவடுகளை நினை வூட்டுவது போல் நின்றன. அன்று பகல் பூராவும் உற்சாக மிகுதியில் மாமல்ல புரத்திலே சுற்றித் திரிந்ததன் இளைப்பு அப்போதுதான் அதிகமாகத் தெரிய ஆரம்பித்தது. உடல் சோர்வு தோன்றினாலும், உள்ளம் கற்பனைச் சிறகுடன் சரித்திரவானில் பறந்துகொண்டேயிருந்தது.

உயிரற்ற கற்களுக்கு உயிரூட்டும் அற்புதக் கலையில் சிற்பிகள் ஈடுபட்டிருந்தனர். வளமற்ற நெய்தல் நிலம். துறைமுகத்தின் வாணிபச் சிறப்பைப் பறைசாற்றி நிற்கும்

கலங்கரை விளக்கு. கடலை அடுத்த மணல் வெளியில் ஒரு சில கற்பாறைகள்; அவற்றிலிருந்து அமர உருவங்களைச் சிருஷ்டிக்கலாம் என்ற எண்ணம் பல்லவ மன்னர்கள் காலத்தில் உருவெடுத்தது.

உளிகள் கற்களுடன் சேர்ந்து புது வகையான இசையை எழுப்பின. கடலின் அலையோசையுடன், சிற்பிகளின உளியோசை போட்டியிடத் தொடங்கியது. சிறிது காலத்தில் கற்கள் உயிர் பெற்றெழுந்தன. அசைவற்ற கற்பாறைகளாய் இருந்தவை, அது முதல் தம்மைக் காண்போரை அசைவற்று நிற்கச் செய்தன. அன்று மாத்திரமல்ல; பல நூற்றாண்டுகள் கடந்த இன்றுந் தான். நம்நாட்டு மக்கள் மட்டும் அதிசயிக்கவில்லை. உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்துவரும் மக்கள் அனைவரும் அதே விதமாக வியப்படைந்து நிற்கின்றனர். அந்தச் சிற்பங்களின் நுட்பத்தையும் அழியாச் சிறப்பையும் கண்டு கலையுள்ளம் படைத்தோர் எவரும் சிறிது நேரம் கற்சிலையாகாமல் இருக்க முடியாது. "திறமான புலமையெனில், வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற சிறப்பிலக்கணத்துக்கு, மாமல்லபுரச் சிற்பம் சிறந்த உதாரணம்.

மாமல்லபுரச் சிற்பங்கள் பழைய சரித்திரப் பெருமையை நினைவூட்டுவதோடு நின்று விடவில்லை. செங்கற்பட்டு ஜில்லாவின் நிரந்தரப் புகழுக்கும், அப்பிரதேச மக்களின் இன்றைய உழைப்புத் திறனுக்கும், லட்சிய வாழ்வுக்கும் சான்றுகளாக விளங்கி வருகின்றன.

பல்லவப் பேரரசின் துறைமுகமான மாமல்லபுரத்தைப் போன்றே, தலைநகரமான காஞ்சியும் கலைச் சிறப்பின் சான்றாக விளங்கி வருகின்றது. அங்குள்ள காமாட்சியம்மன், ஏகாம்பரநாதர், வரதராஜப் பெருமாள் கோயில்கள் மிகப் பிரசித்தி பெற்றவை. கைலாசநாதர் கோயில், வைகுண்ட பெருமாள் கோயில் ஆகியவை சிற்பக் கலையின் உறைவிடங்களாகும். அதோடன்றி, காஞ்சீபுரம் பன்னெடுங் காலமாகவே கைத் தொழில் வனப்புக்கும் பேர்போனது. அப்புராதன நகரின் பட்டு நெசவுத்

தொழிலுக்குத் தமிழ் நாடெங்கும் ஒரு தனி மதிப்புண்டு.

விடாமுயற்சியின் வெற்றி

வற்றுப்பெருக் கெடுத்தோடும் ஜீவ நதிகள் ஒன்றும் இந்த ஜில்லாவில் இல்லை. இங்குள்ள பிரசித்தி பெற்ற நதி பாலாறுகும். பெரிய புராணம் போன்ற இலக்கியங்களில் இதன் பெருமை பலபட விரித்துரைக்கப்படுகிறது. ஆனால் வெள்ளப் பெருக்கம் அதிகமில்லாததால், அதிலுள்ள மணல் எப்போதும் பால்போல் காணப்படுகிறது. அதனால்தான் அதற்கு அப்பெயர் வந்ததோ என்று சொல்லத் தோன்றும். ஆகவே, இந்த ஜில்லா விவசாயிகள் எல்லோரும் பெரும்பாலும் மழையை நம்பியே வாழ வேண்டி யிருப்பதில் ஆச்சரியமில்லை. இயற்கை வசதிகள் குறைவாக இருந்தும், இப்பிரதேச மக்கள் பன்னெடுங் காலமாகவே தம் விடா முயற்சியின் விளைவாகப் பல்வேறு நீர்ப் பாசன வசதிகளைச் செய்து கொண்டுள்ளனர். முக்கியமாக, பல பெரிய ஏரிகள் இந்த ஜில்லாவில் இருக்கக் காண்கிறோம். செம்பரம்பாக்கம், செங்கல்பட்டு, உத்திரமேரூர், மதுராந்தகம், ஸ்ரீபெரும்பூதூர், நாகலாபுரம் முதலிய இடங்களிலுள்ள ஏரிகள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி யளிக்கின்றன.

இவற்றுடன், அங்கங்கே அநேக கிணறுகளை வெட்டி, கவலை மூலமாகவோ, ஏற்றம் மூலமாகவோ, நவீன பம்புகள் மூலமாகவோ நீரிறைத்து மக்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்கின்றனர். மக்கள் சர்க்கார் ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுகளாக அநேக புதிய கிணறுகள் இந்த ஜில்லாவில் வெட்ட ஏற்பாடாகியது.

பூண்டி நீர்த்தேக்கம்

இந்த ஜில்லாவிலுள்ள குடத்தலையாற்றின் நீர் பூண்டியில் தேக்கப் பட்டிருக்கிறது. இங்கிருந்தும், சோழவரம் ஏரி, புழலேரி ஆகியவைகளிலிருந்தும், சென்னை நகருக்குக் குடி தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது.

சமீபத்தில் ஆரணியாற்றில் பிசாத்தூர் என்ற இடத்தில் ஒரு பெரிய நீர்த்தேக்கம் அமைக்க ஏற்பாடாகி யிருக்கிறது. இதன் வாயிலாக, பொன்னேரி திருவள்ளூர் தாலூகாக்களில் சுமார் 10 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

இந்த ஜில்லா சென்னை ராஜ்யத்திலுள்ள ஜில்லாக் களுள் (சென்னை நகரம், நீலகிரி நீங்கலாக) மிகச் சிறிய தொன்ருகும். அதன் மொத்த விஸ்தீர்ணம் 3,079 சதுர மைல்.

இந்த ஜில்லா சமவெளிகள் நிறைந்தது. சில இடங் களில் குன்றுகள் உள. ஆதலால் இங்கு இனிய இயற்கைக் காட்சிகள் காண்பதரிது. ஆனல், நாகலாபுரத்தை அடுத் துள்ள குன்றுகளில் முக்கியமாய், காம்பாக்கம் என்னும் துர்க்கத்திலும் அதைச் சூழ்ந்துள்ள இடங்களிலும் இயற்கைத் தேவி எழில் கனிந்து விளங்குகிருள்.

செங்கழுநீர்ப்பட்டு என்பது மருவி செங்கற்பட்டு என்று ஆயிற்று. ஒரு காலத்தில் இந்த ஜில்லாவின் குளங் களிலும், தடாகங்களிலும் செங்கழுநீர்ப் புஷ்பங்கள் நிறைந்திருந்தன என்பர்.

புராதனப் புகழ் பெற்ற இந்த ஜில்லா தொண்டை நாட் டின் ஒரு பாகமாக விளங்கியது. "தொண்டை நாடு சான் ருேர் உடைத்து" என்னும் ஔவைப் பிராட்டியின் பொன் மொழிக் கேற்ப, இங்குக் கவிவல்லோரும், கலா நிபுணரும் பக்தர்களும் புகழுடன் தோன்றி, வாழ்ந்து மறைந்தனர். சேக்கிழார், ஸ்ரீராமானுஜாசாரியார், முதலாழ்வார்கள், ஆழ்வார்கள், புகழேந்திப் புலவர், அந்தகக் கவி வீரராகவ முதலியார், பச்சையப்ப முதலியார் முதலியோர் இந்த ஜில்லாவில் பிறந்தவர்களேயாவர்.

நிலவளம்

விவசாயம் கால்நடைகள் ஆகியவற்றின் அபிவிருத்தியை நவீன விஞ்ஞான முறையில் அமைத்திட அரசாங்கம் முயலும்

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஷரத்து—48

செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள நிலப்பரப்பின் மொத்த விஸ்தீர்ணம் 1,965,807 ஏக்கர் ஆகும். இந்த நிலங்களில் 57·1 சத விகிதமே, அதாவது 1,122,830 ஏக்கர் பரப்பு வாய்ந்த பூமியே, சாகுபடிக்கு லாயக்கானது. சாகுபடிக்குத் தகுதி வாய்ந்த இந்தப் பூமியில் 994,204 ஏக்கர் பூமியே அதாவது 88·5 சத விகிதமே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. எஞ்சிய பூமியைச் சாகுபடி செய்வதாயிருந்ததால், பல கிணறுகள் தோண்டி பாசன வசதி அளிக்க வேண்டியிருக்கிறது.

உணவு பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கு உணவுத் தானியங்களைப் பெருவாரியாய் ஏற்றுமதி செய்து வந்த இந்த ஜில்லா சென்ற நான்கு ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்துப் போனதால், தன் தேவைகளையே பூர்த்தி செய்து கொள்ள இயலா நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஜில்லாவின் மக்களுக்கு உணவுப் பஞ்சம் நேர் வதைத் தடுக்க நமது ஜனநாயக சர்க்கார் பதவியேற்றவுடன் கட்டுப்பாடு, பங்கீடு முறைகளை அமல் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரிசி, கோதுமை, மைலோ, ரவை முதலிய உணவுத் தானியங்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன. பங்கீட்டுக் கடைகள் மூலம் அவைகள் மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன. மக்களின் வேண்டு கோளின் பேரிலும், விருப்பத்துக்கு இசைந்தும், 1950-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் இந்த ஜில்லாவில் கட்டுப் பாடு உத்தரவுகள் தளர்த்தப்பட்டன. உணவு நிலைமை சீர்திருந்தும் என்னும் உணர்ச்சி மக்களிடையே தோன்றி யிருப்பதே அவ்வாறு தளர்த்தப்பட்டதற்கு முக்கிய காரண மாகும்.

நீர்ப்பாசன வசதி

செங்கற்பட்டு ஜில்லா மக்களின் முக்கியத் தொழில் விவசாயமே. விவசாயம் வெற்றிகரமாக நடை பெறு வதற்குப் பருவ மழை அவசியமாயிருக்கிறது. பருவ மழை தவறுங் காலங்களில் விவசாயத் தொழில் வியர்த்தமாகா திருப்பதற்காக, நமது சர்க்கார் பதவி ஏற்றவுடன், நீர்ப் பாசனத்துக்குக் கிணறுகள் வெட்டுவதற்கான திட்டத்தை ஏற்பாடு செய்தனர். அத் திட்டத்தின்படி விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கான செலவில் பேர்பாதி தொகையை சர்க்கார் மான்யமாக வழங்கத் தீர்மானித்தனர்.

1946-ம் ஆண்டில் புதிய கிணறுகள் வெட்டுவதற்காக சர்க்கார் இந்த ஜில்லா விவசாயிகளுக்கு வழங்கிய மான்யத் தொகை ரூ. 26,74,753 ; அத் தொகையைக் கொண்டு 6,612 புதிய கிணறுகள் வெட்டப்பட்டன. பழைய கிணறுகளைப் பழுது பார்ப்பதற்குச் சர்க்கார் ரூ. 4,34,059 மான்யமாக வழங்கினர். அத் தொகையைக் கொண்டு 2,690 பழைய கிணறுகள் பழுது பார்க்கப்பெற்றன. விவசாயிகளுக்கு சர்க்கார் 1946–47-ல் தக்காவிக் கடனுகக் கொடுத்துதவிய மொத்த தொகை ரூ. 5,69,294.

புதிய கிணறுகள் தோண்டும் மான்ய திட்டத்தை யொட்டி நமது ஜனநாயக சர்க்கார் விவசாயிகளுக்கு 1947–48-ல் ரூ. 9,12,365 மான்யமாக வழங்கினர். அத் தொகையைக்கொண்டு 1,702 கிணறுகள் புதிதாக வெட்டப்பட்டன. 1948–49-ல் சர்க்கார் மான்யமாக வழங்கிய தொகை ரூ. 14,75,000. அவ் வருஷம் புதிதாகத் தோண்டப்பட்ட கிணறுகள் 950 ஆகும். 1949–50-ல் சர்க்கார் ரூ. 11,50,000 மான்யமாக வழங்கினர். அவ் வாண்டில் 570 கிணறுகள் வெட்டப்பட்டன. 1950–51-ல் சர்க்கார் வழங்கிய மான்யத் தொகை ரூ. 5,46,000; வெட்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை 117. அதுவு மல்லாமல், நமது ராஜ்ய சர்க்கார் ஜில்லாவின் விவசாய அபிவிருத்திக்காக அத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயி களுக்குத் தக்காவிக் கடனுக 1947–48-ல் ரூ. 1,54,305-ம், 1948–49-ல் ரூ. 3,17,130-ம், 1949–50-ல் ரூ. 4,76,730-ம், 1950–51-ல் ரூ. 12,49,995-ம் வழங்கி யுள்ளார்கள்.

ஏரி குளங்களின் சீரமைப்பு

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்குக் கிணறுகள் நீர்ப் பாசன வசதி அளிப்பது போலவே, குளங்களும் பாசன வசதிகள் அளிக்கின்றன. அதனுல் நமது ஜனநாயக சர்க் கார் குளங்களைச் சீர்திருத்தும் விஷயத்திலும் அதிக சிரத்தை காட்டி வருகின்றனர்; குளங்களைச் சீர்திருத்துவ தோடு அமையாமல், ஆறுகளும், ஊற்றுக் கால்வாய்களும் மண் தூர்ந்து பயனற்றும் போவதைத் தடுக்க, தூர்வாரி, ஆறுகளையும், ஊற்றுக் கால்வாய்களையும் நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள வழிவகைகள் கோலி பணம் செலவு செய்து வருகின்றனர். அவற்றுக்காக சர்க்கார் 1947–48-ல் ரூ. 1,91,650-ம், 1948–49-ல் ரூ. 3,09,047-ம், 1949–50-ல் ரூ. 1,92,175-ம், 1950–51-ல் ரூ. 2,37,000-ம் செலவு செய்துள்ளனர்.


சர்க்கார் விவசாய இலாகாவினர் செங்கற்பட்டு ஜில்லா வில் ஆங்காங்கு டிப்போக்கள் (Depots) திறந்து வைத்து,

விவசாயிகளுக்கு உபயோகமுள்ள விவசாயக் கருவிகளும், பசுந்தழை முதலிய உரங்களும், உயர்ந்த ரக வித்துக்களும் வினியோகித்து வருகின்றனர்.

1,201 விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்டுவதற்கும் நீர்ப்பாசன வசதிக்குமாக, பெட்ரோல் பம்ப் செட்டுகள் குடிக்கூலிக்கு வழங்கியுள்ளார்கள். சாகுபடி செய்வதற்கு நிலங்களைச் சீர்திருத்தவும், சமப்படுத்தவும் இந்த ஜில்லாவில் 15 டிராக்டர்களும், 2 புல்டோஸர்களும் பணியாற்றி வருகின்றன. 3,478 டன் எடையுள்ள இரும்பு, எஃகு முதலிய வற்றாலாகிய விவசாயக் கருவிகள் விவசாயிகளுக்கு நான்கு வருஷகாலமாக வழங்கப்பட்டுள்ளன.

யந்திர சாதன உபயோகம்

மேற்படி டிராக்டர்கள், புல்டோஸர்களைக் கொண்டு 3,691 ஏக்கர் பரப்பு வாய்ந்த பூமி சாகுபடி செய்யப்பட்டது. 700 ஏக்கர் பூமி சமன் செய்யப்பட்டது. இத்தகைய சீர்திருத்தத்தின் மூலம் 1,110 டன் உணவுத் தானியங்கள் அதிகமாகக் கிடைத்தன. பருவமழைபொய்த்து விட்ட காரணத்தால் விவசாயிகள் எண்ணெய் யந்திர சாதனங்களையும், பம்ப் செட்டுகளையும் அதிகமாக உபயோகிப்பதில் சிரத்தை காட்டி வருகிறார்கள்.



உணவு பற்றுக்குறையை ஈடு செய்வதற்கு, காய்கறிகளையும் மீன் வகைகளையும் அதிகமாகப் புசிக்க மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். நமது ராஜ்ய சர்க்கார் இந்த ஜில்லாவில் காய்கறிகள் அதிகமாகப் பயிரிடுவதற்காக,

உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த காய்கறி வித்துக்களை, விற்பனை செய்து வருகிறார்கள். 1946-ம் ஆண்டிலிருந்து 1950-ம் ஆண்டுவரையில் சர்க்கார் வினியோகித்த விதைகளைக் கொண்டு 5,545 ஏக்கர் பரப்பு வாய்ந்த பூமியில் காய் கறிகள் பயிரிடப்பட்டன அதன் பயனாக, 16,635 டன் காய்கறிகள் உற்பத்தியாயின. பாடசாலைகளின் உபயோகத் துக்காக 118½ பவுண்டு எடையுள்ள காய்கறி வித்துக்களை சர்க்கார் இலவசமாக வழங்கியுள்ளார்கள்.

மீன் பிடிக்கும் தொழிற் பயிற்சி

நெல், சோளம், கேழ்வரகு முதலிய உணவுத் தானியங் களுக்கும் காய் கறிகளுக்கும் அடுத்த படியாக, மக்களுள் பெரும்பாலார் உணவாக அருந்துவது, மீன் என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆதலால், நமது ராஜ்ய சர்க்கார் நமது ராஜ்யத் தேவைக்குத் தகுந்தபடி மீனினங்களை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றனர். கடற்கரைப் பிரதேசங்களுக்குத் தொலைவில் உள்ள உள் நாட்டு ஜில்லாக்களுக்கும் மீன் சப்ளை செய்வதற்கான வழி வகைகள் கோலி வருகிறார்கள்.

மீன்களைப் பிடித்து விற்பனை செய்து ஜீவித்து வரும் செம்படவர் நிலையை உயர்த்துவதற்கும், செம்படவர்களுக் கும் மீன் உண்ணும் மக்களுக்கும் இடையே நின்று மீன் விற்பனையால் கொள்ளை லாபம் அடித்துப் பிழைக்கும் தரகர்களை நீக்குவதற்கும், சென்னை ராஜ்ய மெங்கும் ஆங் காங்குச் செம்படவா கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள் ளன. செம்படவர்களுக்கிடையே இப்போது விழிப்பு ஏற் பட்டுள்ளது. மீன் பிடித்துப் பிழைக்கும் செம்படவர் களின் குழந்தைகளுக்கு மீன் பிடிக்கும் தொழில் சம்பந்த மான கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. வருஷந்தோறும் ரூ. 3½ லட்சம் செலவில் அவ்வித தொழிற் கல்விச் சாலைகள் 60 ராஜ்யம் பூராவும் ஆங்காங்குப் பணியாற்றி வருகின்றன. சுமார் 11,000 சிறுவர்கள் அப் பாடசாலைகளில் கல்வி கற்று வருகிறார்கள். மீன் பிடிக்கும் வலைகள் பின்னுதல், படகுகள்

கட்டுதல், உண்பதற்குரிய மீன் வகைகளின் குண விசேஷங்களை அறிந்து கொள்ளுதல், கடலில் படகுகளைச் செலுத்தி மீன் பிடித்தல் முதலியவை சம்பந்தமான கல்வி அப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது. இதுவரையில் 105 மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. சற்றேறத்தாழ 10,000 செம்படவர்கள் அவற்றின் அங்கத்தினராக இருந்து வருகின்றனர். அக் கூட்டுறவு சங்கங்களில் தற்போதுள்ள மூலதனம் ரூ. 1,62,500 ஆகும்.

நம் நாட்டில் பிடிக்கும் மீன் வகைகளைக் கணக்கிட்டால் நபர் ஒன்றுக்கு 3·4 பவுண்டு மீன்தான் கிடைக்கும் என்று ஏற்படுகிறது. இவ்வளவு குறைந்த பட்ச அளவில் கிடைக்கக்கூடிய மீனினங்களை நல்ல நிலைமையில் மக்களுக்கு விற்பனை செய்வதும் கடினமாயிருக்கிறது. மீன்களைக் கொண்டு போய்க் கடைகளில் விற்பதற்காக நமது ராஜ்ய சர்க்கார் பிரத்தியேக மீன்மோட்டார் வண்டிகளைத் தயார் செய்துள்ளார்கள். அந்த மீன் மோட்டார் வண்டிகளில் 60 கூடைகளில் நிறைய மீன் வைத்துக் கொண்டு 24 நபர்கள் தாராளமாய்ப் பிரயாணம் செய்யக்கூடிய வசதிகளுண்டு. சில மோட்டார் வண்டிகள் எண்ணூர், திருவான்மியூர் ஆகிய இடங்களிலிருந்து சென்னை நகரின் மார்க்கெட்டுகளுக்கு விற்பனை செய்வதற்குப் பலவித மீன்களைக்கொண்டு செல்கின்றன. இதனால் சர்க்காருக்கு கிடைக்கும் லாபம் கொஞ்சமே. ஆனால் அவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான பவுண்டு மீன்கள் அழுகிப் போவதினின்றும் பாதுகாக்கப் படுகின்றன.

குளிர் பதன் முறைகள்

குளிர் பதன் முறைகளாலும் மீன்கள் கெட்டுப்போக விடுவதில்லை. நூற்றுக் கணககான மணங்கு எடையுள்ள மீன்கள் மங்களூரிலும், கள்ளிக் கோட்டையிலும் உப்பிட்டு உலர்த்தப்படுகின்றன. நமது சென்னை ராஜ்யத்தில் 80 இடங்களில் மீன்கள் உப்பிட்டு உலர்த்தப்படுகின்றன

பழவேற்காட்டைச் சுற்றிலும் உள்ள பிரதேசம் இத் தொழிலுக்குப் பேர்போனதாகும். உப்பிட்டு உலர்த்துவதன் மூலம் 20 லட்சம் மணங்கு மீன்கள் மக்களுக்கு உபயோகப்படுகின்றன. நாகப்பட்டினம், மங்களூர், கன்னியாகுமரிமுனை ஆகிய கடற்கரை யோரங்களிலும், நடுக்கடலிலும் மீன்கள் பிடிப்பதற்காக 10 விசைப்படகுகளைச் சென்னை சர்க்கார் மீன் இலாகாவினர் தயார் செய்துள்ளார்கள்.

உள்ளூர்களிலுள்ள நீர் நிலைகளில் மீனினங்களை அபிவிருத்தி செய்வதற்குச் சிறந்த வசதிகளுண்டு. உள்ளூர் நீர் நிலைகளின் விஸ்தீர்ணம் 8,75,000 ஏக்கர் ஆகும். இவற்றுள் 250,000 ஏக்கர் பரப்பு வாய்ந்த நீர் நிலைகள் இதுவரையில் பரிசோதனை செய்யப்பெற்றுள்ளன. இந்நீர் நிலையங்களில் 90 சத விகித நீர் நிலைகள் மீன் வளர்ப்புக்குத் தகுதி வாய்ந்தவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான மீன் குஞ்சுகளைச் சேகரித்து 50,000 ஏக்கர் பரப்பு வாய்ந்த நீர் நிலைகளில் வளர்ப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் சரிவர நிறைவேற ரூ. 8,45,000 செலவாகும். இத் திட்டத்தால் உள்ளூர் நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் செம்படவர்களுக்கு வருஷவாரி 30 லட்சம் ரூபாய் லாபம் கிடைப்பது நிச்சயம்.

காட்டுப் பிரதேச அபிவிருத்தி

கடந்த நான்கு வருஷ காலத்தில், காட்டு இலாகா செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள பஞ்சாயத்துக் காடுகளைத் தன் பராமரிப்பில் எடுத்துக்கொண்டது; அதுவுமல்லாமல், ஆங்காங்குச் சவுக்கு மரங்களை நட்டுப் பயிராக்குவதில் மிக்க சிரத்தை காட்டி வருகின்றது. விவசாயிகளின் காடுகள் என வழங்கும் மூன்றாம் வகுப்புக் காடுகள் யாவும் 1925-ம் ஆண்டில் பிரதேச பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்டன. அக் காடுகள் யாவும் நாளடைவில் அழிக்கப்பட்டு விட்டன. அதனால் அக் காடுகளை நமது சர்க்கார் காட்டு இலாகாவுக்கு ஒப்

படைத்தது சிறந்த முன்னேற்றப்பணியாகும். தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் உள்ள காடுகளின் மொத்த விஸ்தீர்ணம் 265,267·96 ஏக்கர் அல்லது 414·48 சதுர மைல்கள். அழிந்து போன காடுகளை விருத்தி செய்வது சுலபமான காரியமல்ல ; மேலும் அவைகள் நம்மிஷ்டப்படி சீக்கிரத்தில் விருத்தியும் அடையா. இக்காடுகளில் இப்போது பரீட்சார்த்தமாக, கொஞ்சங் கொஞ்சமாக கொருக்காப்புளி, வேலிகாப்பான் என்னும் செடிகள் நட்டுப் பயிரிடப்படுகின்றன.



1945–46-ம் ஆண்டுகளில் முறையே 1,970, 2,975 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களில் சவுக்கு மரங்கள் நடப்பட்டன. ஆயினும், அவைகள் பருவ மழையின்மையாலும் மண் வளக் குறைபாட்டினாலும் பட்டுப்போயின. சவுக்கு மரம் நட்டுப் பயிரிடுதல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொன்று என்பது மிகையாகாது. விறகுக்கான மரங்கள், முக்கியமாய் விரைவில் வளரக்கூடிய சவுக்கு மரங்கள் பேரளவில் நட்டுப் பயிரிடாவிடில், இன்னும் 10, 15 வருஷ காலத்தில் நமது ராஜ்ய நகரங்கள் பலவற்றுள் விறகுப் பஞ்சம் ஏற்படுவது நிச்சயம்.

1950-ம் ஆண்டில் வன மகோற்சவக் கொண்டாட்டத்தின் மூலம், காடுகளின் வளர்ப்புக்கு உற்சாகம் அளிக்கப்பட்டது. காட்டு இலாகாவினர் மரங்கள் நட்டுப் பயிரிடும் விஷயத்தில் அநேக சர்க்கார் இலாகாக்களுக்கும் பொது

மக்களுக்கும் பேருதவி செய்தனர். 1950-ம் ஆண்டில் காந்தி ஜயந்தி வாரத்தின் போது, காட்டு இலாகா, மராமத்து இலாகாக்களின் மந்திரிகள், இந்த ஜில்லாவிலே திருவள்ளூர் பிர்க்காவைச் சேர்ந்த வெங்கத்தூரில் 15 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பூமியில் பலவித விலையுயர்ந்த மர வகைகளைப் பயிரிடுவதை ஆரம்பித்து வைத்தார்கள்.

கால் நடைப் பராமரிப்பு

விவசாய அபிவிருத்திக்குக் கால்நடைகளின் பாதுகாப்பு இன்றியமையாததென்பதை யாவரும் அறிவர். கால்நடைகள் நமது நாட்டின் செல்வமென மதிக்கப்படுகின்றன. அதனால் நமது ஜனநாயக சர்க்கார் கால்நடைகளின் விருத்தியில் மிக்க கவனம் செலுத்தி வருகின்றனர். கால்நடைகளுக்கு நோய் அணுகாவண்ணம் தடுப்பதற்கும், நோயைத் தீர்ப்பதற்கும், உயர்ந்த ரகக் கால் நடைகளை வளர்ப்பதற்கும் வழிவகைகள் கோலியுள்ளனர்.



1949-ம் ஆண்டில் களியாம்பூண்டியில் புதிதாகத் திறந்து வைத்த மிருக வைத்திய சாலையுள்பட இந்த ஜில்லாவில் 4 மிருக வைத்திய சாலைகள் இருக்கின்றன ஸ்ரீபெரும்பூதூர், திருக்கழுக்குன்றம் ஆகிய இவ்விரண்டு இடங்களிலும் சிறு மிருக வைத்திய சாலைகள் இரண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சர்க்கார் இலாகா 16 பொலி காளைகளைப் பரிபாலித்து

வருகின்றனர். 3 பொலி காளைகள் மிருக வைத்திய சாலைகளில்வளர்க்கப்பட்டு வருகின்றன. இரண்டு காளைகள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. கால் நடைக் கண் காட்சிகள் இரண்டு நடைபெற்றன.

பசுக்கள் பாதுகாப்பு நிலையம்

வறட்டுப் பசுக்களைப் பாதுகாக்கும் நிலையமொன்று 1944-ம் ஆண்டில் காம்பாக்கத்தில் அமைக்கப்பட்டது. அந் நிலையத்தில் நமது ராஜ்ய சர்க்கார் நிரந்தரமான மாட்டுக் கொட்டகைகளும், அந்நிலையச் சிப்பந்திகள் குடியிருக்க வீடுகளும் கட்ட அங்கீகாரம் அளித்துள்ளார்கள். அங்குப் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்குத் தீவனம் கொண்டு செல்லவும், அந் நிலையத்தில் கன்றுகள் ஈன்ற பசுக்களைக் கன்றுகளுடன் சென்னைக்குக் கொண்டுவரவும் ஒரு மோட்டார் லாரி உபயோகப்படுத்தப்படுகிறது. அந் நிலையத்தில் தற்போது ஏகதேசமாக 200 வறட்டுப் பசுக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு மிருக வைத்தியரும், ஒரு ஸ்டாக்மென் கம்பவுண்டரும் பணியாற்றி வருகின்றனர். விவசாயிகளிடையே ஒரு பொலி காளையும், நெல்லூர் இனத்தைச் சேர்ந்த 8 ஆட்டுக் கிடாக்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தம்

உழுதுண்டு வாழ்வோரை வீழ் நிலையினின்று கைதூக்கி விடவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நமது ஜனநாயக சர்க்கார் நிலச் சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று திட்டமிட்டார்கள். இதையொட்டி ஜமீன்தாரி முறையை நீக்கக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். அதனுடன் ஜமீன்தாரிப் பிரதேச ஏழை விவசாயிகளின் தீனக்குரலும் சேர்ந்து கொண்டது.

அதன் பயனாக, ஜமீன்தாரி முறை நீக்கச் சட்டம் சென்னை ராஜ்ய சட்ட சபையில் நிறைவேறிற்று. சர்க்

காருக்கும் விவசாயிகளுக்கும் இடையே இருந்து பேரூதியம் பெற்றுவந்த ஜமீன்தார்கள் பதவியினின்றும் நீக்கிவிடப் பெற்றனர்.

ஜமீன்தாரி நிலங்களைச் சர்க்கார் சிப்பந்திகள் சர்வே செய்து வருகின்றனர். அந் நிலங்கள் ரயத்துவாரி நிலங்களாக மாற்றப்பட முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஜமீன்தார்களின் உரிமைகளும் புறக்கணிக்கப் படவில்லை. சர்க்கார் அவர்களுக்குத் தக்க நஷ்டஈடு கொடுத்துதவ சம்மதித்துள்ளார்கள். அந் நஷ்ட ஈட்டுத் தொகைகள் அவர்களுக்கு இரண்டு மூன்று தவணைகளில் வழங்கப்படும்.

ஜமீன்தாரி விவசாயிகள் சாகுபடி செய்துவரும் நிலங்களுக்குரிய வரியைக் குறைத்து ரயத்துவாரி நிலவரிக்கு ஈடாகச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. நில குத்தகை சீர்திருத்தத்தை குறித்தும், காணியாட்சி முறைகளின் சீரமைப்பைப் பற்றியும் நமது சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறார்கள். இவ்வகையில் விவசாயிகளின் நிலைமை சீர்திருந்தி அவர்களுக்கிடையே திருப்தியும், மன அமைதியும் உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கான உற்சாகமும் நிலவும்.

கிராமப் புனருத்தாரணம்

நமது ராஜ்ய சர்க்கார் ஜமீன்தாரி முறையை ஒழிப்பதோடு நில்லாமல் கிராமப் புனருத்தாரணத்திலும் ஈடுபட்டுள்ளனர். இந்திய மக்களுள் சற்றேறத்தாழ 80 சதவிகிதத்தினர் கிராம வாசிகள். அவர்கள் மூலம் இந்திய மக்கள் அனைவரும் உணவும் உடையும் பெறுகிறார்கள். கிராம வாசிகளின் நிலைமை தற்போது மிகவும் பரிதவிக்கத் தக்கதாகும். அவர்கள் வசித்துவரும் கிராமங்களும் சீர் கேடடைந்துள்ளன. இவ்விருகுறைபாடுகளையும் நீக்க நமது சர்க்கார் மிக்க சிரத்தை காட்டி வருகிறார்கள்.

ட்ராக்டர்கள், புல்டோஸர்கள் மூலம் நிலங்கள் பண்படுத்தப்படுகின்றன. தரிசு நிலங்கள் சாகுபடி செய்ய

முயற்சிக்கப்படுகின்றன. அங்குள்ள ஏரி, குளங்கள் மராமத்து செய்யப்பட்டு வருகின்றன. புதிய கிணறுகள் வெட்ட மான்யம் வழங்கப்படுகிறது. ராஜ்யமெங்குமுள்ள ரஸ்தாக்களோடு கிராமங்கள் இணைக்கப்பட்டு, போக்கு வரத்து வசதிகள் ஏற்பட்டு வருகின்றன.

நிலவரி வஜா

பருவ காலக் கோளாறுகளால் மழையின்றி வறட்சியால் பாதிக்கப்பட்ட வட ஆற்காடு, தென் ஆற்காடு செங்கற்பட்டு, ராமநாதபுரம், தஞ்சாவூர் (சில பாகங்கள்) திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நெல்லூர், சித்தூர், ஆகிய ஜில்லாக்களில் 1,359-ஆம் பசலிக்கு நன்செய், புன்செய் நிலங்களுக்கு நமது ஜனநாயக சர்க்கார் வரி வஜா சலுகை யளித்துள்ளார்கள்.

இந்தச் சலுகை வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்கள் முழுமைக்கும் காட்டப்பட்டது. அதனால் செங்கற்பட்டு ஜில்லா விவசாயிகள் விளையாத பயிர்களுக்கு வரி செலுத்தும் நிர்ப்பந்தத்தினின்றும் காப்பாற்றப்பட்டனர். அவர்கள் ரூ. 8,99,814 வரி வஜா பெற்றனர்.

ஆத்தூர் விவசாயப் பண்ணை

தென்னிந்திய ரெயில்வேயில், செங்கற்பட்டு—அரக்கோணம் கிளை மார்க்கத்திலுள்ள ரெட்டிப்பாளையம் புகைவண்டி நிலையத்துக்கு வடகிழக்கில் சுமார் 4 பர்லாங்கு தூரத்தில் ஆத்தூர் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட நபர் ஒருவருக்குச் சொந்தமானது. இப்பண்ணையில் 130 ஏக்கர் நன்செய் நிலமும் 70 ஏக்கர் புன்செய் நிலமும் அடங்கி யிருக்கின்றன.

இந் நிலங்களுக்கு மோட்டார் பம்புகள், எண்ணெய் என்ஜின் பம்புகள் மூலம் கிணறுகளிலிருந்து நீர் பாய்ச்சப்படுகிறது. கல்வி பயின்ருேர் சிலர் அப் பண்ணையை வெகு திறமையுடன் நடத்தி வருகிருர்கள். அவர்கள் விவசாயத்தில் உற்சாகமும் ஆர்வமும் காட்டுகின்றனர்.


உயிருக்குறுதி
முதியோர் கல்வி
வாசக சாலை
கல்வி
மாதர் நலம்
கல்வியும் களியாட்டமும்
கண்ணில்லார்க்கும் கல்வி


ழுகு தரிசனம்—திருக்கழுக் குன்றம்
கலைக் கோயில்
ஸ்ரீபெரும்பூதூர் கோயில
கண்ணைக்கவரும் கலைக்கூடம்
கள்ளை மறக்கக் களியாட்டம்
கள் ஒழிப்பு

இப் பண்ணையில் வருஷ முழுதும் 100 ஆண், பெண்கள் வேலைசெய்து வருகிறார்கள். இங்குள்ள ஊழியர் அனைவருக்கும் ஊதியம் நெல்தானியமாகவே வழங்கப்படுகிறது.

விவசாய இலாகா சிபார்சு செய்த பலவித நெல் ரகங்களை இப் பண்ணையில் பயிரிட்டு வருவதால் ஒவ்வொரு மாதமும் நெற்பயிர் அறுவடை செய்ய வசதி ஏற்பட்டுள்ளது.

மனித உழைப்பைக் கூடுமான வரையில் குறைத்து, உற்பத்திப் பொருள்களின் அளவைப் பெருக்க சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் யந்திர சாதனங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

ஒழிந்த வேளைகளில் பொதுஜன உபயோகத்துக்கான ரேடியோவைக் கேட்பது, நூல் நூற்பது, சிறந்த பண்ணை முறைகளைப்பற்றி விவாதம் நடத்துவது முதலிய நடவடிக்கையால் பண்ணை வாழ்க்கையால் ஏற்படும் அயர்வும் சலிப்பும் அகற்றப்படுகின்றன.

பண்ணையாட்களுக்குக் கல்விபோதனை

இப் பண்ணையைச் சூழ்ந்துள்ள குடியானவர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. தினந்தோறும் மாலை வேளையில் வகுப்புகள் நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளில் ஒழுங்கான நவீன பண்ணை முறைகளைக் குறித்த விஷயங்கள் போதிக்கப்படுகின்றன.

இப் பண்ணை ஒரு நெற்பண்ணையே. இதன் மூலம் 18 ரக நெற்பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆயினும் பண்ணைச் சொந்தக்காரர், தொழிலாளர் ஆகியோரின் சுய தேவை பூர்த்திக்காக அந்தந்தப்பருவ காலங்களில் வாழை, காய்கறிகள், எண்ணெய் வித்துக்கள், நவதானியங்கள், கம்பு, பருத்தி, மிளகாய், முதலிய பயிர் வகைகளும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இப் பண்ணை, சுற்றியுள்ள மக்களுக்கு வழிகாட்டி

யாகத் திகழ்கிறது. இதன் முறையைப் பின்பற்றி உற்சாகம் பெற்று, சிலர் தங்களுக்கென சொந்தப் பண்ணைகளை நிறுவியுள்ளார்கள் ; இதனால் ஏற்கனவே தரிசாகக் கிடந்த நிலங்களில் பெரும்பாலானவற்றில் உணவுத் தானியங்களை அறுவடை செய்து வருகிறார்கள்.

இப் பண்ணை ஏற்பட்டது முதல் இதைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களில் உபயோகமாகும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 6-லிருந்து 100-ஆக உயர்ந்துள்ளது. இந்த மாதிரிப் பண்ணை முறையை விவசாயிகள் பின்பற்றினால் உணவுத் தானிய உற்பத்தி பெருகும்.

நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்குப்பம்

இந் நிலையம் திரூர் குப்பத்துக்கு ஐந்து மைல் தூரத்தில் இருக்கிறது. இது 1942-ஆம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. 40 ஏக்கர் பரப்பு வாய்ந்த நிலத்தில் இந் நிலையம் அமைக்கப்பட்டு பணியாற்றி வருகிறது. நெல் வகைகளிலிருந்து உயர்ந்த ரக விதைகளை உற்பத்தி செய்ய வழி வகைகள் கோலப்படுகின்றன.

சுவர்ணவாரி நெல்லில் உயர்ந்த ரக நெல் உற்பத்தி செய்வதில் இவ்வாராய்ச்சி நிலையத்தார் வெற்றி பெற்றுள்ளனர்.

ராகி, வேர்க்கடலை முதலியவைகளைப் பயிரிட்ட நிலத்தில் சம்பா நெல் பயிரிடுவதால், சம்பா நெல் விளைச்சல் பாதிக்கப்படுவதில்லை என்றும், 40 பவுண்டு நைட்ரோஜன் அல்லது 150 பவுண்டு அல்மோனியம் சல்பேட் ஆகிய உரங்கள் நெல்லின் அதிக விளைச்சலுக்கு அனுகூலமானவை என்றும் ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

வருஷந்தோறும் இந் நிலையத்திலிருந்து, 600 ஏக்கர் பரப்பு வாய்ந்த விதைப் பண்ணைகளுக்குப் போதுமான 30,000 பவுண்டு விதைகள் வினியோகிக்கப்படுகின்றன.

இந்த ஜில்லாவில் ஒரக்காடு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஆர். கோவிந்தராஜுலு நாயுடு ஏக்கர் ஒன்றுக்கு 8,071¼ பவுண்டு நெல் உற்பத்தி செய்ததற்காக ஜில்லா வெகுமானம் அளிக்கப்பெற்றார்.

பொதுநல வசதிகள்


மழையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய புன்செய் நிலங்களுக்கு நீர் நிலைகளின் மூலம் பாசன வசதி ஏற்படுத்தினால், நாட்டின் வளம் பன்மடங்கு பெருகுவதோடு, அம் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அழியாப் புகழும் உண்டாகும்.

—புறநானூறு
18-ம் பாட்டின் கருத்து.

உணவு உற்பத்திப்பெருக்க இயக்கம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு நமது ஜனநாயக சர்க்கார், செங்கற்பட்டு ஜில்லாவில் 15 நீர்ப்பாசனத் திட்டங்கள் வகுத்துள்ளார்கள்.

உத்திர மேரூர் ஏரிக்கு ஜல சப்ளை செய்யும் கால்வாய்க்குத் தலைப்பில் செய்யாற்றுக்குக் குறுக்கே 1,100 அடி நீளமுள்ள கல் அணைக்கட்டு ஒன்று கட்ட சர்க்கார் அநுமதி அளித்துள்ளார்கள். அந்த அணைக்கட்டு கட்டி முடிக்க ரூ. 6·26 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அணைக்கட்டும் அது சம்பந்தமான வேலைகளும் அநேகமாக முடிவடைந்து விட்டன. ஆனால் அணைக்கு

மேலண்டையில் இடது பக்கத்தில் வெள்ளத்தைத் தடுப்ப தற்காக வரப்பு இன்னும் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. கடந்த நான்கு வருஷ காலமாக மழையின்றி நாடெங்கும்வறட்சி ஏற்பட்டதால் இந்த அணைக்கட்டின் முழுப்பயனையும் விவசாயிகள் அனுபவிக்க இயலாது போயிற்று. ஆனால், 1948-1949-ஆம் ஆண்டுகளில் சுற்றுபுறப் பிரதேசங்களில் பயிர் விளையாமற் போனபோது இந்த அணைக்கட்டின் கீழுள்ள நிலங்களில் ஒரு போகப் பயிர் சாகுபடி செய்யப்பட்டது.



நேமம் ஏரிக்கு வலது புறத்தில் ஒரு புதிய கால்வாய் வெட்டி அதைச் செம்பரம்பாக்கம் ஏரியுடன் இணைக்கும் திட்டத்தைச் சர்க்கார் அங்கீகரித்துள்ளார்கள். அதற்கு ரூ. 6·4 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நேமம் ஏரியின் ஜலம், வெள்ளம் ஏற்படும் காலங்களில் ஏரியை உடைத்துக்கொண்டு 1,500 ஏகர் பரப்பு வாய்ந்த சுற்றுப்புற நிலங்களில் பாய்ந்து பயிரை அழித்துவிடும். பயிர் நாசமடைவதைத் தடுக்க, நேமம் ஏரியின் வலது புறத்தில் பாரூர், மேல்வார் குப்பம், கட்டசுரம் கிராமங்களுக்கூடே கால்வாய் ஒன்று வெட்டி அதைச் செட்டிப்பட்டு பாலத்தண்டையில் செம்பரம்பாக்கம் ஏரியுடன் இணைக்க ஏற்பாடாயிருக்கிறது. இவ் வேலை இன்னும் ஒரு வருஷ காலத்தில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் முடிவடைந்தால் வெள்ள காலங்களில் 1,500 ஏக்கர் பரப்பு வாய்ந்த நன்செய் ஆயக்கட்டு

நிலங்களில் பயிர்கள் பாழாவது தடுக்கப்பட்டுவிடும்.

பழைய செங்கல்வராயன் ஜல சப்ளை கால்வாயைத் தூர்வாரிச் செம்மைப்படுத்தி அதன் மூலம் புத்தேரியில் விருதாக்ஷி நதியிலிருந்து ஜலம் கொண்டு நிரப்பும் திட்டத்தைச் சர்க்கார் அங்கீகரித்துள்ளார்கள். அத் திட்டத்துக்கு ரூ. 24,000 செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் வேலை முடிவடைந்தால் 157 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள நிலத்தில் இருபோக சாகுபடி நடக்கும். அதுவுமல்லாமல் 52 ஏகர் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படும்.

பொன்னேரி தாலூகாவிலுள்ள சாவாரி நதிக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்ட ஏற்பாடாயிருக்கிறது. அதற்கு ரூ. 62,000 செலவாகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது. அந்த அணைக்கட்டின் மூலம் வெள்ளத்தால் சேதம் ஏற்படாதவாறு கள்ளாற்றிலிருந்து கொளத்தூர் ஏரிக்கு ஜலம் கொண்டு செல்லப்படும். இத்திட்டம் முடிவடைந்தால் 800 ஏக்கர் பூமிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இத் திட்டவேலை 1951-ம் ஜூன் மாதத்தில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரெட்டித்தாங்கல் ஏரி

பொன்னேரி தாலூகாவிலுள்ள அரதூரைச் சேர்ந்த ரெட்டித்தாங்கல் என்னும் ஏரியைப் பழுது பார்த்து அபிவிருத்தி செய்ய சர்க்கார் அங்கீகரித்துள்ளார்கள். இந்த ஏரியின் கரைகளை உயர்த்தி அதிகத் தண்ணீர் கொள்ளும்படி செய்வதற்கு ரூ. 32,000 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத் திட்டம் முடிவடைந்தால், ஹரிஜனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 50 அல்லது 60 ஏக்கர் விஸ்தீரணம்கொண்ட நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும்.

சைதாப்பேட்டை தாலூகாவிலுள்ள அயனம்பாக்கம் ஏரியை நிரப்புவதற்கு கூவம் நதிக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்று அமைக்க சர்க்கார் ஏற்பாடு

செய்துள்ளார்கள். இத் திட்டத்துக்கு ரூ. 1,05,000 செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இத் திட்டம் பூர்த்தியடைந்தால் 800 ஏக்கர் பூமிக்கு நீர்ப்பாசன வசதி உறுதிப்படுவதுமல்லாமல், 75 ஏக்கர் பூமிக்குப் புதிதாக நீர்ப்பாசன வசதியும் கிடைக்கும்.

பொன்னேரி தாலூகாவில் ரசுலா கண்டிகை எல்லையில் உள்ள ரசுகுண்ட வெங்கா நதிக்குக் குறுக்கே அணையொன்று அமைத்து நீர் நிலையமொன்று நிறுவ சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளார்கள். இத்திட்டம் முடிவு பெற்றால் 1,000 ஏக்கர் விஸ்தீர்ணத்துக்கு மேற்பட்ட நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறும்.

சைதாப்பேட்டை தாலூகாவில் ஒரு சிற்றாற்றின் ஜலத்தை மடக்கி ஒட்டியம்பாக்கம் ஏரியில் நிரப்புவதற்கும் அவ்வேரியின் கரையை உயர்த்திக் கட்டுவதற்கும் சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர். அதற்கு ரூ. 20,000 செலவாகுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இத் திட்டம் பூர்த்தியடைந்தால் இப்போது சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி உறுதிப்படுவதுமன்றி, அவற்றுள் பாதி நிலங்கள் இரண்டாம் போக சாகுபடிக்கும் லாயக்காகும்.

தாமல் கசமும், கால்வாயும் ரூ. 8,200 செலவில் பழுதுபார்க்கப்பட்டன. அவற்றில் அடைப்பட்டிருந்த தூர் வாரி எடுக்கப்பட்டது. அவ் வேலை 1949-ம்ஹு அக்டோபர்மீ முடிவடைந்தது. அதன் பயனாக, 10,000 மூட்டை அரிசி மக்களுக்குக் கிடைத்தது.

முசறிவாக்கம் கசமும், கால்வாயும் பழுது பார்க்கப்பட்டன. அவ் வேலை 1949-ம் வருஷ முடிவில் ஆரம்பிக்கப்பட்டு 1950-ம்ஹு பெப்ரவரி மாதத்தில் பூர்த்தியாயிற்று. அதற்குச் செலவான தொகை ரூ. 26,000. அதனால் 150 ஏக்கர் பூமியில் இரண்டாம் போக சாகுபடி செய்ய வசதி ஏற்பட்டது.

செங்கற்பட்டு தாலூகாவில் பாலாற்றிலிருந்து மெய்யூர் ஏரிக்கு ஜலம் கொண்டு செல்லும் கால்வாய்,

1946-ம் ஆண்டு நேர்ந்த வெள்ளத்தின் காரணமாக தூர்ந்து போயிற்று. அதன் மூலம் மெய்யூர் ஏரிக்கு ஜலம் போவது நின்றுவிட்டது. மக்களின் உழைப்பாலும் புல்டோஸர்களின் உதவியாலும் தூர்ந்துபோன கால்வாய் சீர்திருத்தியமைக்கப்பட்டது. அதற்கு ரூ. 23,900 செலவாயிற்று. அவ்வாறு சீர்திருத்தியமைக்கப்பட்ட கால்வாயின் மூலம் 1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் 100 ஏக்கர் பூமிக்கு இரண்டாம்போக சாகுபடிக்கு நீர்ப்பாசன வசதி கிடைத்தது. 200 ஏக்கர் பூமியில் முதல்போக சாகுபடி இப்போது நடந்து வருவதற்கு நீர்ப்பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது.

நான்கு வருஷ காலமாக பாலாற்றில் நீர் வறண்டு இருந்ததால் பிணையாற்றுக் கால்வாய் தூர்ந்து கிடந்தது. அதனால் பாலாற்றின் ஊற்றுக் கால்வாய்கள் புல்டோசர் மூலம் சீரமைக்கப்பட்டு நீர் பாய வசதி செய்யப்பட்டது. அதன் மூலம் இரண்டாம் போகப் பயிர் சாவியாய்ப் போவது தடுக்கப்பட்டது. 1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கும் ஜூலை மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் நீர்ப்பாசனவசதி கிடைக்கவே 30 ஏக்கர் பூமியில் சாகுபடி நடந்தது. இப்போது 100 ஏக்கர் பூமியில் முதல்போகச் சாகுபடி நடந்து வருகிறது. இதற்கு ரூ. 7,400 செலவாயிற்று.

ரூ. 11,200 செலவில் படலம் புலிப்பார் கோவில் கால்வாய் செப்பனிடப்பட்டது. விவசாயிகள் குடி மராமத்தின் கீழ் அவ்வேலையைச் செய்ய முடியாதென்று சர்க்காருக்குத் தெரிவித்தார்கள். அதனால், சர்க்காரே அவ்வேலையை ஏற்றுக்கொண்டு 2 புல்டோசர்களின் உதவியால் அக் கால்வாயை 6,000 அடி நீளம் வரையில் தூர்வாரி ஆழப்படுத்தினார்கள். அதனால் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்பட்டு 324 ஏக்கர் நிலத்தில் சாகுபடி வெற்றிகரமாக நடந்தது; பள்ளிப்பட்டு கால்வாய் கீழுள்ள நிலங்களுக்கும் பாசன வசதி கிடைத்தது.

திருவள்ளூர் தாலூகாவில் அல்லிக் குழி ஓடையி

லிருந்து சென்றுயன் பாளையம் ஏரிக்கு ஜலம் கொண்டு சென்ற கால்வாய் ரூ. 20,000 செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது. இதன் பயனாக 200 ஏக்கர் பூமிக்கு வருஷா வருஷம் நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.


செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த திருவள்ளூர் தாலூகாவில் பிசாத்தூர் கிராமத்துக்கு அருகில் ஆரணி ஆற்றுக்குக் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவது இத் திட்டத்தின் ஒரு அம்சமாகும். இந்த நீர்த் தேக்கத்தின் வலது, இடது புறங்களிலிருந்து இரு கால்வாய்கள் ஜலம் கொண்டு செல்லும். இந்த நீர்த்தேக்கம் கட்டப்படும் இடத்துக்கு 11 மைலுக்குக் கீழ் சுரட்டுப் பள்ளியில் அணைக்கட்டு ஒன்று கட்டப்படும். 14 மைல் நீளமுள்ள கால்வாய் ஒன்று இந்த அணைக்கட்டுடன் இணைக்கப்படும். (8 மைல் திருவள்ளூர் தாலூகாவிலும் 6 மைல் பொன்னேரி தாலூகாவிலும் செல்லும்) இத்திட்டம் நான்கு வருஷ காலத்தில் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் 2 அல்லது 3 வருஷ முடிவில் இக் கால்வாயின் மூலம் 11,200 ஏக்கர் பூமிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடும். வருஷந்தோறும் 4,000 டன் அதிகப்படியான உணவுத்தானியம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1951-ம் ஞு ஜூலை மாதம் 24-ம் தேதியன்று இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப விழா நடைபெற்றது.

மின்சார விநியோகம்

கடந்த ஐந்து வருஷ காலத்தில் மின்சார விநியோகம் திருவள்ளூர் பிர்க்காவைச் சேர்ந்த கிராமங்களுக்கு மாத்திரம் விஸ்தரிக்கப்பட்டது. ஈக்காடு, ஒண்டிக்காடு, கலியாணகுப்பம் முதலிய கிராமங்களுக்கு அதை விஸ்தரிக்க சர்க்கார் ரூ. 1,33,000, அங்கீகாரம் அளித்தனர். இந்த விஸ்தரிப்பு வேலை முடிவடைந்துவிட்டது. இதற்குச் செலவான மொத்த தொகை ரூ. 1,50,000.

திருவள்ளூர் பிர்க்காவில் சேலை கிராமத்துக்கு மின்சார வினியோகத்தை விஸ்தரிக்க இன்னொரு திட்டத்துக்குச்

சர்க்கார் அனுமதியளித்தனர். அதற்கு ரூ. 33,200 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. இத் திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டது. இக் கிராம வாசிகளுக்கு இப்போது மின்சார வசதி கிடைத்துள்ளது. இதற்குச் செலவான மொத்தத் தொகை ரூ. 34,267. சென்னை மின்சார ஸிஸ்டம் என்னும் சர்க்கார் ஸ்தாபனத்தின் மூலமாகவும் செங்கற்பட்டு ஜில்லாவின் ஒரு பாகத்துக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது.



201 வீடுகளுக்கும், 7 கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கும் மின்சாரம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

விவசாய வேலைகள் சம்பந்தமாய் 172 பம்பு செட்டுகளுக்கு மின்சார சக்தி வினியோகிக்கப்பட்டுள்ளது.

மின்சார உபயோக அபிவிருத்தி

செங்கற்பட்டு ஜில்லாவில் 1949–50-ம் ஆண்டில் 6,216 நபர்கள் மின்சார சக்தியை உபயோகித்துப் பயன் அடைந்து வருகிறார்கள். 1945–46-ம் ஆண்டில் மின்சார சக்தி உபயோகித்தவர்களின் எண்ணிக்கை 2,328 ஆகும். இப்போது 3,888 அதிகப்படியான நபர்கள் மின்சார சக்தியை உபயோகித்து வருகிறார்கள்.

செங்கற்பட்டு ஜில்லாவில் 1946–47-ஆம் ஆண்டில் வீட்டு உபயோகத்துக்காக 7 இடங்களிலும், கைத்தொழில் உபயோகத்துக்காக ஒரு இடத்திலும் விவசாய உபயோகத்

துக்காக 9 இடங்களிலும் மின்சார சக்தி சப்ளை செய்யப்பட்டது.

1947–48-ஆம் ஆண்டில் வீட்டு உபயோகத்துக்காக 41 இடங்களிலும் கைத்தொழில் உபயோகத்துக்காக 2 இடங்களிலும் விவசாய உபயோகத்துக்காக 47 இடங்களிலும் மின்சார சக்தி சப்ளை செய்யப்பட்டது.

1948–49-ஆம் ஆண்டில் வீட்டு உபயோகத்துக்காக 55 இடங்களிலும், கைத்தொழில் உபயோகத்துக்காக 2 இடங்களிலும் விவசாய உபயோகத்துக்காக 64 இடங்களிலும் மின்சார சக்தி சப்ளை செய்யப்பட்டது.

1949–50-ஆம் ஆண்டில் வீட்டு உபயோகத்துக்காக 68 இடங்களிலும், கைத்தொழில் உபயோகத்துக்காக 2 இடங்களிலும், விவசாய உபயோகத்துக்காக 39 இடங்களிலும் மின்சார சக்தி சப்ளை செய்யப்பட்டது.

1950–51-ஆம் ஆண்டில் வீட்டு உபயோகத்துக்காக 30 இடங்களிலும், விவசாயத் தொழில் உபயோகத்துக்காக 13 இடங்களிலும் மின்சார சக்தி வினியோகிக்கப்பட்டது.

இவ்வாறு செங்கற்பட்டு ஜில்லாவில் 5 வருஷகாலத்தில் 380 இடங்களில் மின்சார சக்தி வினியோகிக்கப்பட்டு வருகிறது.


1945–46-ம் ஆண்டில் இந்த ஜில்லாவில் 1,964,725 யூனிட் அளவு கொண்ட மின்சாரம் செலவாயிற்று. 1949–50-ம் ஆண்டில் செலவான மின்சார அளவு 4,937,894 யூனிட்டுகளாகும். 2,973,169 மின்சார யூனிட்டுகள் அதிகமாக செலவாகியுள்ளன.

ரஸ்தாக்கள், பாலங்கள்

உடலெங்கும் உதிரம் பாய்ச்சி உடலுக்கு உறுதி பயப்பது நரம்புகளின் தொழில். அந் நரம்புகளைப்போல் ஒரு நாட்டுக்குப் பயனளிப்பவை அங்குள்ள ரஸ்தாக்களே. ரஸ்தாக்கள் மூலம் நாட்டு மக்களின் போக்குவரத்து விருத்தியடைகிறது. பல நாட்டு மக்களும் ஒன்று கூடி அளவளாவுகின்றனர். வியாபாரம் பலத்து ஓங்குகிறது.

வியாபாரம் விருத்தியாகும் நாட்டில் செல்வம் கொழிப்பதற்கு என்ன தடை!

இந்த ஜில்லாவில் காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்பூதூர், திருவள்ளூர், திருப்போரூர், முதலிய புண்ய க்ஷேத்திரங்களும், பல்லவ ஆட்சியின் நாகரிகத்துக்கு அத்தாட்சியாக சிற்ப வேலைப்பாடுகள் அமைந்து சிறப்புற்று விளங்கும் மகாபலிபுரமும், சதுரங்கபட்டணம் முதலிய புராதன ஸ்தலங்களும் இருப்பதால் வாணிபம், உல்லாசப் பிரயாணம், க்ஷேத்திர யாத்திரை முதலியவைகளுக்காக போக்குவரத்து அதிகமாக இருந்து வருகிறது.



ஆயினும், இந்த ஜில்லாவுக்குத் தனிப்பட்ட ஆதாயம் ஒன்றுமில்லை; சென்னை ராஜ்யத்தைச்சேர்ந்த இதர ஜில்லாக்களைப்போல் சாலை மர மகசூல், சந்தைகள், பரிசல் துறைகள் முதலியவற்றிலிருந்து அதிக வருமானமும் இல்லை. ஆனால், கல்வி, சுகாதாரம், சாலைகள் பராமரிப்பு முதலிய அம்சங்களில் செலவுகள் மட்டும் அதிகம்.

இந்த நெருக்கடியான பொருளாதார நிலைமையிலும் கூட இந்த ஜில்லாவில் கடந்த நான்கு வருஷகாலத்தில் பல துறைகளில் பல வேலைகள் நடந்திருக்கின்றன.

தேசிய சாலைகள், மாகாண சாலைகள், பிரதம ஜில்லா சாலைகள் முதலியன சர்க்காரின் ரஸ்தாக்களாகும். இவற்றின் மொத்த நீளம் சற்றேறத் தாழ 650 மைல். இவைகள் சம்பந்தமாய் சுமார் 55 லட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை நமது ஜனநாயக சர்க்கார் அங்கீகரித்துள்ளார்கள்.

அபிவிருத்தி திட்டங்கள்

செங்கற்பட்டுக்குச் சமீபத்தில் பாலாற்றின்மீது பாலம் அமைப்பதற்குச் சுமார் 21 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் இடையே 38-வது மைலுக்கப்பால் உள்ள பாலாற்றின் மீது இப்பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. 1951-ம் வருஷம் மே மீ 9உ யன்று இப்பாலத்தின் அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. இப்பாலம் கட்டி முடிந்துவிட்டால் வட நாட்டையும் தென் நாட்டையும் இணைக்கும் ஜீவநாடி போன்ற 'வட மகா சாலை' கல்கத்தாவிலிருந்து கன்னியாகுமரி வரையில் தங்கு தடையின்றி போக்கு வரத்துக்கொரு முக்கிய சாதனமாக விளங்கும். 2,300 அடி அகலமுள்ள பாலாற்றின் மீது கட்டப்படும் இப்பாலம் 23 கணவாய்கள் கொண்டது. அக்கணவாய்களில் ஒவ்வொன்றின் அகலம் 90 அடி. இரண்டு வருஷ காலத்தில் இப்பாலம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சென்னையிலிருந்து தெற்கு தேசீய சாலையில் தாம்பரம் வரையிலும், வடக்கு தேசீய சாலையில் ரெட்ஹில்ஸ் வரையிலும், திருவள்ளூர் டவுனிலிருந்து திருவள்ளூர் (துலுக்கன் சத்திரம்) ரயில்வே நிலையம் வரையிலும், காஞ்சீபுரம் — வந்தவாசிரோட்டில் சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரம் வரையிலுமாக 24 மைலுக்கு சிமிட்டி — கான்கிரீட் ரோட்டுகள் அமைத்தல்.

இதற்குச் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 25 லட்சம்.

காஞ்சீபுரம் முனிசிபல் எல்லையில் செங்கற்பட்டு—காஞ்சீபுரம் ரோட்டை உயர்தர தார் ரோட்டாக அமைப்பதற்கு ரூ. $3\frac{1}{2}$ லட்சம் செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

திருவொற்றியூர் — பொன்னேரி ரோட்டை ஜல்லி ரோட்டாக அமைப்பதற்குச் செலவாகும் தொகை ரூ. 1 லட்சம்.

வாலாஜா, ஐயம்பேட்டை, முத்தியால் பேட்டை செய்யூர், மதுராந்தகம், செங்கற்பட்டு, திருவள்ளூர், சத்திய வேடு, பொன்னேரி, திருமழிசை, குண்ணத்தூர் முதலிய கிராமங்களின் எல்லைக்குள் செல்லும் பிரதம ரஸ்தாக் களுக்கு தார் ஊற்றி தூசி இல்லாமல் செய்தல்.

இவற்றுள் மேற்கூறிய பாலாற்றுப் பாலம் தவிர மற்ற வேலைகள் யாவும் முடியுந் தருவாயில் இருக்கின்றன.

ஜில்லா போர்டுக்குச் சொந்தமான ரஸ்தாக்கள் சுமார் 800 மைல் நீளமுள்ளவை. இந்த ரோட்டுகளின் அபிவிருத் திக்கும் புது ரஸ்தாக்கள் அமைப்பதற்கும் சுமார் ரூ. 9 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைகளுள் முக்கியமானது பலகை வாராவதி என வழங்கும் லாட்டிஸ் பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் ஒன்று அமைத்தல். திருவான்மியூருக்கு அருகிலுள்ள பாப்பாஞ் சாவடியில் பக்கிங்ஹாம் கால்வாய்மீது புதிதாகக் கட்டப்பட்ட இப் பாலத்தை 1951-ம்௵ மேமீ 11௳யில் திறந்து வைத்தார்கள். இப்பாலம் பொது மக்களின் நீண்ட காலத் தேவையைப் பூர்த்தி செய்வதொன்றாகும். இப்பாலம் அமைக்கப்படுவதற்குமுன், மகாபலிபுரத்துக்கு, செங்கற் பட்டு, திருக்கழுக்குன்றம் வழியாகப் போகவேண்டியது. இப்பாதை ஒரு சுற்றுப்பாதை. இதன் நீளம் சென்னையி லிருந்து 55 மைல் ஆகும். மேற்படி பாலம் கட்டி முடித்த பின் மகாபலிபுரத்துக்குத் திருப்போரூர் வழியாக ஒரு நேர் பாதையின் மூலம் செல்லும் வசதி ஏற்பட்டுள்ளது. இந்த நேர்பாதையின் நீளம் 37 மைல்கள். இப்பாலம் கட்டு வதற்கு ரூ. 98,000 செலவாயிற்று. சென்னை சர்க்கார் இவ் வேலைக்கான முழு மான்யத் தொகையையும் செங்கற்பட்டு ஜில்லா போர்டுக்கு வழங்கியுள்ளார்கள்.

மேற்படி பால வேலையயன்றி, ஜில்லா போர்டு ரஸ்தாக்களில் முக்கியமான 43 ரஸ்தாக்களை ஜல்லி அல்லது கிராவல் கொண்டு அபிவிருத்தி செய்யவும், 28 புதிய ரஸ்தாக்கள் அமைக்கவும் பல பாலங்களைச் செப்பனிடவும் ஏற்பாடாயிருக்கிறது.

பஞ்ச நிவாரணத்துக்கு அனுகூலமாக புது ரஸ்தாக்கள் அமைக்க சென்னை சர்க்கார் இரண்டு தவணைகளில் ரூ. 4½ லட்சத்துக்கு அனுமதி அளித்துள்ளார்கள். இத் திட்டத்தின் கீழ் 140 மைல் நீளமுள்ள புது ரோட்டுகள் அமைக்கப்படும். இந்த ரோட்டுகளில் சுமார் 100 மைல் நீளத்துக்கு ரோட்டுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

புது ரஸ்தாக்கள் அமைக்கும் விஷயத்தில் போதுமான நிலம் கிடைக்காவிடில் தாமதம் ஏற்படும். ஆனால் செங்கற்பட்டு ஜில்லாவிலிருக்கும் பட்டாதார்கள் தாமாகவே ஜில்லாவின் நன்மையைக் கருதி, புது ரஸ்தாக்களுக்கு வேண்டிய நிலங்களைச் சர்க்காருக்கு ஒப்படைக்க முன் வந்தார்கள். அது பெரிதும் போற்றத்தக்கது. பட்டாதாரின் ஒத்துழைப்பால் 140 மைல் நீளத்துக்கு 61 புதிய ரோட்டுகள் துரிதமாக அமைக்கப்பட்டு வருகின்றன.

போக்கு வரத்துச் சாதனங்கள்

சென்னபட்டணத்துக்கு அருகில் இருப்பதால் செங்கற்பட்டு ஜில்லா நாளுக்கு நாள் பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து முக்கியத்துவம் பெற்றுவிளங்குகிறது.

இந்த ஜில்லாவில் பல போக்குவரத்து மார்க்கங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதிகள் குறைந்துள்ள இடமெல்லாம் அதிகப்படியான பஸ்கள் ஓட அனுமதிக்கப்பட்டுள்ளன.

சில முக்கிய புது பஸ் மார்க்கங்கள் பின்வருமாறு:—

கனகம்மாள்சத்திரம், திருவள்ளூர் ஆகியவற்றின் மார்க்கமாகத் திருத்தணிகையிலிருந்து சென்னை நகருக்கும், சென்னை நகரிலிருந்து திருத்தணிகைக்கும் போகும் வழி;

சென்னை நகரிலிருந்து பெரு நகருக்கும், பெரு நகரிலிருந்து சென்னைக்கும் போகும் வழி;

கும்மிடிபூண்டி வழியாகச் சென்னையிலிருந்து எளாவூருக்கும், எளாவூரிலிருந்து சென்னைக்கும் போகும் மார்க்கம்;

சென்னையிலிருந்து திருநீர்மலைக்கும், திருநீர்மலையிலிருந்து சென்னைக்கும் போகும் வழி;

சென்னையிலிருந்து புதுச்சேரிக்கும், புதுச்சேரியிலிருந்து சென்னைக்கும் போகும் மார்க்கம் ;

திருவள்ளூரிலிருந்து காஞ்சீபுரத்துக்கும், காஞ்சீபுரத்திலிருந்து திருவள்ளூருக்கும் போகும் வழி ;

திருவள்ளூரிலிருந்து பொன்னேரிக்கும், பொன்னேரியிலிருந்து திருவள்ளூருக்கும் போகும் மார்க்கம் ;

சென்னையிலிருந்து ஊத்துக்கோட்டைக்கும், ஊத்துக்கோட்டையிலிருந்து சென்னைக்கும் போகும் மார்க்கம் ;

சென்னையிலிருந்து மாஞம்பதிக்கும், மாஞம்பதியிலிருந்து சென்னைக்கும் போகும் வழி ;

இன்னும் காஞ்சீபுரம், திருவள்ளூர் முதலிய பட்டணங்களிலும், திருவள்ளூர் ரயில் நிலையத்திலிருந்து ஈக்காடு வரையிலும் புதிதாக பஸ்கள் விட அனுமதித்திருக்கிறார்கள்.

குழாய்க் கிணறுகள்

செங்கற்பட்டு ஜில்லாவில் நீர்ப்பாசன வசதிபெற நமது ஜனநாயக சர்க்கார் பல இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்துள்ளார்கள். அவைகள் பின்வருமாறு :

காஞ்சீபுரம் தாலூகா, சிறு காஞ்சிபாக்கம் கிராமம்.

இக் கிராமத்தில் தோண்டப்பெற்ற குழாய்க் கிணற்றின் மூலம் ஒரு மணி நேரத்துக்கு 10,800 காலன் விகிதம் தண்ணீர் கிடைக்கிறது. இதனுல் சுமார் 10 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

பொன்னேரி தாலூகா, தண்டராம்பாளையம் கிராமம்.

இக் கிராமத்தில் ஒரு குழாய்க் கிணறு தோண்டப்பெற்றது. இதன் மூலம் ஒரு மணி நேரத்துக்கு 12,000 காலன் தண்ணீர் கிடைக்கிறது. இதனுல் சுமார் 9 ஏக்கர் பூமிக்கு ஜல வசதி ஏற்பட்டுள்ளது.

பொன்னேரி தாலூகா, அத்திப்பேட்டை கிராமம்.

அத்திப்பேட்டை கிராமத்தில் 50½ அடி ஆழத்திற்கு ஒரு குழாய்க் கிணறு தோண்டப்பெற்றது. அக் குழாய்க் கிணற்றில் ஒருமணி நேரத்தில் 10,800 காலன் விகிதம்

ஜலம் கிடைக்கிறது. அதன் மூலம் 7 ஏக்கர் பூமிக்கு நீர் பாய்ச்சலாம்.

பொன்னேரி தாலூகா, நல்லூர் கிராமம்.

நல்லூர் கிராமத்தில் 87 அடி ஆழத்தில் ஒரு குழாய்க் கிணறு குடைந்தெடுக்கப்பட்டது. அதில் நல்ல ஜல ஊற்று உண்டு. அக் குழாய்க் கிணற்றில் ஒருமணி நேரத்துக்கு 18,000 காலன் தண்ணீர் கிடைக்கிறது. அதனால் 5½ ஏக்கர் பூமிக்கு நீர்ப்பாசனம் கிடைக்கிறது.

நீர் மார்க்கங்கள்

நீர் மார்க்கங்கள் இருவகைப்படும். அவையாவன—

(1) இயற்கை நீர் மார்க்கம்.

(2) செயற்கை நீர் மார்க்கம்.

கடல், ஆறு, ஏரி, ஆகியவை இயற்கை நீர் மார்க்கங்கள். வியாபார, நீர்ப்பாசன வசதிகளுக்காக மக்கள் வெட்டும் கால்வாய்கள் செயற்கை நீர் மார்க்கங்களாகும்.

சற்றேறத்தாழ 150 வருஷங்களுக்குமுன், தென்னிந்தியாவில் செயற்கை நீர் மார்க்கப் போக்குவரத்து இல்லையென்றே சொல்லலாம். செயற்கை நீர் மார்க்கங்களை, ஆங்கிலேயர் தங்கள் வியாபார வசதியின் பொருட்டு விருத்தி செய்தனர்.

நமது சென்னை ராஜ்யத்தில், செயற்கைக் கால்வாய்களுள் மிகவும் நீளமானது பக்கிங்ஹாம் கால்வாய். இதன் நீளம் 258 மைல். கோதாவரி டெல்டாவின் வடகோடிப் பகுதியையும், சென்னை நகரத்தையும் இணைத்து சென்னைக்குத் தெற்கே 62 மைல் தூரம் வரையில் பக்கிங்ஹாம் கால்வாய் செல்கிறது. அதாவது, இக் கால்வாய் செங்கற்பட்டு ஜில்லாவில் ஆரம்பித்து கோதாவரி டெல்டாவின் வடகோடிப் பகுதிவரையில் செல்கிறது.

இக்கால்வாயின் வழியே குறைந்த செலவில் வாணிபப் போக்குவரத்து நடக்கிறது. கடற்கரையோரத்திலுள்ள உப்பங்கழிகள், பள்ளங்கள், ஆறுகளின் முகத்துவாரங்கள் ஆகியவற்றின் வழியே செல்கிறது.

இக்கால்வாயை வெட்டி முடித்துவைக்க 100 வருஷ காலமும் 90 லட்சம் ரூபாயும் ஆங்கில சர்க்காருக்குப் பிடித்தன. 19-வது நூற்றாண்டின் இறுதியில்தான் இக்கால்வாய் வேலை முடிந்தது.

கோதாவரி டெல்டாவிலுள்ள கால்வாய்கள் 493 மைல் நீளமும், கிருஷ்ணு டெல்டாவிலுள்ள கால்வாய்கள் 300 மைலுக்கு மேற்பட்ட நீளமும் உள்ளன. இக்கால்வாய்கள் யாவும் ஒன்றேடொன்று இணைந்து சென்னை நகரத்தோடு நேர்முகத் தொடர்புக்கு வசதி செய்கின்றன.

இக்கால்வாயின் வழியாகப் பல லட்சக்கணக்கான டன் வாணிபப் பொருள்கள் படகுகளில் ஏற்றிச் செல்லப் படுகின்றன. அப்படகுகளில் மக்களும் பிரயாணஞ் செய்கிறார்கள். கிளிஞ்சல், விறகு, நிலக்கடலை, நெல் முதலிய உணவுத் தானியங்கள் படகுகளில் ஏற்றப்பட்டு இக்கால்வாயின் மூலம் பல ஊர்களுக்குச் செல்கின்றன. பக்கிங்ஹாம் கால்வாயும், இது போன்ற இதர கால்வாய்களும், "கால்வாய்கள் பொது நீர்த்துறைகள் சட்டத்தின்" கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

யுத்த பிற்காலத்தில் ஏற்படும் இயந்திரத் தொழில் வளர்ச்சியையொட்டி, குறிப்பாகச் சில பொருள்களைச் சிக்கன செலவில் ஏற்றிச் செல்லத்தக்க வசதிகள் பெரிதும் தேவைப்படும். அதற்கு உள் நாட்டுக் கால்வாய்கள் மிகவும் அவசியமாகும்.

கல்வி மறுமலர்ச்சி

இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமல் நடக்கத் தொடங்கிய பத்து வருஷ காலத்திற்குள், எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயது முடியும் வரையில் இலவசக் கட்டாயக் கல்வி போதிக்க அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—45

நமது நாடு உலகிலுள்ள நாடுகளுள் தலை சிறந்து விளங்க வேண்டுமாயின் நம் நாட்டு மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாய் இருக்கவேண்டும். அவர்கள் பெறும் கல்வி நம் நாட்டின் நிலைமைக்கேற்றவாறு அமைந்திருக்க வேண்டுமென்பது அவசியமாகும்.

கல்வி கண்ணைக்கொடுக்கும்; கல்வியறிவில்லாதார் கண்ணில்லாதார் எனப்படுவர். இவ்வுண்மையை உணர்ந்த நமது ஜனநாயக சர்க்கார் படிக்கும் வயது வந்த குழந்தைகளுக்கு 64 கிராமப் பிரதேசங்களில் கட்டாயக் கல்வியோத ஏற்பாடுகள் செய்து, அவற்றுக்குரிய பணச் செலவையும் ஏற்றுக்கொண்டார்கள். இது காரணமாக, பல பள்ளிக்கூடங்கள் ஆங்காங்குத் திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலைக் கட்டிடங்களும் கொட்டகைகளும் அமைக்கப் பட்டன. அமைக்கப்பட்டும் வருகின்றன.

அடிப்படைக் கல்வி

நமது நாட்டுச் சுதந்திரச் சிற்பியும் தேச பிதாவுமாகிய காந்தியடிகள் நம்முடைய நாட்டுக்குரிய அடிப்படைக் கல்வி முறையை வகுத்தார். இந்திய மக்கள் அதையேற்றுப் பின்பற்றி நடக்க முன் வந்துளர். எதிர் காலத்தில் நமது நாடு கல்வித் துறையில் தலையோங்கிநிற்பதில் தடையு முண்டோ?

தொழில் மூலம் கல்வியளிப்பதே இப்புதிய முறை யாகும். இக் கல்விமுறையே நமது நாட்டுக்கு உகந்தது என்பதை முதன் முதல் நமக்கு அறிவுறுத்தியவர் காந்தி யடிகளே.

இப்புது முறையின் தத்துவம் பின்வருமாறு :—

ஆரம்ப வகுப்பு முதல் உயர்ந்த வகுப்புவரையில் எல்லாப் பாடங்களையும் தாய் மொழி மூலமாகவே போதித்தல்.


மாணவ, மாணவிகளின் உடல் நிலைக்கும் அறிவு வளத்திற்கும் ஏற்பக் கைத்தொழில் வாயிலாகக் கல்வி கற்பித்தல்; உடல் உழைப்பின் மூலமாகக் கல்வி கற்பிக்கப் படின் அக்கல்வியைக் கற்கும் மாணவ, மாணவிகளின் உணர்வு பண்பட்டு, மனம் வளம்பெற்று விளங்குவது திண்ணம்.

அந்தந்த அடிப்படைக் கல்வி சாலையின் மாணவ மாணவிகள் உழைத்து உற்பத்தி செய்யும் பொருள் களைத் தக்க விலைக்கு விற்று, அவ்விற்பனைத் தொகையைக் கொண்டு அக்கல்விசாலை ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங் கல்; அதாவது ஒவ்வொரு பாடசாலையும் சுயதேவை பூர்த்தி செய்வதாய் இருக்கவேண்டும். அப் பாடசாலைகளை, கைத் தொழில் மூலம் மாணவ, மாணவிகளுக்குப் பயிற்சியளித்து அவர்களுடைய ஆற்றலைப் பெருக்கக்கூடிய பயிற்சி நிலையங் களாகவே கருதவேண்டும்.

இப்புதிய கல்விமுறையின் வாயிலாக மாணவ மாணவிகள் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கைக்குத் தகுந்த கல்வி ஓதப்படுகிறது. அப்பாடசாலைகளில் பயிற்சி பெற்று வரும் காலம் வரையில், மாணவ, மாணவிகளின் உள்ளத்தில் மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் மேலோங்கிநிற்கும். கல்வி போதனை முடிந்த பின்னர் பயிற்சிபெற்ற மாணவ மாணவிகள் சமூகத்தில் சுதந்தரமாகவும் சமத்துவத்துடனும் வாழ வழியேற்படுகிறது.

நூல் நூற்பது, வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது, வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வது, காலத்தை விணிற் கழிக்காமல் ஒரு தொழிலில் ஈடுபட்டு உழைப்பது, தோட்டங்களைப் பரிபாலிப்பது ஆகிய இந்த அம்சங்கள் யாவும் அடிப்படைக் கல்வியில் அமைந்திருக்கின்றன.

காந்தியடிகள் நமக்கு வழங்கியுள்ள இக் கல்வி முறை தற்போது இந்த ஜில்லாவில் 16 பாடசாலைகளில் ஓதப்பட்டு வருகிறது. இந்த அடிப்படைக் கல்வியை எல்லாப் பாடசாலைகளிலும் புகுத்த நமது சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார்கள்.



முதியோர் கல்வி

நமது ராஜ்ய கிராமங்களில் 90 சத விகித மக்கள் கல்வி வாசனை அறியாது வறிதே காலங்கழித்து வருகின்றனர். இவர்களைப் பெற்றோர் இவர்களுக்குச் சின்னஞ் சிறுவயதில் கல்வி கற்பிக்க ஆர்வங்கொள்ளவில்லை. அப்போதிருந்த

ஆங்கில ஆட்சியாளரும் அத்தகையோர் கல்வி பெறவேண்டு மென்று அக்கறை காட்டவுமில்லை. நமது ராஜ்யத்தில் கட்டாயக் கல்வி ஏற்பட்டிருந்தால் இப்போது படியாதவர் சத விகிதம் இவ்வளவு இராது.

பெரும்பாலான மக்களுக்குக் கல்வி யறிவில்லாமையை யுணர்ந்த நமது சர்க்கார் உடனடியாக 13 வயதிலிருந்து 40 வயது வரையுள்ள முதியோர்களுக்குக் கல்வி யோது விக்கத் துணிந்தார்கள்.

செங்கற்பட்டு ஜில்லாவில் பல விடங்களில் முதியோருக் குக்கல்வி ஓதப்பட்டு வருகிறது. இத் துறையில் நமது ராஜ்ய சர்க்காருக்கு மத்திய அரசாங்கத்தின் பணவுதவியுண்டு. இந்த ஜில்லாவில் 28 முதியோர்க் கல்வி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. முதியோருக்குக் கல்வி ஓத 23 ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கின்றனர். அவர்களுள் பதின்மர் முதியோர் கல்வி சாலைகளில் ஆசிரியர்களாக அமர்த்தப்பட் டுள்ளனர். வேலையில் அமர்த்தப்படாமல் இருக்கும் ஆசிரியர் அத்தகைய பாடசாலைகளில் ஆசிரியர்களாக அமரவும் அல்லது தாங்களே முதியோர் கல்விச் சாலைகளைத் திறந்து வைக்கவும் கோரப்பட்டுள்ளனர். செங்கற்பட்டு ஜில்லாவில் ஒவ்வொரு தாலூகாவிலும் முதியோர் கல்வி கமிட்டிகள் நியமிக்கப் பெற்றுள்ளன. முதியோர் கல்வி திட்டத்தை விஸ்தரிக்கும் பொருட்டு செங்கற்பட்டு ஜில்லா கலெக்டரின் தலைமையின் கீழ் ஒரு ஜில்லா கமிட்டி நிறுவப் பட்டுள்ளது.

உயர்தரக் கல்வி

சுமார் 10,000 மக்கள் வசிக்கும் பெரிய கிராமங்களில் உயர்தரப் பாடசாலைகள் திறக்கப்பட்டு வருகின்றன. கட்டாயக் கல்வி திட்டத்தின் காரணமாக கல்வி ஓதிவந்த மாணவ மாணவிகளுக்கு இன்னும் மேல் படிப்பு படிக்க ஆவல் ஏற்படுவது சகஜந்தானே. அத்தகைய ஆவல் கொண்டுள்ள மாணவ மாணவிகளுக்கு உயர்தரக் கல்வி அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந் நோக்கத்துடன், வாலாஜாபாத், சத்தியவேடு, ஸ்ரீபெரும்பூதூர். கருங்குழி, பெரியபாளையத்து ஆரணி, கோவூர், பெருநகர், ஊத்துக்கோட்டை, எலப்பாக்கம், திருமழிசை, அச்சரப்பாக்கம், திருக்கழுக்குன்றம், செய்யூர், குண்ணத்தூர், கடம்பத்தூர் ஆகிய இடங்களில் உயர் நிலைப் பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பெரிய காஞ்சீபுரத்தில் ஒன்றும், சின்ன காஞ்சீ புரத்தில் ஒன்றுமாக இரண்டு முனிசிபல் உயர்நிலைப் பாட சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. சர்க்கார் மான்ய உதவிகொண்டு செங்கற்பட்டில் சிறுமிகளுக்கென உயர் நிலைப் பாடசாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாலாஜாபாத்திலுள்ள ஸ்தல ஸ்தாபன ஹைஸ்கூலில் விவசாயக் கல்வியும், செங்கற்பட்டிலுள்ள ஸெய்ன்ட் ஜோஸப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 'செக்ரிடேரியல்' கல்வியும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

குருடர்களுக்கான பாடசாலை

கண்ணில்லாத சிறுவர் சிறுமியர்களுக்காக ஸ்தாபிக்கப் பட்ட 'விக்டோரியா மெமோரியல்' பாடசாலையை (பூவிருந்தவல்லியில் இருப்பது) நமது சர்க்கார் ஏற்று நடத்தி வருகின்றனர்.

திரூரில் சர்க்கார் அடிப்படைக் கல்விப் பாடசாலை யொன்றைத் திறந்து வைத்துள்ளனர். அப்பாடசாலை ரூ. 1,50,000 செலவில் கட்டப் பெற்றுள்ளது. இங்கு 80 ஆசிரியர்களுக்கு அடிப்படைக் கல்விப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. திரூருக்குச் சுற்றுப் புறத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளை ஆதாரக்கல்வி நிலையங்களாக மாற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஜில்லாவிலுள்ள கல்வி தணிக்கை அதிகாரிகள் ஆதாரக் கல்விப் பயிற்சி பெறுகிறார்கள்.

மதுராந்தகம் தாலூகாவில், மாம்பாக்கம் என்னும் இடத்தில் ஆதாரக் கல்விப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்க ஏற்பாடாகி வருகிறது.

ரெட்டியாபட்டி அடைக்கல மாணவ விடுதியொன்று அனாதைப் பிள்ளைகளுக்கென காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. இவ் விடுதிக்கு சர்க்கார் மான்யம் வழங்கு கின்றனர்.

இந்த ஜில்லாவில் மக்கள்சர்க்கார் பதவி ஏற்றபோது ஆரம்பப் பாடசாலைகளில் 101,000 மாணவ, மாணவிகள் கல்விகற்று வந்தனர். இப்போது அம்மாணவ மாணவி களின் எண்ணிக்கை 114,000 ஆக உயர்ந்துள்ளது.

இங்குள்ள இளஞ் சிறுவர் சிறுமியருக்கு குடிமைப் பயிற்சி, சாரண இயக்கப் பயிற்சி, முதல் உதவிப் பயிற்சி, உடற் பயிற்சி, பந்தயப் போட்டிகள், பற்பலத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

காஞ்சீபுரத்தில் நமது சர்க்காரின் மான்ய உதவியைக் கொண்டு பச்சையப்பன் கல்லூரி ஒன்று சமீப காலத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தொழில் நூணுக்கச் சர்வ கலாசாலைக் கல்லூரியொன்று கிண்டியில் ஸ்தாபிக்கப்பட் டுள்ளது. அதற்கும் நமது சர்க்கார் மான்யம் வழங்கு கின்றனர்.

சிறுபான்மையோருக்குக் கல்வி உதவி

பொதுஜன சர்க்காரின் ஆட்சியில் ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு விசேஷ கல்விச் சலுகைகள் அளிக்கப் பட்டு வருகின்றன; உயர்நிலைக் கல்வி முறை சீர்திருத்தம் பெற்றுள்ளது; ஆங்கில மொழிக்குப் பதிலாகப் பிரதேச மொழிகளில் கல்வி போதிக்க வழி கோலப்பட்டுள்ளது; ஆசிரியர்களுக்குரிய சம்பள விகிதமும் உயர்த்தப்பட்டிருக் கிறது. பிற்போக்கு வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவி களுக்கு, சென்னை கல்வி விதிகளுள் 92-வது விதியின் பிரகாரம் விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த ஜில்லாவில் ஆரம்பக் கல்வி சாலைகளில் சேர்ந்து படிக்கும் ஹரிஜன மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 2,307-க்கு உயர்ந்துள்ளது. இப் பாடசாலைகளில் 324 முஸ்லீம் சிறுவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொது சுகாதாரம்

மக்களின் போஷாக்கு, வாழ்க்கைத்தரம் முதலியவற்றை உயர்த்தி, பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதை, அரசாங்கம் தனது முதன்மையான கடமைகளுள் ஒன்றாகக் கருதும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—47

உலக இன்ப நுகர்ச்சிக்கு நம்முடல் உரம் பெற்றிருக்க வேண்டும். நோய் நம்மை அணுகவிடலாகாது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பதை எவர் மறுத்துரைக்கக் கூடும். நோய் நொடிகளின்றி வாழும் மக்களை உடைய நாட்டை நாம் சுவர்க்க பூமிக்கு ஒப்பிடலாம்.

இவ்வுண்மையை யுணர்ந்த நமது ஜன நாயக சர்க்கார் பதவி ஏற்றவுடன், நமது ராஜ்ய மக்களின் சுகாதார விஷயமாய் அக்கறை காட்டலாயினர்.

குடி தண்ணீரில் உள்ள விஷக் கிருமிகள் மூலம் மக்களுக்குப் பலவித நோய்கள் காணுவது யாவரும் அறிந்த விஷயம். அதனால் நமது சர்க்கார் இந்த ஜில்லாவில் உள்ள

குடி தண்ணீர் நிலைகளை மக்கள் அசுத்தப்படுத்துவதைத் தடுக்கவும், தண்ணீரைப் பாதுகாக்கவும் வேண்டி 20 காவற்காரர்களை நியமித்துள்ளார்கள். அதைப் போலவே பெரிய பஞ்சாயத்துக்கள் தங்கள் ஆதீனத்தில் இருக்கும் குடி தண்ணீர் நிலைகளைப் பாதுகாத்து வருகின்றன.

கிராமங்களில் தண்ணீர்ப் பஞ்சத்தைத் தடுக்க 1948-ம் ஆண்டில் நமது சர்க்கார் 5 வருஷத் திட்டமொன்றைத் தயாரித்தார்கள். அத்திட்டத்தின் பிரகாரம் குடி தண்ணீர் கிடைக்காத கிராமங்களின் ஜாபிதா ஒன்று தயாரிக்கப்பட்டது. எங்கெந்தக் கிராமங்களுக்குக் குடி தண்ணீர் அவசியமாக இருக்கிறதோ அக்கிராமங்களில் முதன்முதலாக கிணறுகள் தோண்ட வேண்டுமென்று நமது சர்க்கார் திட்டமிட்டு, தமது சொந்த செலவில் அநேக கிராமங்களில் கிணறுகள் தோண்டி வைத்துள்ளார்கள். கிணறுகளை வெட்டுவதற்கான நிலங்களைச் சுகாதார இலாகாவினர் பரிசோதித்து அங்கீகாரம் அளித்தனர். ரெவினியூ இலாகாவினர் கிணற்று வேலைகளைத் தொடர்ந்து நடத்தினர்.

சர்க்காரின் ஐந்து வருஷத் திட்டத்தின்படி இந்த ஜில்லாவில் குடி தண்ணீருக்காக 671 கிணறுகள் வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 360 கிணறுகள் கட்டிப் பூர்த்தியாயின. அவற்றைக் கட்டி முடிக்கச் செலவான மொத்தத் தொகை ரூ. 8,28,000 ஆகும். இன்னும் 73 கிணற்று வேலைகள் நடந்து வருகின்றன.

கர்ப்பிணிகள், சிசுக்கள் ஆகியோரின் சம்ரக்ஷணைக்கான திட்டம் இந்த ஜில்லாவெங்கும் விஸ்தரிக்கப்பட்டு அதற்கான 12 நிலையங்கள் ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இப்போது இன்னும் 9 நிலையங்கள் அதிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான மக்கள் இந்நிலையங்களின் சேவையால் பயனடைந்துள்ளார்கள். புதிதாக ஒரு லேடி டாக்டர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மாதத்துக் கொருமுறை இந்நிலையங்களை மேற் பார்வையிட்டுவருகிறார். ஒவ்வொரு நிலையத்திலும் ஏழைக் குழந்தை

களுக்கும் தாய்மாருக்கும் பசும்பால் இலவசமாக ஏற்பா டாயிருக்கிறது.

மலேரியா நிவாரணம்

பக்கிங்ஹாம் கால்வாய் ஓரத்திலுள்ள தோணி ரேவி லும், பழவேற்காட்டிலும் பெருவாரியான மக்களுக்கு முறைக் காய்ச்சல் ஏற்படுகிறது. இந்த நோயைக் கட்டுப் படுத்த சர்க்கார் முயற்சி எடுத்து வருகின்றனர். இதற் காக ஒரு விசேஷ சுகாதார இன்ஸ்பெக்டர் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் எண்ணூரில் தங்கிப் பணியாற்றி வருகிறார்; கொசுக்களைக் கொல்லும் முறைகளைக் கையாண்டு வருஷந் தோறும் 1,300-க்குக் குறையாத மக்களுக்கு இலவசமாக கொய்னா மருந்து விநியோகிக்கிறார். காட்டுப்பள்ளி வரையில் இந்நோய் கட்டுப்படுத்தப்பட் டுள்ளது. இக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை இதர இடங் களுக்கு விஸ்தரிக்க சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இந் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு D.D.T. மருந்தைத் தெளிப் பதும், கொய்னா மருந்தை உள்ளுக்குக் கொடுப்பதும் அநுகூலமளித்து வருகின்றன.

மேக நோய்த் தடுப்பு

இந்த ஜில்லாவைச் சேர்ந்த ஆலந்தூர், உத்திரமேரூர், திருவொற்றியூர், ஸ்ரீ பெரும்பூதூர் என்னும் மேஜர் பஞ்சா யத்துப் பிரதேசங்களில், புதுக்கோட்டையிலுள்ள பிரதேச மலேரியா நிபுணர் மேக நோய்த் தடுப்பைப் பற்றிப் பரி சீலனை நடத்தி வருகிறார். ஷை பஞ்சாயத்துக்கள் எங் கெங்குத் தேவையோ அங்கெல்லாம் 'பீல்ட் அஸிஸ்டெண்டு களை' (Field Assistants) நியமித்து, மேக நோய், மலேரியா முதலிய வியாதிகளைத் தடுப்பதற்காக அவர்களுக்குத் தேவையான டி.டி.டி. மருந்துகளையும், கொய்னாவையும் அவை சம்பந்தமான உபகரணங்களையும் கொடுத்து உதவி யுள்ளன.

இந்த ஜில்லாவிலுள்ள மக்கள் வைத்திய உதவி பெற

ஆங்காங்கு ஆஸ்பத்திரிகளும், வைத்திய சாலைகளும் இருந்து வருகின்றன. இவைகள் மக்கள் தேவைக்குக் குறைவாய் இருப்பதை யுணர்ந்த நமது ஜனநாயக சர்க்கார் இன்னும் பல ஆஸ்பத்திரிகளும் வைத்திய சாலைகளும் நிறுவ ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இப்போது பணியாற்றி வரும் ஆஸ்பத்திரிகளில் பலவற்றை அபிவிருத்தியும் செய்து வருகிறார்கள். வியாதியஸ்தருக்குத் தேவையான படுக்கைகள் அதிகமதிகமாக ஆஸ்பத்திரிகளில் அமைக்கப்படுகின்றன. நவீன சஸ்திரக் கருவிகளும், மருந்து வகைகளும் அவ்வாஸ்பத்திரிகளுக்குச் சப்ளை செய்யப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரத்திலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியில் க்ஷய ரோக வார்டும், ரண சிகிச்சைக்கான நிலையமும் அமைப்பதற்கு நமது சர்க்கார் ரூ. 1,09,000 செலவு செய்ய அங்கீகாரம் அளித்துள்ளார்கள். அந்த ஆஸ்பத்திரியில் இன்-பேஷென்ட் பிளாக்கைப் (In-patient Block) பழுது பார்ப்பதற்கு ரூ. 7,500 அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூரிலுள்ள சர்க்கார் வைத்தியசாலை அபிவிருத்திக்கு ரூ. 12,000 செலவு செய்ய சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளார்கள்.

கண் வைத்தியம்

செங்கற்பட்டிலிருக்கும் சர்க்கார் ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் கண் வைத்தியத்தில் நிபுணத்வம் வாய்ந்த டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எக்ஸ்-ரே யந்திரமொன்று நிறுவப்பட்டிருக்கிறது. ஒரு ரேடியாலஜிஸ்ட்டும், ஒரு ரேடியோகிராபரும் ஓழிந்த நேரங்களில் பணியாற்ற நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், பெருவாரியான மக்கள் வியாதிகளைத் தீர்த்துக்கொள்ள அவ்வாஸ்பத்திரிக்குப் போகிறார்கள்.

பூவிருந்தவல்லியிலிருந்த லோகல் பண்ட் டிஸ்பென்சரியை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நோயாளிகளுக்கு வைத்திய உதவியளித்து வருகின்றனர்.

பூண்டி ஆஸ்பத்திரி

பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்து வரும் அநேக குடும்பத்தினர் பூண்டியிலும் அதைச் சுற்றி யுள்ள கிராமங்களிலும் குடியிருந்து வருகின்றனர். அவர் களுக்கு வைத்திய உதவி அளிக்க 1949-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து சர்க்கார் அங்கு ஒரு வைத்தியசாலையை நிறுவி நடத்தி வருகிறார்கள்.

'ரெட் ஹில்ஸ்' என்னும் புழலேரிக் கருகில் தங்கியிருக் கும் 'விசேஷ ராணுவ போலீஸ் யூனிட்'டைச் சேர்ந்த சிப்பந்திகளுக்கு வைத்தியம் செய்ய 1948-ம் ஆண்டிலிருந்து சர்க்கார் ஒரு வைத்தியசாலையை நடத்தி வருகிறார்கள். அந்த வைத்திய சாலையில் நோயாளிகளுக்கென 10 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமங்களில் மக்களுக்கு வைத்திய வசதியளிப்பது ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பாகும். சில ஸ்தல ஸ்தாப னங்கள் தங்கள் ஆதீனத்துக்குட்பட்டுள்ள வைத்திய சாலை களை நடத்தப் பொருள் உதவியைக் கோருமாயின் அத் தகைய ஸ்தாபனங்களுக்குச் சர்க்கார் பாதி மான்யம் வழங்கு கிறார்கள். மக்களுக்கு நோய் நிவாரணத்துக்காக வைத்திய உதவி அளிப்பதால் சில ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஏற்படும் பணமுடையை நீக்க, கிராமப் பிரதேச வைத்திய சாலைகளி லுள்ள கிராம வைத்தியர்களுக்கும், மருத்துவ மாதருக்கும் சர்க்கார் மான்யம் வழங்கி வருகிறார்கள். இவ்வாறு சர்க்காரிடமிருந்து மான்யம் பெற்றுவரும் கிராம வைத்தி யர்கள், மருத்துவ மாதர் ஆகியோரின் எண்ணிக்கை வருஷந் தோறும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 1946-ம் ஆண்டுக்கு முன்னர் சர்க்கார் இவ்வகையில் சில ஆயிரம் ரூபாய்கள் செலவழித்தனர். 1950-ம் ஆண்டில் இவ்வகையில் செலவழிக்கும் தொகை லட்சக் கணக்கில் உயர்ந்துள்ளது.

கிராம வைத்தியர்கள்

அநேக கிராமங்களில், இந்திய வைத்திய முறையில் பயிற்சி பெற்று எல். ஐ. எம். பட்டம் வகித்துள்ள வைத்தி

யர்கள் பலர் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் சிலர் சுயேச்சையாகவும், சிலர் ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரிகளில் சம்பளத்துக்கும் வைத்தியம் செய்து வருகிறார்கள். அவர்கள் வைத்தியம் செய்வது போதாதென்று நமது சர்க்கார் 1,000 நபர்களுக்கு மேல் வசிக்கும் கிராமங்களில் திறமையுடன் வைத்தியம் செய்வதற்குக் கிராம வைத்தியர்களை நியமிக்கும் திட்டமொன்றைப் புதிதாகப் புகுத்தியுள்ளனர். இக்கிராம வைத்தியர்களுக்கு சுகாதாரம், நோய் வராமல் தடுக்கும் வைத்திய முறை, அற்ப ரண சிகிச்சை, முதல் உதவி, பிரசவம், சிசு சம்ரக்ஷணம் முதலியவற்றில் பயிற்சி யளிக்கப்படுகிறது. இத்தகைய வைத்திய சேவையால் நாளடைவில் நமது ராஜ்யத்துக்கு நன்மைகள் ஏற்படும்.

திருமணி சிகிச்சை நிலையம்

செங்கற்பட்டுக்கு அருகில் திருமணி என்னும் ஊர் இருக்கிறது. அங்கு 640 ஏக்கர் பரப்பு வாய்ந்த நிலத்தில் குஷ்டரோக சிகிச்சை நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள குஷ்ட நோயாளர் நோய்க்குச் சிகிச்சை பெறுவதுமன்றி, பல தொழில்களிலும் ஈடுபட்டு உழைக்கிறார்கள். அவர்கள் இந்நிலையத்தைத் தங்கள் ஆரோக்கிய விருத்திக்கான ஸ்தலம் என்றுதான் கருதுகிறார்கள்.

இங்குக் குஷ்டரோகிகளுக்குத் தக்க மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அதுவுமல்லாமல், அவர்களுடைய சமூக, பொருளாதாரப் புனர் வாழ்வுக்குரிய வழி வகைகள் கோலப்படுகின்றன. இவ்வியாதியஸ்தர் பாயும் படுக்கையுமாய் இல்லாமல், விவசாயம், தச்சு, நெசவு, தையல், நூல் நூற்றல், கருமார வேலை செய்தல், கல்வி பயிலுதல் முதலிய தொழில்களில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். அவர்களுக்கு வேடிக்கைகளும் விளையாட்டுக்களும் உண்டு.

இந்த ஆரோக்கிய நிலையத்தில் சுமார் 800 நோயாளிகளும் (200 குழந்தைகள் உள்பட) கூட்டு சமுதாய வாழ்க்கையின் பூரா சௌகரியங்களையும் அநுபவித்து வரு

கிருர்கள். அங்குள்ள பெரும்பாலான நோயாளிகள் இலவசமாகச் சிகிச்சைப் பெற்று வருகிருர்கள். ஸ்காட்லந்து மிஷின் ஸ்தாபனத்தாரிடமிருந்து இந்நிலேயத்தை 1948-ம்ஆ ஏப்ரல்மீ 1உல் சர்க்கார் ஏற்றுக்கொண்டனர். அது முதல் சர்க்கார் சற்றேறத் தாழ 3 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளார்கள்.

இந்நிலேயத்தில் வேலே பார்க்கும் சிப்பந்திகளில் பெரும்பான்மையோர் அங்குச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளே.

இந்த நிலேயம் ஒரு சிறு நகரம் போல் விளங்குகிறது. இங்குச் சிற்றுண்டி சாலேகளும் போஜன விடுதிகளும் நோயாளிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயமும் இங்கு நடைபெற்றுவரும் தொழில்களில் முக்கியமான தொன்றுகும். இந்நிலேயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காய்கறித் தோட்டத்தில் விளேயும் காய்கறி வகைகளே வியாதியஸ்தர்களும் சிப்பந்திகளும் பயன் படுத்திக் கொள்ளுகிருர்கள். அவை வெளியார்களுக்கும் விற்கப்படுகின்றன. இந்த ஸ்தாபனத்தைக் கூடிய வரையில் சுய வருவாய் மூலமே நடைபெறச் செய்ய வேண்டுமென்பது சர்க்கார் நோக்கமாகும்.

இங்குள்ள நோயாளிகளில் சுக நிலேயில் இருப்பவர்கள் வைத்தியம், கைத்தொழில், விவசாயம், கல்வி, சமூக சேவை, சுகாதாரம், நிர்வாகப்பணி, சில்லறை வேலேகள் முதலியவற்றில் ஈடுபட்டு உழைத்து வருகிருர்கள்.

இந்நிலேயத்தில் கதர் உற்பத்தியும் நடைபெறுகிறது. இங்கு மேஜை, நாற்காலி, பீரோ முதலிய மரச் சாமான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன ; நெசவுச் சாலேயில் வேஷ்டிகள், புடவைகள், 'பாண்டேஜ்' துணிகள் நெய்யப்படுவதுமல்லாமல், அவைகளுக்குச் சாயமும் போடப்படுகிறது.

இங்குக் கல்வி போதனேயும் புறக்கணிக்கப்படவில்லே. இங்கு ஆரம்பப் பாடசாலேயும், ஆதாரக் கல்வி சாலேயும், கைத்தொழில் பள்ளிக்கூடமும் இருக்கின்றன. அவைகள்யாவும் சர்க்கார் அங்கீகாரம் பெற்றுள்ளன.

பல புத்தகங்கள் அடங்கிய நூல் நிலையங்களும், பத்திரிகைகளைக்கொண்ட வாசக சாலையும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையத்தில் நோயாளிகளுக்குரிய விளையாட்டுக்களும் பொழுது போக்கும் நடைபெற வசதிகள் உண்டு. வருஷந்தோறும் இங்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இந்த ஸ்தலத்தில் நோயாளிகளின் ஆத்மீக வளர்ச்சிக்கான வசதிகள் உண்டு. இங்கு இந்து ஆலயமும், கிறிஸ்துவ மாதாக் கோயிலும், மகம்மதிய மசூதியும் அமைக்கப்பெற்று நோயாளிகளில் அந்தந்த மதத்தினர் அவரவர்களுக்குரிய தேவாலயத்தில் கடவுள் வழிபாடு நடத்துகின்றனர். சகல மத சம்பந்தமான விழாக்களும் வைபவங்களும் இங்கு முறையாகக் கொண்டாடப்படுகின்றன.

இந்நிலையத்தில் உள்ள நோயாளிகள் அநேகமாக நோயற்றவர்கள் போலவே இருந்து வருகிறார்கள். ஒரு சிலரே படுத்த படுக்கையாய் இருக்க நேரிடுகிறது. இங்குள்ள ஆஸ்பத்திரியில் 60 படுக்கைகள் உண்டு.

குஷ்டரோக வியாதியின் சிகிச்சையைக் குறித்த ஆராய்ச்சிப் பகுதியொன்றும் இந்நிலையத்தில் நாட்டப்பட்டிருக்கிறது.

கிராமச் சீரமைப்பு


இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது. என்று இந்தக் கிராமங்கள் அனைத்தும் பிறர் கையை எதிர் பாராமலும், நம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ அன்றுதான், இந் நாடு பூரண சுதந்திரம் பெற்ற நாடாக முடியும்.

—காந்தியடிகள்

நமது பண்டைக்கால இந்தியா உலகிலுள்ள நாடுகள் யாவற்றினும் பல துறைகளிலும் தலை சிறந்து விளங்கியதற்கு இந் நாட்டிலுள்ள கிராமங்களின் புராதன க்ஷேமமே அடிப்படைக் காரணமாய் இருந்த தென்பது மறுக்கக்கூடாத உண்மையாகும்.

இவ்வுண்மையை முதன் முதலில் உணர்ந்தவர் நமது தேசப் பிதாவாகிய காந்தியடிகளே ஆவர். அவர் தாம் கண்ட உண்மையைப் பிறருக்கும் அறிவுறுத்தி, கிராம நல அபிவிருத்தி திட்டம் ஒன்றை வகுத்தார். சுதந்திர இந்தியாவில் இத் திட்டத்தை நடை முறையில் கொண்டு வரப் பெரிதும் முயன்றார். அச் சீரிய முயற்சியில் சித்தி

நோயற்ற வாழ்வு



திருமணி குஷ்ட ரோக நிலையம்




பிணி நீங்க



ஆஸ்பத்திரி வசதி



கிராம நலன்—குடிதண்ணீர்




விவசாயம் - பாடும் - பலனும்
நீர் இறைத்து
நிலத்தைப் பண்படுத்தி
பலன் அடைதல்
விவசாயத்துக்கு மினசாரம்
கோழிப்பண்ணை

பெறுவதற்கு முன் அவர் வீர மரண மடைய நேர்ந்தது. ஆயினும், அப்பெருமகனாரின் அடிச்சுவட்டைப் பின் பற்றிச் செல்லும் நமது நாட்டின் மாபெருந் தலைவர்கள் முக்கியமாய் நமது சென்னை ராஜ்யத் தலைவர்கள், நமது ராஜ்ய கிராம நல அபிவிருத்திக்கானவற்றைப் பதவி ஏற்ற வுடன் காலந் தாழ்த்தாமல் செய்து முடிக்க முற்பட்டுள் ளார்கள்.

கிராம அபிவிருத்தித் திட்டங்கள்

சென்னை ராஜ்ய மெங்கும், ஒவ்வொரு ஜில்லாவிலும் சிற்சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை அபிவிருத்திசெய்ய நமது சர்க்கார் சில அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் நியமித்துள்ளார்கள். இவ்வதிகாரிகளும், சிப்பந்திகளும் சீரிய முறையில் சேவை செய்து வரு கின்றனர். அவ்வதிகாரிகள், சர்க்கார் தேர்ந்தெடுத்த கிராமங்களில் இராப் பள்ளிக்கூடங்கள், பகற் பள்ளிக் கூடங்கள் நடத்தி வருகின்றனர். முதியோர் கல்வி முறை யில் பெருஞ் சிரத்தை காட்டி வருகின்றனர். இந்தி வகுப்புகள் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன. வாசக சாலைகளும், நூல் நிலையங்களும் அந்தந்தக் கிராமங்களில் நிறுவப்பட்டு வருகின்றன. இனி அக்கிராமங்களில் அறி யாமைக்கு இடமில்லை.

கிராம மக்களின் பொது சுகாதார விஷயத்தில் அரசாங்கம் ஆற்றிவரும் பணி பலவகைப் பட்டதாகும். கிராமத் தெருக்களைச் சுத்தம் செய்வதிலும், ஜலதாரை கள் அமைப்பதிலும், வார்தா கக்கூஸ்கள் கட்டுவதிலும், வைத்திய சாலைகள், பிரசவ ஆஸ்பத்திரிகள் அமைப்பதி லும் சர்க்கார் மிக்க கவனம் செலுத்தி வருகின்றனர்.

கிராம மக்களிடையே கூட்டுணர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்காக அந்த அதிகாரிகள் ஆங்காங்குக் கூட்டுறவு சங்கங்கள், ஸ்டோர்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள், பல நோக்கக் கூட்டுறவு சங்கங்கள், குடிசைக் கைத் தொழில் அபி

விருத்திக்கான கூட்டுறவு சங்கங்கள், பால் வினியோகக் கூட்டுறவு சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவுப் பண்ணைகள் ஆகிய ஸ்தாபனங்களைத் தோற்று வித்துள்ளனர். அந்த ஸ்தாபனங்கள் யாவும் நன்கு நிர் வகிக்கப்பட்டு வருகின்றன.

நாளடைவில் இக்கிராமங்கள் கல்வியறிவிலும், சுகாதார விஷயங்களிலும், பொருளாதாரத் துறையிலும் இதர கிராமங்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மூன்று பிர்க்காக்கள்

செங்கற்பட்டு ஜில்லாவில் அபிவிருத்தி செய்வதற்காக நமது ஜனநாயக சர்க்கார், தேர்ந்தெடுத்த பிர்க்காக்கள் மூன்று :—

(1) திருவள்ளூர் (2) மப்பேடு (3) பாண்டூர்.

திருவள்ளூர் பிர்க்காவில் இருக்கும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை (முனிசிபாலிடி நீங்க லாக) 46 ஆகும். இவற்றில் 13 கிராமங்கள் தவிர ஏனைய கிராமங்களுக்குத் தக்க போக்குவரத்து வசதி கிடையாது. பெயருக்கு ஒன்று அல்லது இரண்டு ரஸ்தாக்கள் இருந்த போதிலும் அவை பாழடைந்து கிடந்தன. ஆகை யால் அக்கிராமங்களின் போக்குவரத்து வசதிகளை அக் கிராம வாசிகளின் ஒத்துழைப்பையும், முயற்சியையுங் கொண்டே சீர்திருத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. அம்முயற்சிகளால் இன்னும் 21 கிராமங் களுக்குப் போக்குவரத்து வழி ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமமும் அருகிலுள்ள பெரிய ரஸ்தாவுடன் இணைக்கப் பட்டு வருகிறது. திருவள்ளூர் முனிசிபாலிடியாக மாறு வதற்கு முன்னமே திருவள்ளூர் டவுனுக்கும், ரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையிலுள்ள ரஸ்தா காங்கிரீட் ரஸ்தா வாக மாற்றப்பட்டுவிட்டது.

இந்த பிர்க்காவுக்கு ஆதாரமாயுள்ள ரஸ்தாக்கள் ஐந்து :

திருவள்ளூர் - ரெட்ஹில்ஸ் ரோட்

திருவள்ளூர் - ஆவடி ரோட்
திருவள்ளூர் - திருமழிசை ரோட்
கொரட்டூர் - பெரியபாளையம் ரோட்
திருவூர், செவ்வாப்பேட்டை, கீழானூர் ரோட்.

இதுவரையில் இவ்வகையில் சர்க்கார் செலவழித்துள்ள ரூ. 17,230. இவற்றுக்காக கிராமத்தார் அளித்த உழைப்பு, பொருள் முதலியன ரூ. 5,740 பெறுமானமுள்ளவை. இதுவரையில் முடிந்துள்ள ரஸ்தாக்களின் நீளம் 18 மைல் 4 பர்லாங்கு ஆகும். பாக்கம் பஞ்சாயத்து போர்டார் சர்க்கார் வழங்கிய மான்யத் தொகையைக் கொண்டு ஒரு கிராம ரஸ்தாவை அமைத்துள்ளார்கள்.

புதிதாக ஏற்படுத்தியிருக்கும் பாண்டூர் பிர்க்காவிற்கு 11 ரோட்டுகளும், மப்பேடு பிர்க்காவிற்கு 11 ரோட்டுகளும் அமைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

குடி தண்ணீர் வசதி

திருவள்ளூர் பிர்க்காவில் 24 கிணறுகள் அமைக்க திட்டமாகி, அவற்றுள் 18 கிணறுகள் கட்டிப் பூர்த்தியடைந்துள்ளன. மழையில்லாமல் பூமி வறட்சியுற்றிருக்கும் இக்காலத்தில் இப்புதிய கிணறுகள் கிராம மக்களுக்குப் பேருதவியாக இருந்து வருகின்றன. எஞ்சிய 6 கிணறுகளின் வேலை துரிதமாக நடந்தேறி வருகிறது. இவற்றுக்காக, சர்க்கார் செலவழித்த மொத்தத் தொகை ரூ. 26,934. கிராம வாசிகள் உழைப்பின்மூலமும், இதர வகையிலும் செலவு செய்த தொகை ரூ. 10,860 ஆகும்.

பாண்டூர் பிர்க்காவுக்கு 10 கிணறுகளும், மப்பேடு பிர்க்காவுக்கு 11 கிணறுகளும் வெட்ட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கான மனைகளும் தேர்ந்தெடுக்கப்பெற்று எஸ்டிமேட்டு தயாராகி வருகிறது. இக்கிணறுகளுக்கு வேண்டிய மனைகள் பூராவும் இரண்டே நாட்களில் கிராம நல அதிகாரியாலும், சுகாதார இன்ஸ்பெக்டராலும் பார்வையிடப்பட்டன. சுகாதார ஆபீசரும் அவற்றுக்கு அங்கீகாரம் அளித்துவிட்டார்.

நீர்ப்பாசன சௌகரியம்

திருவள்ளூர் பிர்க்காவிலுள்ள எல்லா நீர்ப்பாசன ஏரிகளும் கடந்த மூன்று வருஷங்களாக மராமத்து செய்யப்பட்டு விவசாயத்துக்குப் பேருபகாரமாய் இருந்து வருகின்றன.

ஈக்காடு, ஒதிக்காடு, சேலை, கலியாணகுப்பம் ஆகிய இந் நான்கு கிராமங்களுக்கும் மின்சார வசதி ஏற்பட்டுள்ளது. இக்கிராமங்களில் 60 பம்பு செட்டுகளுக்குமேல் மின்சாரத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

பப்பேடு பிர்க்காவில் வெங்கத்தூர் கிராமத்தில் மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. புதுமாவிலங்கை, அகரம், பனப்பாக்கம், செஞ்சி ஆகிய கிராமங்களுக்கு மின்சார வசதியளிக்க வழிகோலப்பட்டிருக்கிறது. மேலும் 40 கிராமங்களில் இது சம்பந்தமாய்ப் பூர்வாங்க வேலைகள் நடந்தேறி வருகின்றன. மின்சார வசதியுடன் 20 விவசாயிகளுக்கு யந்திர சாதனங்கள் தவணையின்பேரில் சப்ளை செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சுமார் 500 ஏக்கருக்கு மேற்பட்ட பூமி சாகுபடி செய்யப்பட்டுவருகிறது.

கல்வி

திருவள்ளூர் பிர்க்காவில் ஜில்லா போர்ட், தொழில் இலாகா ஆகியவற்றின் ஒத்துழைப்பின்பேரில் 6 ஆரம்பப் பாடசாலைகள் திறந்துவைக்கப்பட்டுள்ளது. திருவூரில் உள்ள ஆரம்பப் பாடசாலை உயர்நிலைப் பள்ளிக்கூடமாக மாற்றப்பட்டுவிட்டது. இங்கு அடிப்படைக் கல்விசாலை ஒன்றை சர்க்கார் திறந்து வைத்துள்ளார்கள்.

10 முதியோர் கல்விசாலைகள் அந்தந்தக் கிராம ஆசிரியர்களின் முயற்சியால் சிறப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன.

கிராம மக்களின் அறிவு வளர்ச்சிக்காக ஒரு மத்திய நூல் நிலையமும் 20 கிளை நிலையங்களும் பணியாற்றி வருகின்றன.

விவசாய அபிவிருத்தி

பயிற்சிபெற்ற விவசாய இலாகா ஊழியர்கள்பிர்க்காக்களுக்குச் சென்று சேவை செய்து வருகின்றனர். விவசாயத்துக்கு லாயக்கான பரந்த நிலங்கள் இக்கிராமங்களில் இருந்தும் அவை நீர் வசதி குறைவால் பயிரிடப்படாமல் இருக்கின்றன. அந் நிலங்களை மின்சார வசதி மூலமும், யந்திர சாதனங்கள் மூலமும் சாகுபடி செய்ய விவசாய இலாகா ஊழியர்கள் வசதி செய்து தருகிறார்கள். ஈக்காடு, விஷ்ணு வாக்கம் முதலிய கிராம நிலங்களில் சர்க்கார் வழங்கும் உயர்ந்த ரகவித்துக்களே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அந்தந்தக் கிராமங்களில் விவசாய இலாகாவினர் விதைப் பண்ணைகள் (Seed Farms) ஏற்படுத்தி, உயர்ந்த ரக வித்துக்களைத் தயாரித்து, விவசாயிகளுக்குத் தேவையான எரு வகைகளையும் அவ்வப்போது விநியோகித்து வருகின்றனர். பசுந்தாள் உரத்துக்கும் ஆங்காங்கு மரங்களும், செடிகளும் விருத்தி செய்யப்படுகின்றன. விஷ்ணுவாக்கம் கிராமத்தில் மட்டும் 4,000 புங்கன் மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

பப்பேடு பிர்க்காவில், வெங்கத்தூர் கிராமத்தில் 15 ஏக்கர் பரப்பு வாய்ந்த தரிசு நிலத்தில், 10,000 மரங்கள் அடங்கிய சிறு காடு ஒன்று பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அக்காட்டின் மூலம், கிராமத்துக்குத் தேவையான விறகு, கட்டிடங்களுக்கு அவசியமான மரங்கள், பலகைகள், விவசாயத்துக்கு இன்றியமையாத பசுந்தழை முதலியன கிடைக்கும். அக்காட்டில் மரங்கள் நட்டுப்பயிரிடுகிறவர்கள் நஷ்டமடையாதபடி, நூக்கமர முதலியவிலையுயர்ந்த மரங்களும் விருத்திசெய்யப் பட்டு வருகின்றன. இதற்கு வேண்டிய மரக்கன்றுகளைக் காட்டிலாகாவினர் வழங்கி வருகின்றனர்.

கால் நடைகள் பராமரிப்பு

செங்கற்பட்டு ஜில்லாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிர்க்காக்களில் உள்ள கால் நடைகளின் க்ஷேமாபிவிருத்தியைக்

கருதி ஸ்டாக்மென் கம்பவுண்டர்கள் நியமிக்கப்பட்டுள்ள னர். அவர்கள் மாதந்தோறும் குறைந்தது 40 கிராமங் களுக்குச் சென்று ஆங்குள்ள கால் நடைகளைக் கண் காணித்து வருகின்றனர். அவர்கள் 3,000க்கு மேற்பட்ட கால் நடைகளுக்கு மருந்துகள் கொடுத்து பிணி தீர்த்து வருகிறார்கள்.

திருவள்ளூர் பிர்க்காவில் ஆடுகளின் அபிவிருத்திக்காக 12 நெல்லூர் செம்மறியாடுகள் திருவூரில் வைக்கப்பட் டுள்ளன.

ஈக்காடு, திருவள்ளூர் ஆகிய இடங்களில் இரண்டு சிந்தி பொலி காளைகள் விவசாயிகளுக்குப் பயன்பட விடப்பட் டுள்ளன. கால்நடைகளை நல்லமுறையில் வளர்த்து அபிவிருத்தி செய்வதில் கிராம மக்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் நான்கு கால் நடைக் கண் காட்சிகள் நடைபெற்றன. அக்காட்சிகளுக்குக் கொண்டு வரப்பட்ட சிறந்த பிராணிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுகள் வழங்குவதில் சர்க்கார் இதுவரையில் சுமார் ரூ. 1,200 செலவழித்துள்ளார்கள்.

சுகாதாரம்

இது விஷயமாய் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு சேவா சங்கமும், உப-கமிட்டியும் நியமிக்கப்பட்டுள்ளன. கிராம வாசிகளில் முக்கியமான சிலரே இச்சங்கத்தின் அங்கத் தினர் ஆவர். இவர்கள் கிராம சுகாதாரத்துக்குப் பிரதி கூலமானவற்றை நீக்கி, அநுகூலமானவற்றை அக்கறை யுடன் செய்து பணியாற்றி வருகின்றனர். வீட்டுக்கு வீடு மண்ணைக்குவித்து வைப்பதால் ஏற்படும் நீர்த் தேக் கத்தைத் தவிர்ப்பதற்கும், ஆங்காங்குள்ள பள்ளங்களையும், குழிகளையும் தூர்ப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து வரு கிறார்கள். இதுவரையில் 10 குளிக்கும் அறைகள் கட்டப் பெற்றுள்ளன. இவற்றுக்குச் செலவான தொகை ரூ. 3,105 ; அத்தொகையில் கிராமத்தார் வழங்கிய தொகை ரூ. 625 ஆகும். இந்த 10 குளிக்கும் அறைகளும் ஹரிஜனங்

கள் வாழும் இடங்களிலேயே கட்டப்பட்டுள்ளன.

11 கிராமங்களில், கிராம வாசிகள் தங்கள் சுயமுயற்சியாலே மேடு பள்ளங்கள் நிறைந்த தெருக்களைச் செம்மைப்படுத்தி, சுகாதாரத்துக்கு அநுகூலமாக்கிக் கொண்டுள்ளனர். 17 வார்தா கக்கூஸ்கள் கட்டப்பட்டுள்ளன. மாதர் நல இலாகாவின் முயற்சியால் கீழானூரிலும், திருவூரிலும் இரண்டு பிரசவ, குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன.

10 கிராம சேவக்களுக்கும், கிராம நல ஆபீசருக்கும் முதற் சிகிச்சைப் பயிற்சியளிக்கப்பட்டது. முதல் சிகிச்சைக்கான மருந்துவகைகள் வாங்குவதற்கும் அவர்கள் அநுமதி பெற்றனர்.

கிராம ஸ்தாபனங்கள்

முதன்முதல், கூட்டுறவு சங்கங்களும், பஞ்சாயத்து போர்டும் திருவள்ளூர் பிர்க்காவில் ஆரம்பித்துவைக்கப்பட்டன. அதன்பிறகு அவைகள் இதர பிர்க்காக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

கதர்த்திட்டம் விரிவான முறையில் இந்த மூன்று பிர்க்காக்களிலும் அமல் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தையொட்டி கிராம வாசிகளுக்கிடையே 135 கைராட்டைகள் பாதி விலைக்கு வினியோகிக்கப்பட்டன. இவை தவிர, இன்னும் 200 ராட்டைகள் இலவசமாகவும் ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டன.

சேலை கிராமத்திலுள்ள பித்தளைப் பாத்திர உற்பத்தித் தொழிலாளருக்கு, அப்பாத்திர உற்பத்திக்கான நூதன கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கோழி வளர்ப்பு அபிவிருத்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்துடன் ரோட் ஐலந்து ரெட் இனத்தைச் சேர்ந்த 24 சேவல்களும் 20 டஜன் முட்டைகளும் செவ்வாப்பேட்டை, தொழுவூர், திருவூர், அரன்வாயல், தண்ணீர்க்குளம், கலியாணகுப்பம் முதலிய கிராமங்களுக்கும் வினியோகிக்கப்பட்டுள்ளன. செவ்வாப்பேட்டையில் மாத்திரம்

மேற்கூறிய இனத்தைச் சேர்ந்த கோழிகள் 60க்கு மேல் விருத்தியடைந்திருக்கின்றன.

அபிவிருத்தி கமிட்டி

மேற்கூறிய மூன்று பிர்க்காக்களின் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் அபிவிருத்தி கமிட்டியின் ஆலோசனையை யொட்டி நடைபெற்று வருகின்றன. இக்கமிட்டிக்கு ஜில்லா நிர்மாண ஊழியர்களும், பிர்க்கா முன்னேற்றத்தில் சிரத்தை கொண்டுள்ள விவசாயிகள் சிலரும் அங்கத்தினராக இருந்து வருகின்றனர்.

கமிட்டியின் கூட்டங்களில் கிராம மக்கள் பங்கெடுத்துக்கொள்ளுகின்றனர். செங்கற்பட்டு ஜில்லாவின் உயர்தர அதிகாரிகளும் அக்கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள். பிர்க்காக்களில் நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளைப் பற்றியும், இனி நடத்தப்படும் வேலைகளைப் பற்றியும் கமிட்டி கூட்டங்களில் பகிரங்க விவாதங்கள் நடக்கும். கிராம நல அதிகாரிகள் கிராமங்களுக்குச் செய்யவேண்டிய அபிவிருத்தி வேலைகள் யாவை, அவற்றை எவ்வாறு செய்து முடிப்பது என்பதை கிராம மக்கள் தெரிந்து சொல்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அவர்களுடைய ஒத்துழைப்பும் சர்க்காருக்கு எளிதில் கிடைக்கிறது. ஆதலால், இத்திட்டத்தின் கீழ் நமது ஜனநாயக சர்க்கார் நடத்திவரும் ஆக்க வேலைகளில் கிராம மக்கள் முழுநம்பிக்கை யுடையவர்களாய் விளங்குகிறார்கள். இந் நம்பிக்கையே கிராமநலத்திட்டம் பூரண வெற்றியடைவதற்கு நல்லதோர் அறிகுறியாகும்.

குடிசைத் தொழில்கள்

திருவள்ளூர் பிர்க்காவைச் சேர்ந்த காக்களூரில் 1947–48 ஆம் ஆண்டில் மண்பாண்டங்களின் உற்பத்திக்கான பயிற்சியளிக்கும் ஸ்தாபனம் ஒன்று பணியாற்றி வந்தது. இந்தப் பயிற்சி ஸ்தாபனத்தில் 11 நபர்கள் பயிற்சி பெற்றார்கள். அவர்களில் 6 பேர்களுக்கு சர்டிபிகேட்டுகள் வழங்கப்பட்டன.

காக்களூர் பிரிமியர் கன்ஸ்யூமர் குட்ஸ் மானுபாக்சரிங் கம்பெனி என்னும் ஸ்தாபனத்தில்கருமார வேலை உற்



பத்தி-பயிற்சி பிரிவு ஒன்றை ஸ்தாபித்து வேலை நடைபெற்று வந்தது. விவசாயக் கருவிகள் செய்வதற்கு, கிராமக் கைத்தொழில் திட்டத்தின்கீழ் 109 தொழிலாளர் இந்த மூன்று பிர்க்காக்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் 8 பேருக்கு விவசாயக் கருவிகள் சப்ளை செய்யும் வேலை அளிக்கப்பட்டது.

கிராமக் கைத்தொழிலாளர்களுக்கு 1949-ம்ஸ்ரீ செப்டெம்பர்மீ 1-ம்தேதியிலிருந்து 1950-ம்ஸ்ரீ டிசம்பர்மீ 31-ம் தேதி வரையில் 47 டன் இரும்பும், எஃகும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்தப் பிர்க்காக்களில் 1947ம் ஆண்டில் 47 குழாய்க் கிணறுகளும், 1948ல் 137 குழாய்க் கிணறுகளும், 1949ல் 189 குழாய்க் கிணறுகளும், 1950ல் 456 குழாய்க் கிணறுகளும் கிராம மக்களின் சௌகரியத்தின் பொருட்டு தோண்டப் பெற்றன.

கைத்தொழில்கள்

பொன்னேரி தாலூகாவில் கடலையடுத்துள்ள பழவேற்காட்டில் பனையோலைப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அங்கு இப்போது வசித்துவரும் முஸ்லிம் குடிகளின் முன்னோர்கள் சீயம், சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று வர்த்தகஞ் செய்துவந்தனர். அங்கிருந்து அவர்கள் இங்குப் பனையோலைகளில் செய்யப்பட்ட பலவித பெட்டிகளும், விசிறிகளும் கொண்டுவந்தனர். அவர்களுடைய மனைவி மக்கள்

அவற்றைப்போலவே இங்கும் தயாரிக்க ஆரம்பித்தனர். தயாரிக்கப்பட்ட பனையோலைப் பெட்டிகள் விற்பனை செய்யப்பட்டன. நாளடைவில் இவ்வியாபாரம் ஓங்கி வளர்ந்தது.

அத்தொழிலில் தற்போது சுமார் 100 மாதர்கள் (12 வயது பெண்களிலிருந்து வயது முதிர்ந்த ஸ்திரீகள் வரையில்) ஈடுபட்டு அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு ஜீவித்து வருகிறார்கள்.

பழவேற்காட்டிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலு மிருந்து தேவையான பனையோலைகள் சேகரிக்கப்படு கின்றன. அவற்றைக்கொண்டு கூடைகளும் பெட்டிகளும் முடைந்து பல வர்ணங்கள் இடப்படுகின்றன. அவற்றை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி சென்னை, பங்களூர், மைசூர் முதலிய இடங்களுக்கு விற்பனை செய்யக்கொண்டு போகிறார்கள். பழவேற்காட்டிலுள்ள அநேக குடும்பங்கள் ஜீவிப்பதற்கான ஊதியம் அளிக்கும் முக்கிய கைத்தொழில் இதுவேயாம்.

மான்ய வினியோகம்

ஐந்து தொழில் நுணுக்கக் கல்விப் பாடசாலைகளுக்கு நமது ஜனநாயக சர்க்கார் ரூ. 17,147 வரையில் மான்யம் வழங்கியுள்ளார்கள். அப்பாடசாலைகள் பின்வருமாறு:

எ. எ. எம். கைத்தொழில் பாடசாலை, வேளச்சேரி —இப்பாடசாலைக்கு 1947-48-ம் ஆண்டில் ரூ. 195-ம், 1948-49-ம் ஆண்டில் ரூ. 1,500-ம், 1949-50-ம் ஆண்டில் ரூ. 1,500-ம் ஆக மான்யம் வழங்கப்பட்டது.

ஸெயின்ட் அந்தோனி கைத்தொழில் பாடசாலை, பரங்கிமலை.—இப்பாடசாலைக்கு 1946–47-ம் ஆண்டில் ரூ. 1,500-ம், 1947–48-ம் ஆண்டில் ரூ. 1,500-ம், 1948–49-ம் ஆண்டில் ரூ. 1,500-ம், 1949–50-ம் ஆண்டில் ரூ. 1,500-ம் ஆக மான்யம் வழங்கப்பட்டது.

ஹரிஜன கைத்தொழில் பாடசாலை, காஞ்சீபுரம்.—இப்பாடசாலைக்கு நமது சர்க்கார் 1946–47-ம் ஆண்டில்

ரூ. 1,125-ம், 1947–48ம் ஆண்டில் ரூ. 554-ம் 1948–49-ம் ஆண்டில் ரூ. 700-ம், 1949–50-ம் ஆண்டில் ரூ. 885-ம் மான்யமாக வழங்கியுள்ளார்கள்.

மெதடிஸ்ட் மிஷன் கைத்தொழில் பாடசாலை, ஈக்காடு.—இப்பாடசாலைக்கு 1946–47-ம் ஆண்டில் ரூ. 1,000-ம் 1947–48-ம் ஆண்டில் ரூ. 1,200-ம், 1948–49-ம் ஆண்டில் ரூ. 1000-ம், 1949–50-ம் ஆண்டில் ரூ. 600-ம் மான்யமாக வழங்கப்பட்டன.

கூடமன் ஹரிஜன கைத்தொழில் பாடசாலை, காஞ்சீபுரம்.—இப்பாடசாலைக்கு சர்க்கார் 1946–47-ம் ஆண்டில் ரூ. 340-ம், 1947–48-ம் ஆண்டில் ரூ. 544-ம் மான்யமாக வழங்கியுள்ளார்கள்.

பஞ்சாயத்து ராஜ்யம்

கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான வழிகோலி தனித்தனி சுயாட்சி நிலையங்களாகப் பணியாற்றுவதற்கு அவசியமான அதிகார உரிமைகளை அவற்றுக்கு அரசாங்கம் அளிக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—40

உத்திரமேரூர் என்பது செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள ஓர் இடம். இங்கே கிடைத்த ஒரு சாசனம் சரித்திரப் பிரசித்திபெற்றது. பண்டைக் காலத்தில் கிராமாந்திரங்களில் நடை பெற்றுவந்த ஸ்தல ஸ்தாபனக் குடியாட்சி முறையின் விவரங்களை அதில் விரிவாகக் காண முடிகிறது. கிராமப்பணிக்கான தேர்தல்கள் நடத்தும் முறை, தேர்ந்தெடுக்கப்பட்டபின், அந்தந்தப் பிரதிநிதிகளுக்குரிய கடமைகள், அவற்றைத்தக்கவாறு செய்யாமற் போனால் கிடைக்கும்தண்டனை முதலியவை அதில் கூறப்பட்டுள்ளன.

பண்டைக்கால குடியாட்சி முறைக்குப் புத்துயிரளிக்க முற்பட்டனர் நம்முடைய மக்கள் சர்க்கார். ஒவ்

வொரு கிராமமும் தகுதி வாய்ந்த பிரதிநிதிகள் மூலம் பொது நல வேலைகளைத் திறமையுடன் நிர்வகிக்க வழி வகுத்துள்ளனர். சுயதேவைகளைச் சுய முயற்சியால் பூர்த்தி செய்து கொண்டு சுய கௌரவத்தோடு கிராம மக்கள் தலை நிமிர்ந்து நிற்க, புதிய பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஸ்தல ஸதாபன முறை நம் நாட்டில் அமைக்கப்பட்ட தோடு, பெயரளவில் சில கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டன. அவற்றிற்குப் போதுமான அதிகாரங் களும், நிதி வசதியும் இல்லாததால் அவற்றால் அதிக சேவை செய்து, கிராம மக்களுக்கு எல்லா வித வசதிகளும் செய்ய இயல வில்லை. ஆயினும், மக்கள் சர்க்கார் பொறுப் பேற்றதும் இந்தப் பஞ்சாயத்து முறைக்கு விசேஷ உற் சாகம் அளித்தனர்.

அதன் விளைவாக, சென்ற நான்கு வருட காலத்தில் பெரும்பாலான பஞ்சாயத்துக்கள் தத்தம் ஆதீனத்துக் குட்பட்டுள்ள கிராம மக்களுக்குத் தேவையான வசதிகள் பல அளித்துள்ளன. 1946-ம் ஆண்டுக்கு முன் பொரு ளாதார நிலையில் பிற்போக்கு அடைந்திருந்த பஞ்சாயத் துக்கள் தற்போது சர்க்காரால் புதிய வசதியுடன் விளங்குகின்றன. சீர்கேடான நிலையிலிருந்து வந்த கிராமத் தெருக்கள் சுத்தமும் செம்மையும் பொருந்தி விளங்குகின் றன. கிராமத்துக்குக் கிராமம் புதிய சாலைகளால் இணைக் கப்பட்டு போக்குவரத்துச் சாதனவசதிகள் அமைந் துள்ளன. பல வருஷங்களாகக் குடி தண்ணீர் வசதியற்றுத் தவித்துக்கொண்டிருந்த கிராமங்களில் குளங்கள் செப்ப னிடப்பட்டுள்ளன; புதிய கிணறுகள் வெட்டப்பட் டுள்ளன. அதனால் கிராம மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி ஏற்பட்டுள்ளது.

பஞ்சாயத்து போர்டுகளைச் சேர்ந்த சில கிராமங்களில் மின்சார வசதி ஏற்பட்டிருக்கிறது. சில கிராமங்களில் பிரசவ விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம மாதர் பிரசவ காலங்களில் அனுபவித்த இன்னல்கள் நீங்கப்

பெற்றவர்களாய், தேக ஆரோக்கியத்துடன் இருந்து வருகிறுர்கள். அவர்கள் பெற்றெடுத்த சிசுக்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அநேக பஞ்சாயத்துக்களில் மக்களின் அறிவு விஸ்தரிக்கப்பட வேண்டுமென்னும் நோக்கத்துடன் இலவச வாசகசாலைகள் பல நிறுவப்பட்டுள்ளன. அச் சாலைகள் மூலம் கிராம மக்கள் நாட்டுச் செய்திகளையும் உலகச் செய்திகளையும் எளிதில் தெரிந்து கொள்ளுகிறுர்கள். அவர்களுக்கு நாளுக்கு நாள் அரசியல் ஞானம் வளர்ந்தோங்கி வருகிறது. முதியோருக்குக் கல்வி வசதியளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கென வாசக சாலைகளும், நூல் நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந் நூல் நிலையங்களுக்கும் வாசக சாலைகளுக்கும் நமது சர்க்கார் நன்கொடையும், மான்யமும் வழங்குகிறுர்கள். கிராம மக்கள் பொழுதுபோக்குக்காக வானெலி நிகழ்ச்சிகளைக் கேட்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயத்துக்கு ஏற்ற நல்ல எருக்கள் தயாரிக்கப்பட்டு கிராமவிவசாயிகளிடையே நியாய விலைக்கு விநியோகிக்கப் படுகின்றன. இவற்றின் மூலம் உணவுத் தானியங்களின் விளைச்சல் அபிவிருத்தியடைந்து வருகிறது.

செங்கற்பட்டு ஜில்லாவில் 1947–48-ஆம் ஆண்டில் 340 பஞ்சாயத்து போர்டுகள் இருந்தன. 1949–50-ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை 369 ஆக உயர்ந்தது. இவைகள் மைனர் பஞ்சாயத்து போர்டுகள். இவற்றைத் தவிர 14 மேஜர் பஞ்சாயத்து போர்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

போக்கு வரத்து ; பொதுநல சாதனங்கள்

99 பஞ்சாயத்துக்களில் ரஸ்தா வேலைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. 10 பஞ்சாயத்துக்கள் தங்கள் ஆதீனத்துக்குட்பட்ட இடங்களில் பாலங்களும், மடுவுகளும் அமைத்துள்ளன. போக்கு வரத்துச் சம்பந்தமாய்ச் சென்ற ஐந்தாண்டு காலமாக நமது ராஜ்ய சர்க்கார் அப் பஞ்சா

யத்து போர்டுகளுக்கு வழங்கிய மான்ய விவரம் பின் வருமாறு :

		ரூ.	அ.	பை.
1946–47	... ...	2,760	14	0
1947–48	... ...	144	14	0
1948–49	... ...	6,137	6	0
1949–50	... ...	3,009	9	0
1950–51	... ...	5,872	11	0

இரண்டு பஞ்சாயத்துக்களில் வண்டிகள் நிற்பதற்கு இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது; மூன்று பஞ்சாயத்துக்களில் பஸ்கள் நிற்பதற்கு இடவசதி அமைக்கப்பட்டிருக்கிறது.

சுகாதாரம்

பஞ்சாயத்து போர்டில் குடி தண்ணீர் பாதுகாப்புக்கு வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

51 பஞ்சாயத்துக்களில் கக்கூஸ்கள் கட்டப்பட்டு வருகின்றன.

21 பஞ்சாயத்து போர்டுகளைச் சேர்ந்த கிராமங்களில் பாடசாலைகள் நிறுவப்பட்டுள்ளன. அங்குள்ள சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்வி வசதி ஏற்பட்டுள்ளது. நமது ராஜ்ய சர்க்கார் அப் பாடசாலைகளுக்கு இது வரையில் ரூ. 17,030 மான்யமாக வழங்கியுள்ளார்கள்.

நூல் நிலையங்களும், வாசகசாலைகளும். 16 பஞ்சாயத்து போர்டுகளைச் சேர்ந்த கிராமங்களில் நூல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 18 பஞ்சாயத்து போர்டுகள் பல வாசக சாலைகளை நிர்வகித்து வருகின்றன.

இந்த ஜில்லாவிலுள்ள 49 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த கிராம வீதிகளில் சாதாரண விளக்குகள் எரிந்து வருகின்றன. 3 பஞ்சாயத்துக் கிராமத் தெருக்களில் மின்சார விளக்குகள் ஒளிவீசிநிற்கின்றன.

9 பஞ்சாயத்து போர்டுகளைச் சேர்ந்த கிராமங்களில் பொதுஜன மார்க்கெட்டுகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

20 பஞ்சாயத்து போர்டுகளைச் சேர்ந்த கிராமங்களில் ஆங்காங்கு ரேடியோ செட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஜில்லாவில் முனிசிபல் நகரங்களில் நமது ஜன நாயக சர்க்கார் செய்துள்ள நன்மைகள் பலப்பல. அதனால் அந்நகர மக்களுக்கு அநேக வசதிகள் ஏற்பட்டுள்ளன.

திருவள்ளூர் நகர மன்றம்

பொது மக்களின் நன்மையைக் கருதி 1948-ம் வருஷ ஏப்ரல்மீ 1௳-யிலிருந்து திருவள்ளூரை நமது சர்க்கார் முனிசிபாலிடியாக மாற்றினார்கள். சர்க்கார் இந்நகரில் செய்துள்ள வசதிகள் பின்வருமாறு:

இந் நகருக்கும் ரயிலடிக்கும் இடையில் இரண்டு மைல் நீளமுள்ள ரஸ்தாவை நமது சர்க்கார் சிமிட்டி - கான்கிரீட் சாலையாக மாற்றி அமைத்துள்ளார்கள்.

இந் நகருக்கு இடையில் செல்லும் மதராஸ் - திருவள்ளூர் - திருத்தணி ரஸ்தாவைத் தார் ரோடாக சர்க்கார் மாற்றி வருகிறார்கள். இதனால் அந்த ரோட்டில் தூசி பரவுவதற்கு இடமில்லை. சுகாதாரக் குறைவும் தடுக்கப் படுகிறது.

மண் தெருக்களில் சர்க்கார் சரல் சல்லி போட்டுச் சீர் திருத்தம் செய்துவருகிறார்கள். இந் நகரிலுள்ள தெருக்களைத் தூசி பரவாத தெருக்களாக மாற்றவும் சர்க்கார் ஐந்து-வருஷத் திட்டமொன்றை வகுத்துள்ளார்கள். இதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை 1951–52-ஆம் ஆண்டு முதல் நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

இந் நகர வீதிகளில் 1946-ம் ஆண்டில் 180 மின்சார விளக்குகள் இருந்தன. நமது சர்க்கார் ஹரிஜனங்களின் வீதிகளுக்கும் இன்னும் சில முக்கிய இடங்களுக்கும் மின் சார விளக்குகளை அமைத்துள்ளார்கள். அதனால் தற்போது மின்சார விளக்குகளின் எண்ணிக்கை 240 ஆக உயர்ந்திருக்கிறது. நகரமெங்கும் 9 முக்கிய இடங்களில் பாதரச ஆவி விளக்குகள் ஒளிவீசி வருகின்றன.

விவசாயத்துக்கு அத்தியாவசியமான நீர்ப்பாசன வசதிக்கு இந் நகரில் 43 பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பம்பு செட்டுகள் மின்சாரத்தால் இயக்கப்படுகின்றன. இந் நகரில் குடிதண்ணீர் வசதியைப் பெருக்க பெரிய குப்பத்தில் இரண்டு நீர்த் தேக்கங்கள் அமைக்கப்பட்டன. ஏற்கனவே இருந்து வரும் குடிநீர்க் குழாய்களுடன் புதிதாக 29 குழாய்கள் போடப்பட்டுள்ளன.

இந் நகரில் அநேக இடங்களில் ஜலதாரைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந் நகரில் சீர்கேடு அடைந்திருந்த ஒரு குறுகிய சந்தும் சிமிட்டி-கான்கிரீட் தளம்போட்டு சீர்திருத்தப்பட்டது. இங்கு, நகரக்கழிவுப் பொருள்களிலிருந்து, உணவுத் தானியப் பெருக்கத்துக்கு இன்றியமையாத செயற்கை உரம் ஏராளமாய்த் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந் நகரில் பல இடங்களில் சற்றேறத்தாழ 350 மரங்கள் நட்டுப் பயிராகி வருகின்றன.

முன் ஜில்லாபோர்டு ஆதீனத்துக்குட்பட்டிருந்த 4 கட்டாயக் கல்விப் பாடசாலைகளைத் திருவள்ளூர் முனிசிபாலிடியார் எடுத்துக்கொண்டு சீர் செய்து பரிபாலித்து வருகிறார்கள்; அதே போல், ஓர் ஆயுர்வேத வைத்திய சாலையையும் இந் நகர மன்றமே நிர்வகித்து வருகிறது. இந் நகரில் ஒரு இலவச நூல் நிலையமும், வாசக சாலையும், மக்களின் அறிவு வளர்ச்சிக்காகத் திறந்து வைக்கப் பட்டுள்ளன.

செங்கற்பட்டு நகர மன்றம்

இந் நகரில் புதிதாக ட்ரங்க் டெலிபோன் (Trunk Telephone) நிறுவுவதற்கு ஏற்பாடாயிருக்கிறது. இதனால் வாணிபத் துறையில் இருப்பவர்களும், பொது மக்களும் நல்ல பலன் அடைவார்கள்.

இந் நகர மன்றத்தின் ஆதீனத்துக்குட்பட்டுள்ள நீர் நிலைகள் யாவும் சர்க்கார் மீன் இலாகாவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த இலாகாவினர் இந் நீர் நிலைகளில் மீன் உரங்களை உற்பத்தி செய்து வருகிறார்கள். மக்கள் உண்பதற்கு மீன்கள் இனி அதிகமாகக் கிடைக்கும்.

பொது மக்களின் போக்குவரத்துச் சாதன வசதி ஏற்படுத்த இந் நகரின் பல பாகங்களில் தூசி பரவாத ரஸ்தாக்கள் அமைக்க வழி கோலப்பட்டிருக்கிறது. இந்த ரஸ்தாக்களின் மொத்த நீளம் சுமார் 1 மைல் 7 பர்லாங்கு ஆகும்.

இங்குக் குப்பை உரம் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இதனுல் உணவுத் தான்ய உற்பத்திப் பெருக்கத்துக்கு வசதி யுண்டு.

காஞ்சீபுர நகர மன்றம்

இவ் ஊரில் இதுவரையில் தூசி பரவாத ரஸ்தாக்கள் அமைக்கப்படவில்லை. அதனுல் நமது சர்க்கார் 1950–51-ஆம் ஆண்டில் இந் நகரமெங்கும் சிமென்ட்-கான்கிரீட் ரஸ்தாக்கள் போடவும், தார் ரோட்டுகள் அமைக்கவும் உத்தரவிட்டிருக்கிருர்கள்; சிமென்ட்-கான்கிரீட் ரோட்டுகள் போட ரூ. 95,000-மும், தார் ரோட்டுகள் அமைக்க ரூ. 3,30,000-மும் அனுமதித்துள்ளார்கள். இவ்வேலைகள் வெகு துரிதமாய் நடந்தேறி வருகின்றன. நமது சர்க்கார் ரூ. 46,000 செலவில் தூசி பரவாத ரோட்டுகள் அமைக்கவும் அனுமதித்துள்ளார்கள். இவ் வேலை சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்.

பஸ் பிரயாணிகள் தங்குவதற்காக இந் நகரில் ஒரு பஸ் நிற்குமிடம் கட்டத் தொடங்கி 1950-ம்ஆு செப்டெம்பர்மீ 4உயில் முடிவடைந்தது. இதற்கு சர்க்கார் ரூ. 3,500 செலவு செய்துள்ளார்கள். இந்த விடுதி யாத்திரிகர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பெரிதும் பயன்படுகிறது.

முதியோர் கல்வி பயில்வதற்காக இங்கு 4 இராப்பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. இப் பாடசாலைகளில் 80 முதியோர் கல்வி கற்று வருகின்றனர்.

இவ் ஊரில் கொசுக்கள் உபத்திரவம் அதிகம். அதை நிவர்த்திக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. அதற்கான வருஷச் செலவு ரூ. 10,000. தண்ணீர் தேங்கிநிற்கும் இடங்களில் ஜலதாரைகளமைத்து, கொசுக்கள் சேராதபடி மருந்துகள் தெளிக்கப்படுகின்றன.

இங்குக் கர்ப்பிணிகளின் சௌகரியத்துக்காக 3 பிரசவ விடுதிகளும், சிசு சம்ரக்ஷணை சாலைகளும் நிறுவப்பட்டுத் தொழிலாற்றி வருகின்றன. இவ் விடுதிகளில் நாள் தோறும் சுமார் 100 குழந்தைகளுக்குப் பால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந் நகரில் குப்பை எரு தயாரிக்கப்பட்டு மலிவான விலைக்கு விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. வருஷ வாரி இங்குச் சற்றேறத்தாழ 1 லட்சம் கன அடி அளவுள்ள குப்பை உரம் தயாராகிறது.

இந் நகரில் அநேக இடங்களில் மரங்கள் நட்டுப் பாது காக்கப்படுகின்றன. இது வரையில் சுமார் 1,500 மரங்கள் நடப்பட்டு விசேஷ சிப்பந்திகள் மூலம் ஜலம் விட்டுக் காப்பாற்றப்படுகின்றன.

இவ்வூரில் இது வரையில் வேகவதி ஆற்றின் ஊற்று நீர் மக்களுக்குக் குடி தண்ணீராக உதவியது. சில வருஷங் களாக மழையில்லாமற் போகவே குடிதண்ணீர் சரிவர சப்ளை செய்ய இயலாது போயிற்று. தண்ணீர்ப் பஞ்சத்தை நிவர்த்திக்கப் புதிய பம்பிங் நிலையம் ஒன்று கட்ட ஏற்பாடாயிருக்கிறது. வெகு விரைவில் இவ் வேலை ஆரம் பிக்கப்படும்.

இதுவன்றி, இந் நகரிலுள்ள பொதுக் கிணறுகள் யாவும் பழுது பார்க்கப்பட்டுள்ளன. இக் கிணறுகளில் சிலவற்றுக்கு மின்சார மோட்டார்களும், சிலவற்றுக்கு மேயர்ஸ் பம்புகளும் அமைத்து, குழாய்கள் மூலம் பொது ஜனங்கள் தண்ணீர் எடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இந் நகரின் பம்பிங் நிலையக் காம்பவுண்டிலுள்ள காலி இடங்களில் ரூ. 2,500 செலவில் சிப்பந்திகளுக்குச் சிறு சிறு வீடுகள் கட்டப்பெற்றுள்ளன.

தொன்று தொட்டு, காஞ்சிபுரத்தில் நெசவுத் தொழில் நடைபெற்று வருகிறது. இந் நகரில் விவசாயிகளுக்கு அடுத்த படியில் இருப்பவர்கள் நெசவாளர்களே. மாதர் கள் அணியும் பட்டுச் சேலைகளுக்கும், சரிகை சேலைகளுக்கும் இந் நகர் பிரசித்தி பெற்றது.

ஹரிஜன முன்னேற்றம்

மக்களுள் பலதுறைகளிலும் தாழ்ந்துள்ள வகுப்பினரின்—முக்கியமாக ஷெட்யூல் வகுப்பு, மலைஜாதி ஆகியவற்றைச் சேர்ந்தவரின்—கல்வி, பொருளாதார உரிமைகளை விசேஷ கவனத்துடன் அபிவிருத்தி செய்து சமூக அநீதி, மற்றும் அதுபோன்ற எல்லா இடர்ப்பாடுகளினின்றும் அவர்களை அரசாங்கம் பாதுகாக்கும்.

—இந்திய அரசியல் அமைப்பு ஷரத்து—46

“பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்!” என்பது திருவள்ளுவர் காட்டும் உண்மை நெறி. நமது நாட்டு மக்கள் நெடுங்காலம் இவ்வுண்மையை உணராது, மக்களுள் பெரும் பாலாரைப் பிறப்பின் காரணமாகத் தீண்டாமை முதலிய நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்தி முன்னேற்றமடைவதைத் தடுத்து வந்தார்கள். அதனால் சமூக ஒற்றுமைக்கு இடமில்லாது போயிற்று. நமது நாடு உலகிலுள்ள இதர நாடுகளைப்போல் பல துறைகளிலும் தலைசிறந்து ஓங்கவில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, இந்த ஜில்லாவில்

ஒரு மகான் தோன்றினர். சமய அடிப்படையில் தீண்டாமையை நீக்க அவர் அரும்பாடுபட்டார். பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே தம் வாழ் நாளில் அதைத் தைரியமாகச் செய்துகாட்டினர். அத்தகைய சீர்திருத்தவாதி வேறுயாருமல்ல, ஸ்ரீபெரும்பூதூரில் தோன்றிய ஸ்ரீராமானுஜரேயாவர்.

அவர் துவக்கிய சீர்திருத்தம், இருபதாம் நூற்றுண்டிலே பூரண வெற்றி பெற்றது. சட்ட ரீதியாக தீண்டாமை விலக்கப்பட்டுவிட்டது. அதற்கு முக்கிய காரணம் மகாத்மா காந்தி இத்துறையில் செய்த சேவையே யாகும். அந்த மகாத்மாவின் அடிகளைப் பின்பற்றி நமது ஜனநாயக சர்க்கார், ஹரிஜன ஆலயப்பிரவேச



அநுமதிச் சட்டம், ஹரிஜன சமூகத் தடைகள் நீக்கச் சட்டம் என்னும் இரு பெருஞ் சட்டங்களை, தீண்டாமை என்னும் பிணிக்கு நன் மருந்தாக, நிறைவேற்றி வைத்தார்கள். ஹரிஜனங்களின் நலத்தை உத்தேசித்து ஹரிஜன நல இலாகா ஒன்று நிறுவினர்கள். சென்னை ராஜ்யமெங்கும் ஹரிஜனங்கள், பின்தங்கிய வகுப்பினர் முதலியவர்களின் முன்னேற்றத்துக்கு அநுகூலமான ஆக்கவேலைகளில் ஈடுபட்டு உழைக்க ஆரம்பித்துள்ளார்கள். ஹரிஜனங்களுக்கும், பின் தங்கிய வகுப்பினருக்கும், பல துறைகளிலும் வசதி ஏற்படுத்தியுள்ளனர்.

நமது ஜனநாயக சர்க்கார் சென்ற நான்கு வருஷ காலத்தில் ஹரிஜனங்களுக்காகவும் பின்தங்கிய வகுப்பினருக்காகவும் 16 புதிய ஆரம்பப் பாடசாலைகள் திறந்து வைத்தார்கள். அநேக பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளும் நிறுவப்பட்டன. இவ் வகுப்பினருக்காக இப்போது இந்த ஜில்லாவில் பல தாலூகாக்களில் நடைபெற்றுவரும்

ஆரம்பப் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 116 ஆகும். அவை—சைதாப்பேட்டை தாலூகாவில் 26-ம், திருவள்ளூர் தாலூகாவில் 12-ம், செங்கற்பட்டு தாலூகாவில் 18-ம், காஞ்சீபுரம் தாலூகாவில் 13-ம், பொன்னேரி தாலூகாவில் 12-ம், ஸ்ரீபெரும்பூதூர் தாலூகாவில் 14-ம், மதுராந்தகம் தாலூகாவில் 21-மாக—உள்ளன.

இப் பாடசாலைகளில் படித்துவரும் சிறுவர் சிறுமியர்களுக்கு நமது சர்க்கார் இலவசமாகப் பகற்போஜனம் அளிப்பதைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்; ஸ்தல ஸ்தாபன ஆரம்பப் பாடசாலைகளிலும் இதர தனிப்பட்டவர்கள் நிர்வகித்துவரும் ஆரம்பப் பாடசாலைகளிலும் கல்வி கற்றுவரும் ஹரிஜனக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும் சிலேட்டுகளும் வழங்கிவருகிறார்கள். தகுதி வாய்ந்த சில திக்கற்ற குழந்தைகளுக்கு உடுக்க உடையும் இலவசமாக அளிக்கின்றனர்.

பொதுஜன விடுதிகளும் சம்பளச் சலுகையும்

இந்த ஜில்லாவில் பாடசாலைகளில் படித்துவரும் ஹரிஜன, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த சிறுவர், சிறுமியருக்குக் கல்வி மான்யம் வழங்குவதைப்பற்றிய விதிகள் அநுகூலமாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. கல்வி மான்யத்திற்காக 1947–48-ம் ஆண்டுமுதல் சென்ற நான்கு ஆண்டுகளாக சர்க்கார் முறையே ரூ. 16,090–10–0, ரூ. 20,191-4-0, ரூ. 24,876–8–0, ரூ. 38,924–6–0 செலவிட்டு வருகின்றனர்; ஹரிஜனங்களுக்கும் பின் தங்கிய வகுப்பினருக்கும் தற்போது நிறுவப்பட்டுள்ள 15 ஹாஸ்டல்களுக்கும் மான்யம் வழங்குகிறார்கள். 1947–48-ம் வருஷம் முதல் நான்கு வருஷங்களாக அரசாங்கத்தார் கொடுத்துதவிய மான்யத்தொகைகள் முறையே ரூ. 16,500, ரூ. 36,211, ரூ. 46,650, ரூ. 46,025-யாகும்.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலையைச் சேர்ந்த ஹாஸ்டலில் 140 ஹரிஜன மாணவர்கள் தற்போது தங்கி வாசித்து வருகிறார்கள்.

நிகழும் வருஷத்தில் நமது சர்க்கார் பொன்னேரியில் ஹாஸ்டல் ஒன்று திறந்து வைத்துள்ளார்கள். அந்த ஹாஸ்டலில் உயர்தரப் பாடசாலே வகுப்புகளில் வாசிக்கும் 20 ஹரிஜன மாணவர்கள் தங்கியிருக்கிறார்கள். அதே விதமான ஹாஸ்டல்களே சர்க்கார் காஞ்சீபுரம், பூவிருந்த வல்லி, மதுராந்தகம் ஆகிய இடங்களில் நிறுவ ஆலோசித்து வருகிறார்கள்.

ஹரிஜனங்களுக்காகத் தனிப்பட்ட நபர்கள் நடத்தும் சங்கங்களுக்கும் சர்க்கார் மான்யம் வழங்கி வருகிறார்கள். இச் சங்கங்களில் சில முதியோர் கல்வி வகுப்புகள் நடந்து வருகின்றன. இந்த ஜில்லாவில் மூன்று இடங்களில் கோகுல கிராம நல சங்கத்தார் ஹரிஜன நலத்துக்கான பணியாற்றி வருகின்றனர்.

ஹரிஜனங்களுக்கு வீடுகட்ட மனைகள்

ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள நமது சர்க்கார் இலவசமாக மனைகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். தகுதிவாய்ந்த ஏழை ஹரிஜன குடும்பங்களுக்கு நன்செய் நிலமாயிருந்தால் மூன்று செண்ட்டும், புன்செய் நிலமாயிருந்தால் ஐந்து செண்ட்டுமாக வழங்கப்பட்டு வருகிறது.

இதற்காக, பதினைந்து கிராமங்களில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொன்னேரி தாலூகாவிலுள்ள கொள்ளெட்டிச்சேரியில் 60 ஹரிஜன குடும்பங்களுக்காக 2 ஏக்கர் 69 செண்ட் பூமி ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அந் நிலச்சுவான்தார்களுக்குச் சேர வேண்டிய விற்கிரயத் தொகையும் செலுத்தியாய் விட்டது, கடம்பத்தூர், வெண்மணம்பூதூர், திரூர் கிராமங்களிலும் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இன்னும் சிலமாதங்களுக்குள் ஏனைய பதினேழு கிராமங்களிலும் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படும். இதனால் சர்க்காருக்கு ரூ. 70,000 செலவாகும்.

பாட்டைகள்—ஹரிஜனங்கள் நடமாடுவதற்காக நேமம்.

புத்தேரி, பாக்குப்பேட்டை சேரி, ஆத்தூர் வடபாதி, கோனேரிக்குப்பம், பழயனூர் கிராமங்களில் பாட்டைகள் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

நமது சர்க்கார் சாக்கன்குப்பம் கிராமத்தில் பக்கிங்ஹாம் கால்வாய் மீது ரூ. 3,500 செலவில் பாலமொன்று அமைக்க அங்கீகாரம் அளித்துள்ளார்கள். அப்பாலத்தின் மூலம் அக்கிராம ஹரிஜனங்கள் எதிர் கரையிலிருந்து சுலபமாய்க் குடிதண்ணீர் கொண்டுவர வசதி ஏற்படும். அப்பாலம் இல்லாமல் ஹரிஜனங்கள் குடி தண்ணீருக்குக் கஷ்டப்பட்டார்கள்.

கோனேரிக்குப்பம், ஆத்தூர் வடபாதி, வடபெரும் பாக்கம் ஆகிய கிராமங்களிலுள்ள சுடுகாடுகள் ஹரிஜனங் களுக்குப் போதாமையால் அவற்றை விஸ்தரிக்கவும் அல்லது வேறு இடங்களுக்கு மாற்றவும் ஜில்லா ஹரிஜன நல அதிகாரியும் அவருடைய சிப்பந்திகளும் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

கிருஷ்ணபுரம் கிராமத்தில், சேரிக்கு அருகிலுள்ள சர்க்கார் நிலத்தில் சுடுகாடு அமைத்துக் கொள்ளச் சம்மதித் துள்ளார்கள்.

சென்ற நான்கு வருஷகாலத்தில் ஹரிஜன நலத்துக் கெனப் பிரத்தியேகமாய் எடுத்துவைத்துள்ள தொகையி லிருந்து புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறு களைப் பழுதுபார்க்கவும் சர்க்கார் கீழ்க்கண்ட தொகைகள் செலவழித்துள்ளார்கள்.

வருஷம்.	புதிய கிணறுகள்.	பழுதுபார்த்த பழைய கிணறுகள்.	செலவு. ரூ.	அ.	பை.
1947–48	...	24	14,464	11	3
1948–49	13	9	23,643	0	0
1949–50	8	...	7,404	0	0
1950–51	1	...	6,372	0	0

சுகாதார வசதிகள்

பிரத்தியேகமாக ஹரிஜனங்களுக்கு அவர்கள் வசித்து வரும் பிரதேசங்களில் கக்கூஸ்கள் கட்ட சர்க்கார் புதிதாக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளார்கள்.

1949–50-ம் ஆண்டில், கோனேரிக்குப்பம், பழையனூர், மாங்காடு, செருகம்பாக்கம், நாகல்கழனி கிராமங்களில் 6,200 ரூபாய் செலவில் ஐந்து கக்கூஸ்கள் கட்டப்பெற்றன. 1950–51-ம் ஆண்டில் பாலூர், போரூர், பொன்மார் கிராமங்களில் 4,200 ரூபாய் செலவில் மூன்று கக்கூஸ்கள் கட்டப்பட்டன.

பிரதி மாதமும், மாதக் கடைசியில் ஹரிஜன தினக் கொண்டாட்டத்தை ஒவ்வொரு பிர்க்காவிலும், ஒவ்வொரு தாலூகாவிலும் நடத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் கூட்டங்கள் கூட்டவும், அக் கொண்டாட்டத்துக்கும் கூட்டங்களுக்கும் அங்குள்ள மக்களையும் சமூக சேவையாளரையும் வரவழைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அக் காலங்களில் ஹரிஜனங்கள் ஜாதி இந்துக்களுடன் கலந்து அளவளாவவும், பந்தி போஜனம் அருந்தவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தொழில் அபிவிருத்தி

விவசாயம், கைத்தொழில் அல்லது இதர துறைகளில் உழைக்கும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை, ஜீவனத்துக்கேற்ற ஊதியம், கண்ணிய வாழ்க்கைத் தரத்துக்கேற்ற வேலை நிபந்தனைகள், சமூக, கலாசார வசதிகள், ஓய்வின் பூரண நுகர்ச்சி முதலிய சௌகரியங்களைத் தகுந்த சட்டம் அல்லது பொருளாதார அமைப்பின் மூலம் அளிக்க அரசாங்கம் முயலும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் ஷரத்து—43

ஒரு நாட்டின் பொருளாதார நிலை உயர்வதற்கு, கைத்தொழில்களை அந் நாட்டில் விருத்தியடையச் செய்ய வேண்டும். நமது இந்திய நாடு, முக்கியமாய் நமது சென்னை ராஜ்யம், தொன்று தொட்டு விவசாயத் தொழிலில் ஈடு பட்டுவந்ததேயொழிய, கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கவில்லை.


அதனால், நமது ஜனநாயக சர்க்கார் சென்னை ராஜ்யத்தில் கைத்தொழில்கள் அபிவிருத்தி அடைவதற்கான வழிவகைகள் செய்துள்ளனர்; அதுவுமல்லாமல். கைத்

தொழில்களில் ஈடுபட்டு உழைத்துவரும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முயற்சித்து வருகிறார்கள்.

இந்த ஜில்லாவில், எ.எ.எம். கைத்தொழில் பாடசாலை, வேளச்சேரி, செயின்ட் அந்தோணி கைத்தொழில் பாடசாலை, பரங்கிமலை, ஹரிஜன கைத்தொழில் பாடசாலை, காஞ்சீபுரம், மெதடிஸ்ட் மிஷன் கைத்தொழில் பாடசாலை, ஈக்காடு, கூமன் ஹரிஜன கைத்தொழில் பாடசாலை, காஞ்சீபுரம், ஆகிய பாடசாலைகளுக்கு நமது சர்க்கார் வருஷந்தோறும் மான்யம் வழங்கி நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குப் பயிற்சியளித்து வருகின்றனர்.

கைத்தொழிற் சாலைகள்

இந்த ஜில்லாவில் பற்பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றுள், தீக்குச்சிகள் உற்பத்தி, தோல் பதனிடுதல், பீடி சுருட்டுதல் முக்கியமானவை. இந்த ஜில்லாவில் கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனங்கள் பெரும்பாலும் திருவொற்றியூரிலும், பல்லாவரத்திலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. திருவொற்றியூரில் ஒரு தொழிற் சாலையில் தீக்குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்குத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருள்கள் மிக்க குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படுகின்றன. பல்லாவரத்தில் தோல் சம்பந்தமான வேலைகள் நடைபெறுகின்றன.



இங்கு ஒரு தொழிற்சாலையில் ஓடுகளும் விசித்திர மண் பாண்டங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. திருவள்ளூரில் ஒரு தொழிற்சாலையில் கற்குழாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மேற்கூறிய கைத்தொழிற்சாலைகளிலும், இதர கைத்தொழிற்சாலைகளிலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். தொழிற்சாலைகளில் தொழிலாளர் கமிட்டிகள் நியமிக்கப்பட்டுள்ளன. இக் கமிட்டிகள், நிர்வாகஸ்தர், தொழிலாளர் ஆகியோருக்கிடையே சமாதானம் நிலவவும், உயர்ந்த பட்ச அளவில் பொருள்கள் உற்பத்தி செய்யவும் அநுகூலமாய் இருந்துவருகின்றன.

தொழிலாளர் நலன்

நமது சர்க்கார் தொழிலாளரின் நலனைக் கோரி பல சட்டங்களைப் பதவியேற்றபின் நிறைவேற்றியுள்ளார்கள். அச் சட்டங்களுள் முக்கியமானவை பின் வருமாறு :

1947-ம்வருடத்திய கைத்தொழிலாளர் சச்சரவு சட்டத்தின் மூலம் தொழிலாளருக்கு வேலை வசதி, உயர்ந்த ஊதியம், வாழ்க்கைச் சௌகரியங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

1947-ம்வருடத்திய தொழிற்சாலை சட்டத்தின் மூலம் 20 அல்லது 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக்கொண்டு மின்சார யந்திர சாதனங்களில்லாமல் தொழிலாற்றும் தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல், தொழிற்சாலைகளில் வெளிச்சம், காற்று, விளக்கெரிதல் முதலிய வசதிகள் அமைத்தல், தொழிலாளர்களுக்கு ஓவர்டைம் ஊதியம் வழங்கல், வேலை செய்யும் சிறுவர் சிறுமியர்களின் வயதை 12-லிருந்து 14-க்கு உயர்த்தல் முதலிய சலுகைகள் காட்டப்பட்டுள்ளன.

கடைச் சிப்பந்திகள் சட்டம். (கடைச்சிப்பந்திகள் வேலை நேரம், ரஜா முதலியவற்றைக் கட்டுப்படுத்தல்.)

எண்ணெய் ஆட்டுதல், பீடி, சுருட்டு சுற்றுதல், தோல்பதனிடுதல், போக்குவரத்துக்கான கைத்தொழில்

கள் முதலியவற்றில் ஈடுபடும் ஸ்தாபனங்கள் சம்பந்தமாய் 1948-ம்வருஷத்திய குறைந்த பட்ச ஊதிய சட்டத்தை நமது சர்க்கார் நிறைவேற்றியுள்ளனர்.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகஸ்தர்களுக்கும் இடையே சமாதானம் நிலவவும், தொழிலாளர்களுக்குத் துன்பங்கள் நேராதிருக்கவும் நமது சர்க்கார் பதவி ஏற்றவுடன், கைத்தொழில் ட்ரிபியூனல், தொழிலாளர் கமிட்டி, விசாரணைக் கோர்ட்டு, சமாதான போர்ட் முதலிய ஸ்தாபனங்களை நியமித்துள்ளார்கள்.

இந்த ஜில்லாவிலுள்ள தொழிற்சாலைகளில் 1946-ம் ஆண்டிலிருந்து 1949-ம் ஆண்டு வரையில் 17 சச்சரவுகள் நேர்ந்தன; 7 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. அவ்வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட தொழிலாளரின் மொத்த எண்ணிக்கை 3,768. அவை சம்பந்தமாய் 9 தீர்ப்புகள் அளிக்கப்பட்டன. இந் நடவடிக்கைகளின் காரணமாக, தொழிலாளரின் நிலைமை அபிவிருத்தியடைந்துள்ளது. அவர்களுடைய அடிப்படை ஊதியமும், பஞ்சப்படியும் உயர்ந்தன. அவர்கள் எடுக்க வேண்டிய ரஜா நாட்கள் அதிகரித்தன. அவர்களுக்கு இன்னும் பல சௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

வாக்குரிமை

மக்கள் சபைக்கும், ஒவ்வொரு ராஜ்யத்தின் சட்ட சபைக்கும், வயது வந்தோர் வாக்குரிமை என்னும் அடிப்படையின் கீழ் தேர்தல் நடைபெறும்.

—இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்
ஷரத்து—326

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் இந்திய மக்களின் இப்போதைய முக்கியப் பொறுப்பாகும். உண்மையான ஜனநாயக முறை எந்த அளவுக்கு நம் நாட்டில் ஸ்தாபிக்கப்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி சுதந்திரமும் நிலைக்கும்; சுய ஆட்சியும் நன்கு நடைபெறும். இந்த உயர்ந்த தத்துவங்களை மனதிற் கொண்டே, இந்திய ஜனத் தலைவர்கள் அரசியல் நிர்ணய சபை நிறுவி, சுதந்திர இந்திய ஜனநாயக அரசாங்க அமைப்புக்கான சட்டங்களை நிறைவேற்றினர்.

1950-ம் வருஷம் ஜனவரிமீ 26-ந் தேதியன்று இந்த அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட, மக்கள் சர்க்கார் நிர்வாகம்தான் இந்த அரசியல் சாசனத்தின்

நோக்கமாகும். எனவே மக்களுக்குத்தான் இங்குப் பூரண அதிகாரம் உண்டு.

ஜனநாயக அரசியல் அமைப்புக்குள்ள பொறுப்பு அதிகமானதாகும். இதே மாதிரி ஜனநாயக ஆட்சி விரும்பும் மக்களுடைய பொறுப்பும் அதிகமாயுள்ளது. சுதந்திரமென்னும் குழந்தை, ஜனநாயகமென்னும் தொட்டிலில் தவழ்ந்து வளருவதற்கு, வாக்குரிமை சரியான சந்தர்ப்பமளிக்கிறது.

துணிச்சலான தீர்மானம்

நம் தேசத் தலைவர்கள் எடுத்தவுடனேயே வயது வந்தோர் எல்லோருக்கும் ஓட்டுரிமை கொடுக்கத் துணிந்தனர். வயது வந்தோர் ஓட்டுரிமை என்பது தேச ஆட்சியில் எவ்வளவு மகத்தான சக்தி வாய்ந்ததென்பதையும் அதனுல் ஏற்படும் நன்மை தீமைகளையும் நம் தலைவர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆனுல், ஜன நாயக சர்க்காரென்ருல், அதில் மக்களில் பெரும்பாலானவர்களின் உண்மைப் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்தவேண்டும். இந்த ஒரே நோக்கத்தில்தான், நம் தலைவர்கள் மிகவும் தைரியத்துடன் இம்முறையை அனுஷ்டிக்க முன் வந்திருக்கிருர்கள்.

ஜனநாயக மென்பது மக்களின் சர்க்கார். மக்கள் எல்லோரும் சேர்ந்து ஆட்சி புரியவேண்டும். அப்படிச் செய்வது நடைமுறையில் சாத்தியமானதல்ல. எனவே, மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் ஆட்சி நடத்துவதென்ற சம்பிரதாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டசபை அங்கத்தினர்களை மக்கள் தேர்ந்தெடுத்து விடுகிருர்கள். அந்தச் சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பாலானவர்களைக் கொண்ட அரசியல் கட்சியினர், தங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுப்பர். அத் தலைவர் ராஜ்யத்தின் முதல் மந்திரியாக நியமிக்கப்படுவார். ராஜ்ய நிர்வாகத்தில் தமக்கு உதவி புரியச் சிலரைத் தம் சக மந்திரிகளாய் நியமிக்கவேண்டுமென்று, முதல் மந்திரி, ராஜ்ய கவர்னருக்கு சிபாரிசு செய்

வார். இம்மாதிரி மந்திரி சபையமைக்கப்படும். மந்திரிகள் சட்ட சபைக்கும், சட்டசபை மக்களுக்கும் பொறுப்பாவர். இந்தப் பார்லிமென்டரி முறைகள் பூராவும் இந்திய அரசியல் சட்டத்தில் விவரமாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் தொகை அதிகரித்தல்

இந்த நியதி மூலம் 5 வருஷத்திற்கு ஒரு தடவை பொதுத்தேர்தல் இன்றியமையாததாகிறது. தேர்தலில் வாக்காளராவதற்குச் சில தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட யோக்கியதாம்ச நிபந்தனைகள் பிரகாரம், 1920-ம் வருஷம் ஜனத்தொகையில் 2 அல்லது 3 சத விகிதமும் 1937-ல் 14 சத விகிதமும் வாக்காளராஞர்கள். இப்பொழுது வயது வந்தோர் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது, ராஜ்ய மக்களில் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோரும் வாக்காளர்கள்தான். இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டியதும், 21 வயது பூர்த்தியாக வேண்டுமென்பதுதான், வாக்காளராவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் முக்கிய யோக்கியதாம்சங்கள். இவற்றின்படி ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வாக்காளராகிறுர்கள்.

சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 1951-ம்ஞு த்து ஜன சங்கியைக் கணக்குப்படி 56,952,332. அதில் ஆண்கள் 28,413,661. பெண்கள் 28,538,671. மொத்த ஜனத்தொகையில் ஆண்கள் 49·9 சத விகிதமும் பெண்கள் 50·1 சத விகிதமும் இருக்கிறுர்கள். 1941-ம் வருஷத்து கணக்குப்படி ராஜ்யத்தின் ஜனத்தொகை 49,847,508. எனவே, சென்ற பத்து வருஷங்களில் சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை 7,104,824 அதிகரித்திருக்கிறது. 1941-ல் ஒரு சதுர மைலுக்கு 390 பேர்கள் வசித்தார்கள்; 1951-ல் 446 பேர்கள் வசிக்கிறுர்கள்

1951-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28 நாட்களிலும், சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜனசங்கியைக் கணக்கெடுப்பவர்கள் வேலை செய்தார்கள். இதற்கு முன்னல் நடைபெற்ற



பாசன வசதி
ஆரணி ஆற்றில் அணை
பூண்டி
செய்யாற்றுக் கால்வாய்
புழலேரி
மீன் வளர்ப்பு
பலகை வாராவதிக்குப் பதில்
பாலாற்றில்பாலம்


நெசவுக்கு முன்னர்
ஆடைப்பஞ்சம்
நீங்க
தறியில் துகில்—பட்டு
ஆடையில் சித்திரம்

ஜன சங்கியைக் கணக்கெடுப்பு மாதிரியில்லாமல், இந்தக் கணக்கெடுப்பில் சர்க்காரால் அதிக கவனம் செலுத்தப் பட்டு, அதிகப்படியான புள்ளி விவரங்களும் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

பிரதிநிதிகள் எண்ணிக்கை

தற்போதுள்ள வாக்காளர் ஜாப்தாக்களின் பிரகாரம் சென்னை ராஜயத்தில் 271 லட்சம் ஓட்டர்கள் இருக்கிறார்கள். இவர்கள் நம் ராஜ்ய சட்டசபைக்கு 375 அங்கத்தினர்களையும், மத்திய சட்டசபையான டெல்லி பார்லிமெண்டில் மக்கள் சபைக்கு நம் ராஜ்யப் பிரதிநிதிகளாய் 75 அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சென்னை மேல் சபையில் மொத்தம் 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களில் ஸ்தல ஸ்தாபனங்களின் மூலம் 24 பேரும், பட்டாதாரித் தொகுதியிலிருந்து 6 பேரும், ஆசிரியர் தொகுதியிலிருந்து 6 பேரும் தேர்ந்தெடுக்கப்படுவர். சென்னை ராஜ்ய கீழ்ச் சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து தனியாக 24 பேரை சென்னை மேல் சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்களைத் தவிர, மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் 12 அங்கத்தினர்களை நியமனம் செய்வார்.

டெல்லி பார்லிமென்டின் மேல் சபையில் மொத்தம் 205 அங்கத்தினர்கள் இருப்பர். 'கவுன்ஸில் ஆப் ஸ்டேட்' எனப்படும் அந்தச் சபையில், சென்னை ராஜ்யத்தின் சார்பாக 27 பேர் அங்கம் வகிப்பார்கள்.

தவறான முறைகளைத் தவிர்க்க

பொதுவாக, தேர்தல் காலங்களில், இறந்தவர்கள் வந்து ஓட்டுப் போடுவதுதான் மிகவும் விசித்திரமானது. அபேட்சகர்களின் ஆட்கள் இதற்கென்று விசேஷ கவனம் செலுத்தி, ஜாப்தாவிலுள்ள பெயர்களில் இறந்துபோனவர்களுக்குப் பதில் நபர்கள் தயார் செய்யக்கூடும். அவர்கள் வந்து இறந்து போனவர்கள் பெயர்களைத் தம்மதென்று

சொல்லி ஓட்டுப்போட்டு விட முடியும். இந்தக் கெடுதலைத் தடுப்பதற்கு, வரப்போகும் தேர்தலில் ஒரு அடையாள மிடும் முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவர் ஓட்டுப் போடவரும்பொழுது அவருடைய விரலில் ஒரு வித மை பூசப்படும். அந்த மை குறைந்தது ஒரு வாரம் அழியாமலிருக்கும். எனவே, எவரும் தப்பான பெயரில் மீண்டும் ஓட்டுப் போடமுடியாது.

அகில இந்திய ரீதியில் பரிசீலனை

சென்னை ராஜ்யத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிப்பதில் ஜில்லா எல்லைகளை மட்டும் கூடுமானவரை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், முன்னேற்ற மில்லாத வகுப்பினர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கப்படும் தொகுதிகள் மட்டும் இரட்டை அங்கத்தினர் தொகுதி களாகவும், மற்றைய தொகுதிகள் ஓற்றை அங்கத்தினர் தொகுதிகளாகவே யிருக்கவேண்டுமென்றும், சென்னை சர்க்கார் சிபாரிசு செய்தனர். அவ் விஷயம் சென்னை அசெம்பிளி யிலும் கவுன்சிலிலும் நன்கு விவாதிக்கப்பட்டு சர்க்காரின் சிபாரிசு அங்கீகரிக்கப்பட்டது.

இது பற்றிய எல்லா விஷயங்களையும் அகில இந்திய ரீதியில் சரிவர ஆராய்ந்து, இந்தத் தேர்தலை நடத்த, பிரத்தி யேகமாய் ஒரு தேர்தல் கமிஷனரை மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். அவர் தேர்தலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் தாமே கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். தேர்தல் தொகுதிகள் நிர்ணயித்தல், தேர்தல் நடத்துவதற்கான சாமான்களைத் தயாரித்தல் முதலியன நடைபெற்று வருகின்றன.

சென்னை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாப்தா தயாரிப் பதற்கு 29 லட்சம் ரூபாய் செலவாயிருக்கிறது. காகித விலை மட்டும் 6 லட்சம். தேர்தல் நடத்த 3 லட்சம் 'பாலட்' பெட்டிகளுக்குமேல் வேண்டியிருக்கின்றன. அவைகள் எஃகு பெட்டிகளாகவே யிருக்கவேண்டுமென்று தீர்

மாணிக்கப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு பெட்டிக்கு 6 ரூபாய் விலையாகிறது. எனவே. அந்த வகைக்கு குறைந்தது 20 லட்சம் செலவாகும். இன்னும் தேர்தல் ஸ்தலங்கள், அதற்கு வேண்டிய இதர சாமான்கள், காவல் கட்டுப்பாடுகளெல்லாம் இருக்கின்றன.

அஸ்திவார மிடுவதிலும் கூட்டு முயற்சி

இதற்கிடையில், அரசியல் கட்சியினர் பலர் தங்கள் கருத்துக்களை அறிவிக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. அரசாங்கம் இதற்கென பல்வேறு அரசியல் கட்சியினரை நேரில் அழைத்து விரிவான ஆராய்ச்சி நடத்தியது. நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சியினர் பலரும் அதில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய காரியங்கள் எவ்வளவு அவசியமானவை என்பதைப்பற்றி அதிகம் கூற அவசியவில்லை.

பொதுஜனத் தொடர்பு

ஜனநாயகத் தன்மையில் வளரும் அரசாங்கம், அவ்வப்போது தன்னுடைய அலுவல்கள் சம்பந்தமாகவும், பொது நல விஷயங்கள் சம்பந்தமாகவும், பொது மக்களுடன் உறவு பூண்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்களை அறிவிக்க வேண்டியது அவசியம். இத் துறையில் செய்தி இலாகா தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வந்துள்ளது.

ஜில்லா விவரங்கள்

சமீபத்தில் நடந்த ஜன சங்கியை விவரப்படி இந்த ஜில்லாவில் 1,839,896 மக்கள் வசித்து வருகிறார்கள். இந்த ஜில்லாவில் 1941-ம் ஆண்டில் வசித்து வந்த மக்களின் மொத்த எண்ணிக்கை 1,723,286 ஆகும். இப்பத்து வருஷ இடைக் காலத்தில் 116,610 மக்கள் அதிகமாக உள்ளனர். அதாவது அதிக மக்களின்எண்ணிக்கை 6·8 சத விகிதமாகும்.

இந்த ஜில்லாவிலுள்ள 1,839,896 மக்களுள் 933,407

பேர் ஆண் பாலார் ; அவர்கள் இந்த ஜில்லாவின் மொத்த ஜனத் தொகையில் 50·7 சத விகிதத்தினர் ; 906,489 பேர் பெண் மக்கள். அவர்கள் ஷை ஜில்லாவின் மொத்த ஜனத் தொகையில் 49·3 சத விகிதத்தினர் ஆவர்.

இந்த ஜில்லாவைக் குறித்த வாக்காளர் ஜாபிதாவின் படி 9,12,457 பேர் வாக்காளர்கள் உரிமை வாய்ந்தவர்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ராஜய அசெம்பிளியில் இந்த ஜில்லாவுக்குரிய தொகுதிகள் 9; மத்திய மக்கள் சபைக்கு இந்த ஜில்லாவின் பிரதிநிதிகள் 2.

அமைதியும் அபிவிருத்தியும்

தேசீய வாழ்க்கை சம்பந்தமான எல்லா ஸ்தாபனங்களிலும், சமூக, பொருளாதார, அரசியல், நீதி முறை, பொருந்தி விளங்குதற்குரிய ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தி, அதைத் திறமையுடன் பாதுகாக்கும் வகையில் மக்களின் நலத்தைப் பேணி வளர்க்க அரசாங்கம் முயற்சி செய்யும்.

—இந்திய அரசியல் அமைப்பு
ஷரத்து—38

சென்னை ராஜ்யம் இந்தியாவிலுள்ள ஏனைய ராஜ்யங்களைக் காட்டிலும் சில விஷயங்களில் முற்போக்குடையதாய் விளங்குகிறது. மக்கள் மதுவருந்தி மதிகேடராய்த் தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் பயனற்றுத் திரியும் அலங்கோலக் காட்சியை அடியோடு தொலைக்கவும், நமது ராஜ்ய மாதரை ஆண்மக்களுடன் சரிநிகர் சமானமாய் வாழச் செய்யவும், நமது ராஜ்யத்தின் கலாசாரப் பண்பாடு நிலையழிந்து போகாதிருக்கவும் முறையே மதுவிலக்கு, மாதர் நல இலாகா, ஆஸ்தான கவிஞர் நியமனம் முதலிய சீர்திருத்தங்களால் இந்த ராஜ்யம் இதர ராஜ்யங்களுக்கு வழிகாட்டி நிற்கிறது.

மதுவிலக்கு

இந்த ஜில்லாவில், 1948-ம்௵ அக்டோபர்மீ 2௳ நமது சர்க்கார் மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்தத் தொடங்கினர். அதன் காரணமாக 9,050 கள்ளிறக்குவோர், தங்கள் வேலையை இழந்தனர். அவ்விதம் வேலையிழந்த மாஜி-கள்ளிறக்குவோரில் 4,828 நபர்களுக்கு, கீழே குறித்துள்ளவாறு வேலை கிடைத்தது. அவர்கள் சுபிட்சமாக வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

மாஜி-கள்ளிறக்குவோரில் 1,158 நபர்கள் விவசாயக் கூலியாட்களாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களுள் 464 பேர் தொழிற் சாலைகளிலும், வாணிப ஸ்தாபனங்களிலும் வேலையாட்களாக அலுவல் நடத்தி வருகின்றனர். 27 பேர் பியூன்களாகவும், காவற்காரர்களாகவும் அமர்த்தப்பட்டுள்ளனர். காங்க் கூலியாட்களாக வேலை செய்யும் மாஜி-கள்ளிறக்குவோரின் எண்ணிக்கை 124. வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களில் 2701 மாஜி-கள்ளிறக்குவோர் வேலைக்கு அமர்ந்துள்ளார்கள். பால்வினியோக சங்கங்களில் 21 நபர்கள் வேலை செய்து வருகின்றனர். இதர சங்கங்களில் பணியாற்றி வருவோரின் எண்ணிக்கை 7. இன்னும் பல துறைகளில் இறங்கி உழைத்து ஊதியம் சம்பாதிப்போர் 326 நபர்கள் ஆவர்.

மது விலக்குச் சட்டம் வந்ததிலிருந்து நமது சர்க்கார் வேலையிழந்த மாஜி-கள்ளிறக்குவோருக்கு வேலை யளித்து அவர்களை நிலை நிறுத்தவேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடன் வெல்ல உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை நிறுவினர். இது வரையில் இந்த ஜில்லாவில் நிறுவப்பட்ட சங்கங்கள் 67 ஆகும். வேலையிழந்த மாஜி-கள்ளிறக்குவோர், மேற்படி சங்கங்களில் வெல்ல உற்பத்திக்காகப் பதனீர் இறக்க அநுமதிக்கப்பட்டனர்.

பனைவெல்ல உற்பத்தி

1950-ம் ௵ டிசம்பர்மீ 31௳ முடிய இக் கூட்டுறவு சங்கங்களில் 2,879 மாஜி-கள்ளிறக்குவோர் அங்கத்தினர்

களாகச் சேர்ந்துள்ளனர். அவர்கள் அச்சங்கங்களுக்கு ரூ. 5,793-ஐ மூலதனமாகச் செலுத்தி யுள்ளார்கள்.

பனை மரங்களிலிருந்து பதனீர் இறக்குவதற்காக அவர்களுக்கு 2,675 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு லைசென்ஸ்தாரின் குடும்பத்திலும் ஏறக்குறைய 5 நபர்களுக்குக் குறையாமல் இருக்கிறார்கள். அதனால், பனை வெல்லம் உற்பத்தி செய்யும் இக் குடிசைத் தொழில் மூலம் சற்றேறத்தாழ 13,000 மக்கள் ஜீவனம் நடத்தி வருகிறார்கள். இந்த 67 வெல்ல உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களில் இது வரையில் ரூ. 1,18,500 பெறுமான முள்ள 32,838 மணங்கு வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இக் குடிசைத் தொழில் அபிவிருத்தியடைவதற்காக நமது சர்க்கார் பனை வெல்ல அபிவிருத்தி திட்டத்தை வகுத்துள்ளார்கள். இத் திட்டத்தின் பிரகாரம், உயர்ந்த ரக வெல்ல உற்பத்திக்காக மாஜி-கள்ளிறக்குவோர் பலருக்குப் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஜில்லாவில் இருக்கும் வாலாஜாபாத், நசரத்பேட்டை, செம்புலிவரம் என்னும் மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவ்விடங்களில் வெல்ல உற்பத்திக்கான புதிய முறைகள் 406 மாஜி-கள்ளிறக்குவோருக்கு அறிவுறுத்தப்பட்டன. வெல்ல உற்பத்திக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 நபர்களுக்கு, நபர் ஒவ்வொருவருக்கும் ரூ. 75 தாளப்பட்ட வெல்ல உற்பத்திக் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இப்புதிய முறையில், ரூ. 160–8–6 பெறுமானமுள்ள 524 பவுண்டு வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது. அதில் 408 பவுண்டு வெல்லம் ரூ. 156–5–6-க்குத் தீவிரமாக விற்பனை செய்யப்பட்டது. இப்புதிய முறையைக் கையாளுவதால்செலவு வெகுவாய்க் குறைந்துள்ளது.

கூட்டுறவு சங்கங்கள்

மாஜி-கள்ளிறக்குவோரின் நன்மையை உத்தேசித்து

திருவான்மியூரில் பால் விநியோக சங்கம் ஒன்று நிறுவப் பட்டுள்ளது. அதில் 21 மாஜி-கள்ளிறக்குவோர் அங்கத் தினராக இருக்கின்றனர். அவர்கள் ரூ. 200 மூலதனமாக வைத்துள்ளார்கள்.

அவர்களுக்காக குன்றத்தூரில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. அச் சங்கம் சிறந்த பணி யாற்றி வருகிறது. அதில் 54 மாஜி-கள்ளிறக்குவோர் அங் கத்தினராகச் சேர்ந்து ரூ. 3,625-ஐ மூலதனமாக வைத் துள்ளார்கள். இச் சங்கம் 1949-ம் ஆண்டு ஜூன் மாதம் 9உயி லிருந்து 1950-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31உ வரையில் ரூ. 31,788–5–0 பெறுமானமுள்ள ஜவுளிகள் உற்பத்தி செய்து அவற்றை ரூ. 37,553–5–0க்கு விற்பனை செய்துள் ளது. இச் சங்கத்துக்கு காஞ்சீபுரத்திலுள்ள சென்ட்ரல் பாங்க் ரூ. 2,000 குறுகிய காலக் கடனாகக் கொடுத்து உதவியிருக்கிறது.

மதுவிலக்கின் காரணமாக கள்ளருந்தும் பழக்கத்தை விட்டுவிட்ட மாஜி-குடியர்களின் நன்மையையும் நமது சர்க் கார் புறக்கணிக்கவில்லை; அவர்களுக்காகவும், பொது மக் களுக்காகவும் ஆத்தூரிலும், வடக்கம்பாடி கிராமத்திலும் இரண்டு நிலக்குடியேற்ற சங்கங்கள் ஸ்தாபிக்கவும் அவற் றின் மூலம் 200 ஏக்கர் பரப்பு வாய்ந்த நிலங்களைச் சாகு படிக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

சர்க்கார் கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் திட்ட மொன்று வகுத்து அத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க கலியம்பூண்டி கிராமத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். கலியம்பூண்டி கிராமக் கூட்டுறவு சங்கம் 1951-ம் ஆண்டு ஜன வரி மாதம் 16உ பதிவு செய்யப்பட்டுள்ளது.

செம்படவர்களின் நிலையை உயர்த்துவதற்கும் இந்த ஜில்லாவில் கூட்டுறவு சங்கங்கள் நிறுவ சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளார்கள். திருவான்மியூர், நீலங்கரை, மகாபலி புரம், ஆலம்புரைக்குப்பம், திருவொற்றியூர் முதலிய இடங் களில் அக் கூட்டுறவுசங்கங்கள் தத்தம் வேலையைத் தொடங்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இன்னும் பற்பல தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டு தொழில் நடத்தி வருகின்றன.

பொழுது போக்குச் சாதனங்கள்

கள் குடிப்பதற்கு மாற்றாகவும், குடியர்களுக்குப் பொழுது போக்காகவும், இந்த ஜில்லாவில் 125 கிராமங்களில் கூத்துக்கள் நடைபெற்றன. 40 கிராமங்களில் 40 கூத்துக்கள் நடத்தி வைப்பதற்காக சர்க்கார் ரூ. 1,000 கொடுத்துதவியுள்ளார்கள். நீலங்கரை, மொகையூர், கட்டமநாயுடுபேட்டை, வரதய்யபாளையம், செம்புலிவரம், சிறுநகர் ஆகிய கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள ரேடியோ நிலையங்கள் கிராம மக்களின் பொழுது போக்குக்கு அநுகூலமாய் இருக்கின்றன.

இந்த ஜில்லாவில் அநேக கிராமங்களில் விளையாட்டுகளும், பந்தயங்களும் நடைபெற்றன. மாஜி குடியர்கள் அவைகளில் பங்கெடுத்துக்கொண்டனர். 442 கிராமங்களில் பஜனைகள், கதாகாலட்சேபங்கள், கிராமக் கூத்துக்கள் நடத்தி வைக்கப்பட்டன. மகாபாரத, இராமாயணக் கதா காலட்சேபங்கள் ஆங்காங்கு நடந்து வருகின்றன.

கிராம மக்களுக்கிடையே, முக்கியமாய் மாஜி குடியர்களிடையே, சிக்கன முறையைப் புகுத்த நமது சர்க்கார் 1,056 உண்டிப் பெட்டிகளை வினியோகித்துள்ளார்கள். அவ் வுண்டிப் பெட்டிகளில் 1950-ம்ஹ டிசம்பர்மீ 31உ வரையில் ரூ. 9,966–5–6 சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

மாதர் நலம்

1946-ம் ஆண்டுக்கு முன்னமே மாதர் நல இலாகாவின் கிளை காரியாலயம் ஒன்று செங்கற்பட்டில் திறந்து வைக்கப்பட்டது. ஆறு இடங்களில் இரண்டு அமைப்பாளர் சேவை செய்து கொண்டு வந்தனர். பிர்க்கா பிரதேசங்களில், திருவூரிலும், கீழானூரிலும் 1949-ம்ஹ பிப்ரவரி மாதம் இரண்டு கிளை காரியாலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஒவ்வொரு கிளை காரியாலயத்திலும் ஒரு பயிற்சி பெற்ற

அமைப்பாளர் இருந்து சேவை புரிந்து வருகிறார். கிராம வேலைக்கென்றே பிரத்தியேகப் பயிற்சி பெற்ற அமைப் பாளர்கள் கிராமக் கிளை காரியாலயங்களில் பணியாற்றி வருகின்றனர்.

வாரத்துக்கு இரு முறை மாலை வேளைகளில், இச் சமூக சேவை நிலையங்களில் முதியோருக்குக் கல்வி போதனை, எழுத்தறி வித்தல், கைத் தொழில்கள் ஆகிய மூன்று நடைபெறுகின்றன. சுகாதாரம், போஷாக்கு, கல்வி, தாய்மை, சிசு சம்ரக்ஷணம் முதலிய விஷயங்கள் போதிக்கப் படுகின்றன. முதியோருக்கு இந்தியிலும், தமிழிலும் எழுத்தறிவிக்கப்படுகிறது. நூல் நூற்றல், துணி நெய்தல், தையல் வேலை, சோப்பு உற்பத்தி, பாய் முடைதல் முதலிய கைத் தொழில்களில் பயிற்சி யளிக்கப்படுகிறது. இச் சிறு கைத் தொழில்கள் மூலம் ஏழை மக்கள் சொற்ப ஊதியம்பெற வசதியுண்டு.



மாதத்துக்கொரு முறை இந் நிலையங்களில் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. இந் நிலையங்களில் அங்கத்தினரா யிருக்கும் மாதர்கள் மாதக் கூட்டங்களுக்கு ஆஜராவதில் தவறுவதில்லை. இக் கூட்டங்களை மாதர்களே நடத்தி வைக்க வற்புறுத்தப் படுகிறார்கள். அங்கத்தினர்கள் உல் லாசப் பிரயாணம் செய்வதற்கும், தேசீய விழாக்களைக் கொண்டாடு வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அங்கத்தினர் அனைவருக்கும் பிரஜா பயிற்சியும் அளிக்கப் படுகிறது.

இந்த இலாகாவின் அமைப்பாளர் காலே வேளைகளில் வீடுதோறும் சென்று அங்குள்ள மக்களுக்கு அநேக விஷயங்களைக் குறித்து அறிவுறுத்துவதில் ஈடுபடுகின்றனர். தேக சுகம், சுகாதாரம், தாய்மை, சிசு சம்ரக்ஷணம் முதலியவை சம்பந்தமாய் மக்களுக்கு வேண்டிய உதவி தரப்படுகிறது. அவ்வப்போது வைத்திய உதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

கண்காணிப்பு

அமைப்பாளர் பணியாற்றும் முறையை மாதர் நல உதவி அதிகாரி அவ்வப்போது கண்காணித்து வருவதுமல்லாமல், கிளை காரியாலயங்கள் அபிவிருத்தி யடைவதற்கான வழிவகைகளும் கோலுகிறார். ஒவ்வொரு கிளை காரியாலயத்திலும் இருந்து சேவை செய்துவரும் பிரதேச ஆலோசக கமிட்டியும் அதன் தலைவரும் கிளை காரியாலய அபிவிருத்திக்கான சிறந்த யோசனைகளைத் தெரிவிக்கின்றனர்.

செங்கற்பட்டு நகரில் அலிசன் காசி சென்டர், குண்டூர் சேரி, பர்ஸ்ட் வார்ட் சென்டர், சிசு சம்ரக்ஷணை சென்டர், மேட்டுத் தெரு சென்டர் ஆகிய நிலையங்கள் சேவை செய்து வருகின்றன. இந் நிலையங்களில் வருஷவாரி 450 பேர் ஆஜராகிறார்கள்.

திருவூரில், தொழூர்குப்பம், திரூர் சென்டர், திரூர் போர்டு பாடசாலை ஆகிய நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. இந் நிலையங்களில் வருஷவாரி 200 அங்கத்தினர் ஆஜர் ஆகின்றனர்.

கீழானூரில் உள்ள நிலையங்கள் போஸ்ட் ஆபீஸ் சென்டர், ஆபீஸ் சென்டர், சேரி சென்டர் ஆக மூன்று. இந் நிலையங்களில் மாதந்தோறும் 80 அங்கத்தினர் ஆஜராகின்றனர். இங்கு ஒரு சமூகக் கட்டிடம் அமைக்க ரூ. 500 அனுமதிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டில் 52 முதியோரும், திரூரில் 15 முதியோரும், கீழானூரில் 20 முதியோரும் எழுத்தறிவிக்கப்படுகின்றனர்.

கிளை காரியாலயங்களில் முக்கியமாய் நூல் நூற்கும் பயிற்சி யளிக்கப்படுகிறது. அநேக அங்கத்தினர் அதனுல் பெறும் ஊதியத்தைக் கொண்டு ஜீவனம் நடத்துகிருர்கள். கிராம நல இலாகாவின் உதவியைக் கொண்டு, அங்கத்தினருக்கு கைராட்டைகள் சகாயவிலைக்கு விற்கப்படுகின்றன. தையல் வேலையிலும் மக்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. பாய் முடைதல், பின்னல்வேலை, கயிறு திரித்தல் முதலிய கைத்தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன.

1950-ம்ஞு செங்கற்பட்டில் 50 அங்கத்தினரும், திரூரில் 40 அங்கத்தினரும், கீழானூரில் 40 அங்கத்தினரும் மேற் கூறிய கைத் தொழில்கள் மூலம் பயனடைந்துள்ளார்கள்.

2½ வயதிலிருந்து 7 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்கள் இலவச ஆதாரக் கல்வி வகுப்புகளில் காலை வேளைகளில் கல்வி போதிக்கப்படுகின்றனர். செங்கற்பட்டில் நடத்தப்படும் வகுப்பில் 40 குழந்தைகளும், திரூரில் நடத்தப்படும் வகுப்பில் 15 குழந்தைகளும், கீழானூரில் நடத்தப்படும் வகுப்பில் 30 குழந்தைகளும் வந்து படிக்கின்றன.

சேவையில்லத்தில் தகுதிவாய்ந்த அனுதைப் பெண்கள் அனுமதிக்கப் படுகின்றனர். இந்த ஸ்தாபனத்தின் மூலம் இந்த ஜில்லாவிலுள்ள பலதரப்பட்ட மாதர்கள் ஜாதி, மத வித்தியாசமின்றி ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் வாழ்ந்து வருகிருர்கள்.

கலை, இலக்கிய முன்னேற்றம்

சென்னை ராஜ்ய சர்க்கார் பதவி ஏற்றதும், நமது ராஜ்யத்தில் கலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்னும் நோக்கத்துடன் முதன் முதலாக தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஆஸ்தான கவிஞரை நியமித்து, அம் மொழிகளில் எழுதப் படும் சிறந்த நூல்களுக்குப் பரிசில் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். தமிழ் மொழியில் கலைக்களஞ்சியங்கள் தயாரிக்க ஐந்து லட்சம் ரூபாய் சர்க்கார் அளிக்க முன் வந்துள்ளனர்.

ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டு ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் காந்தீயக் கொள்கைகளைப் பின்பற்றி அநேக பாடல்கள் எழுதியுள்ளார். தற்போது நியமிக்கப்பெற்றுள்ள ஆஸ்தான கவிஞர் அனைவரும் நமது சர்க்காரிடமிருந்து 1949-ம் ஆண்டு ஆகஸ்ட்டுமீ 14உயன்று விருதுகள் பெற்றனர். அவர்களுக்கு விருதுகள் அளித்த தினம் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது.

நமது சர்க்கார் பிரதேச மொழிகளின் அபிவிருத்தியைக் கருதி அவ்வம் மொழிகளில் எழுதப்படும் சிறந்த வசன நூல்களுக்கும் காவியங்களுக்கும் வருஷந்தோறும் பரிசில் வழங்கி வருகிறார்கள்.

நீதி-நிர்வாகப் பிரிவினை

இப் பிரிவினைத் தேவையைக் குறித்து மக்கள் நெடுங் காலம் கிளர்ச்சி செய்து வந்தார்கள். சிவில் வழக்குகள் சம்பந்தமான நீதி நம் நாட்டில் நெடுங்காலமாகவே தனித்து நடைபெற்று வருகிறது. ஆனால் கிரிமினல் வழக்குகளில் இதுகாறும், சட்டப்படிப்பில் பயிற்சியில்லாத அரசியல் நிர்வாகஸ்தரே தீர்ப்பு அளித்து வந்தார்கள். அவர்களுடைய தீர்ப்பில் மக்களுக்கு நம்பிக்கை இல்லாததால், கிரிமினல் வழக்குகள் சிவில் வழக்குகளைப் போலவே சட்டந்தெரிந்த அதிகாரிகளால் தீர்க்கப்படவேண்டுமென்று பெரிதும் கோரி கிளர்ச்சி செய்தார்கள்.

நமது ஜனநாயக சர்க்கார், பதவி யேற்றவுடன், அரசியல் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னமே, சென்னை ராஜ்யத்தில் இச் சீரிய சீர்திருத்தத்தைப் புகுத்தினார்கள்.

நம் ராஜ்யத்தில் இச் சீர்திருத்தம் வெகு சுலபமான முறையில் நிறைவேற்றப்பட்டது. இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த ஜில்லாக்களில் கிரிமினல் வழக்குகளைத் தீர்த்து வைக்க சட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இப் புதிய மாஜிஸ்ட்

ரேட்டுகள் யாவரும் சென்னை ஹைகோர்ட்டு ஆதீனத்துக்குட்பட்டவர்கள். இவர்கள் சிவில் நீதிபதிகளைப் போலவே கிரிமினல் வழக்குகளைத் தனித்தும் சுயேச்சையாகவும் தீர்த்துவைப்பார்கள்.

1949-ம் ௵ அக்டோபர்மீ 22௳ இப்புதிய சீர்திருத்தம் வட ஆற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் நிறைவேற்றப்பட்டது. அந்த ஜில்லாக்களில் கிரிமினல் வழக்குகளைத் தீர்த்துவைக்க அநேக மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமிக்கப்பட்டனர்.

வடநாட்டு அகதிகள்

வட இந்தியாவில் கொள்ளை, கொலை, அடிதடி முதலிய கொடுமைகளினின்றும் தப்பிவந்த வட நாட்டினரை நமது சர்க்கார் முகமலர்ச்சியுடன் வரவேற்றுத் தஞ்சம் அளித்தனர். அவர்கள் மனவமைதியும், உள்ளக் குளிர்ச்சியும் அடைந்து நல்வாழ்வு பெறவேண்டுமென்னும் சீரிய நோக்கத்துடன், சுயநலத்துக்கு இடங்கொடாமல் அவர்களுக்கு நமது ஜன நாயக சர்க்கார் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் ஆகிய வசதிகள் தந்து உதவியுள்ளார்கள்.

அவர்கள் தங்கி வசிப்பதற்கான கீழ்ப்பாக்கத்திலுள்ள 'லட்டெரல் கார்டன்ஸ்' என்னும் அழகிய தோட்ட பங்களாவிலும், சைதாப்பேட்டையிலுள்ள விடுமுறை விடுதியிலும், ஆவடியிலுள்ள எமிக்ரேஷன் டெப்போவிலும் இடவசதி செய்து தரப்பட்டுள்ளது.

நாடு நகரங்களை விட்டு, வீடு வாசல்களைத் துறந்து, செல்வமும் சீரும் குலைந்து, நெஞ்சம் குமுறி, உள்ளம் நொந்து, மனமுடைந்து வெளியேறிவந்த துர்ப்பாக்கிய அகதிகளுக்கென நமது சர்க்கார் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்துள்ளார்கள்.

சர்க்கார் அனுமதித்துள்ள உணவுப்படியை அவர்கள் சனிக்கிழமைதோறும் பெற்று வருகின்றனர். அவர்களுக்கு வேண்டிய உணவுப்பங்கீடு கார்டுகளும் தயாரித்து அளிக்

கப்பட்டுள்ளன. அவர்களுடைய உபயோகத்தின் பொருட்டு ரூ. 30,000-க்குத் துணிகள் வாங்கி உடைகள் தயாரித்து அவர்களுக்கு வழங்கப்பட்டன. ரூ. 1,200-க்கு மாதர்களுக்குப் புடவைகள் வழங்கப்பட்டன.

அவர்களுடைய சுகாதார வசதிகளை அதற்கென நியமித்துள்ள விசேஷ வைத்திய அதிகாரி கண் காணித்து வருகிறார். அகதிகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பொது ரேடியோ செட்டுகள்

1939-ம் ஆண்டு முதல் இந்த ஜில்லாவில் பொதுஜன ரேடியோ செட்டுகள் நிறுவ ஆரம்பித்தார்கள். ஆனால், நமது ஜனநாயக சர்க்கார் பதவி ஏற்றுக் கொண்ட பிறகே, இவைகள் அதிகமதிகமாக நிறுவப்பட்டு வருகின்றன. 1946-ம் ஆடு ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் பஞ்சாயத்து போர்டுகளில் 24 ரேடியோ செட்டுகளும், முனிசிபாலிடிகளில் 7 ரேடியோ செட்டுகளும் அமைக்கப்பட்டிருந்தன. இப்போது செங்கற்பட்டு ஜில்லா முழுவதும் மொத்தம் 59 ரேடியோ செட்டுகள் பணியாற்றி வருகின்றன. அவை பஞ்சாயத்து போர்டுகளில் 40-ம், தனி ஸ்தாபனங்களில் 4-ம், சர்க்கார் ஸ்தாபனங்களில் 2-ம் முனிசிபாலிடிகளில் 13-மாக உள்ளன.

மேற்படி ரேடியோ செட்டுகள் சரிவரப் பணியாற்ற வேண்டி செங்கற்பட்டிலும், சென்னை நகரிலும் 2 ரேடியோ சேவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ரேடியோ செட்டுகளின் நிர்வாகத்துக்கான செலவிற்காக நமது ராஜ்ய சர்க்கார் வருஷவாரி ரூ. 14,750 வழங்குகிறார்கள்.

ரேடியோ செட்டுகள் இந்த ஜில்லாவின் பல்வேறு பிரதேசங்களிலும் நிறுவப் பெற்றுள்ளன. அந்த இடங்கள் வருமாறு: பூவிருந்தவல்லி, திருக்கழுக்குன்றம், திருப்போரூர், செய்யாறு, வாலாஜாபாத், உத்திரமேரூர், திருவொற்றியூர், பொன்னேரி, ஆரணி, ஸ்ரீபெரும்பூதூர்,

குன்றத்தூர், வில்லிவாக்கம், ஆலந்தூர், தாம்பரம், நாராயணகுப்பம், எடக்கநாடு, சத்தியவேடு, மாஞம்பதி, திருவூர், தண்ணீர்க்குளம், பாக்கம், அகரம் நெல்லிக்குப்பம், வாலாஜாபாத் போர்டு உயர்தரப்பள்ளி, பூவிருந்தவல்லி போர்டு உயர்தரப்பள்ளி, பொன்னேரி போர்டு உயர் நிலைப் பள்ளி, உத்திரமேரூர் போர்டு உயர் நிலைப்பள்ளி, சர்க்கார் க்ஷயரோக ஆஸ்பத்திரி, தாம்பரம், ஸீனியர் செர்டிபைட் பாடசாலை, செங்கற்பட்டு, பூவிருந்தவல்லி சுகாதார ஆபீஸ், எஸ். எ. பி. யூனிட், ரெட்ஹில்ஸ், காஞ்சீபுரம் முனிசிபாலிடியில் 5 செட்டுகள்.

சமுதாய இழிவுகள் நீங்க

பொதுவாக, சமுதாய முன்னேற்றத்துக்காகவும் நமது நாட்டின் பண்பாட்டுச் சிறப்பை நிலை நிறுத்தவும் ஒரு சில முக்கிய சீர்திருத்தங்களை மக்கள் சர்க்கார் வெகு துணிவோடும் தீர்க்க தரிசன நோக்கோடும் புகுத்தியுள்ளனர்- அவற்றுள் சில பின்வருமாறு :

தேவதாசி முறை நீக்கம், குற்ற பரம்பரை நீக்கம், இரு தார முறை நீக்கம், உயிர்ப்பலி தவிர்த்தல் முதலிய சட்டங்களாகும். இவையல்லாமல் இந்துமத ஆலயங்கள், அற நிலையங்கள் ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாத்து நிர்வகிக்கவும் ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டம்

> ● ஆண் பெண் உள்ளிட்ட எல்லாப் பிரஜைகளும் ஜீவனோபாயத்துக்காகப் போதிய வழிவகைகளைச் சமமாகப் பெறவேண்டும்.
> ● பொது நலத்தை முன்னிட்டு, சமூக சொத்து சுதந்திரங்களின் சொந்தமும் கட்டுப்பாடும் வகுக்கப்படவேண்டும்.
> ● செல்வமும் பொருள் உற்பத்திச் சாதனங்களும் பொதுஜனங்களுக்குப் பாதகமாகாத ரீதியில் ஒரு சிலரிடம் சேர்ந்து விடாதபடி, பொருளாதார அமைப்பு இயங்கி வரப் பார்த்துக் கொள்ளவேண்டும்.
>
> இந்திய திட்டக் கமிஷனின் கொள்கைகள்.

காலம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. காலச்சக்கரத்தை யார்தான் தடைசெய்ய முடியும்? ஆயினும் அதன் நியதியை உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வாழ்வை ஆராய்ந்து அமைத்துக்கொள்வோரும் இல்லாமலில்லை. அத்தகைபோர் காலத்தோடு சேர்ந்து முன்னேறும் ஆற்றலைப் பெறுகின்றனர்.

சென்ற காலத்தை நினைவில் வைத்துக்கொண்டு, நிகழ்காலத்தில் கடமைகளைச் செய்தவண்ணமே, எதிர்

காலத்தைப்பற்றியும் சிந்திக்கும் திறமை, மனிதர்களுக் குள்ள ஒரு சிறப்பான ஆற்றலாகும். மிருகங்கள் அன்றாட வாழ்க்கையைப்பற்றிமட்டும் கவலைப்படுகின்றன. நேற் றைய நினைவும், நாளைய எண்ணமும் இல்லாத நிலை, நாகரிகம் வளராததன் அறிகுறி.

பொதுவான இந்த உண்மைகள் தனி மனிதனுக்கு மட்டும் பொருந்துவன அல்ல. மொத்த சமுதாயத்துக்கும், சிறப்பாக நம் நாட்டிற்கும், அப்படியே பொருந்தும்.

மக்கள் பிரதிநிதிகள் 1946-ம் ஆண்டு அரசாங்கத்தை ஏற்றபோது எல்லாவித அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அதிகாரவர்க்க அமைப்பும், ஆட்சிமுறையும் அப்போது இருந்து வந்தன. அவற்றுக்குட் பட்டே மக்கள் அரசாங்கம் செயலாற்ற வேண்டியிருந்தது. அதன் பிறகு 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி யன்று இந்தியா சுதந்திரம் அடைந்ததும், அநேக புதிய பிரச்னைகளும் பொறுப்புகளும் ஏற்பட்டன. அவற்றை உடனடியாகத் தீர்ப்பதில் தங்கள் முழு கவனத்தையும் அரசாங்கம் செலுத்த வேண்டியதாயிற்று. இவை தவிர, இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

மக்கள் அரசாங்கம் கடந்த ஐந்தாண்டுகளாக இத்தனை இடையூறுகளுக்கிடையேயும், பல்வேறு துறைகளிலே சிறந்த காரியங்களைச் சாதித்திருப்பதை, இது வரை கூறி வந்த விவரங்களால் அறியலாம். நிகழ்கால பிரச்னைகளைத் தீர்ப்பதோடு இந்த அரசாங்கம் நின்றுவிடவில்லை. எதிர் கால க்ஷேமத்துக்கு அவசியமான திட்டமொன்றை அவர் கள் திறம்பட வகுத்துள்ளனர். அதற்கு ஐந்தாண்டுத் திட் டம் என்று பெயர். இந்திய நாட்டின் எல்லாத்தேவைகளை யும் சரிவர ஆராய்ந்து, அவற்றைப் படிப்படியாகத் தீர்க்க வழிகோலப்பட்டது. இங்குள்ள இயற்கைச் செல்வங்களை யெல்லாம் நன்கு பயன்படுத்துவதற்கான வழி துறைகள் விவரிக்கப்பட்டன. சாகுபடியாகாமல் கிடக்கும் தரிசு நிலம், நிலத்துக்கடியிலுள்ள உலோகவகைகள், நதிகளில்

ஓடும் ஏராளமான நீர், சோம்பிக்கிடக்கும் அளவற்ற மனித சக்தி முதலியவற்றைத் தக்கவாறு உபயோகித்து, நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய ரீதியில் தயாரான இத் திட்டம், நம்சென்னை ராஜ்யத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முனைகிறது. இதை நிறைவேற்ற ஐந்தாண்டுகளுக்கு 137 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப் பெற்றிருக்கிறது.

மக்கள் சர்க்கார் ஏற்படாததற்கு முன்பு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கூட்டுறவு முதலிய தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10,61,84,000 ரூபாய் செலவிடப்பட்டு வந்தது. ஜனப்பிரதிநிதிகள் ஆட்சிவந்ததும், இந்தச் செலவு 42,22,50,000 ரூபாய் ஆயிற்று. எனவே, தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னை விட இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. இவற்றுள் முக்கியமாக, நீர்பாசனத்துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தி காணப்படுகிறது. 150 வருஷ ஆங்கில ஆட்சியில் சுமார் 18 கோடி ரூபாய் மாத்திரமே, இந்த ராஜ்யத்தின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகச் செலவிட்டார்கள். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் இதற்காக மக்கள் சர்க்கார் செலவிட்டுள்ளனர். இந்த ஆண்டில்மட்டும் சுமார் 10 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதன் விளைவாக, நாடெங்கும் அநேக நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் துரிதமாக நிறைவேறி வருகின்றன. சிறப்பாக, வறண்ட இடங்களிலும், ஜமீன், இனும் பிரதேசங்களிலும் இவை விசேஷமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தவிர, மற்ற ராஜ்யங்களோடு ஒத்திட்டுப்பார்த்தால் சென்னை ராஜ்யம் பலவகையிலும் முன்னேறியிருப்பது நன்கு விளங்கும்.

அஸ்ஸாம், கிழக்கு பஞ்சாப் ஆகியவை உள்பட எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய

வற்றிற்கு 32 கோடி ரூபாய் செலவிடுகின்றன. அவற்றுள் 13 கோடி ரூபாய் அதாவது மூன்றில் ஒரு பங்குக்குமேல், நம் ராஜ்யம் செலவழிக்கின்றது. பீஹார், மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்கள் சேர்ந்து 11 கோடி ரூபாய் செலவழிக்கின்றன. இவை யெல்லாவற்றையும் விட இரண்டு கோடிக்கு மேலாக, நம் ராஜ்யம் ஒன்றே செலவிடுகிறது. உத்தரப் பிரதேசத்தை விட 3 மடங்கும், பீஹாரைவிட 6 மடங்கும், நம் ராஜ்யம் செலவிடுகின்றது. பம்பாய் ராஜ்யம் இந்த வகையில் செலவழிக்கும் ரூபாய் 8 கோடியேயாகும்.

நம் ராஜ்யத்தில் தேசிய அபிவிருத்திக்காகும் செலவில் சுமார் 50 சத விகிதம் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றுக்கே செலவிடப்படுகிறது. இதற்காக வங்காளத்தில் 7 சத விகிதமும், பீஹாரில் 12 சத விகிதமும், பம்பாயில் 29 சத விகிதமும், மத்தியப் பிரதேசத்தில் 30 சத விகிதமும், ஒரிஸ்ஸாவில் 22 சத விகிதமும், உத்தரப் பிரதேசத்தில் 41 சத விகிதமும் செலவிடப்படுகின்றன.

அடுத்த ஐந்தாண்டுகளில் கீழ்க்காணும் முறையில் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும் தொகைகள்.

	கோடி ரூபாய்.
1. நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்கள்	80·4
2. விவசாயம், கிராமாபிவிருத்தி ...	21·9
3. கைத்தொழில்கள்	2·1
4. ரஸ்தா அபிவிருத்தி	5·0
5. கல்வி, சுகாதாரம், இருப்பிட வசதிகள், பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் முதலான மற்ற சமூக நிர்மாண வேலைகள்	27·6
ஆக மொத்தம் ...	137·0

நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுக்காக எல்லா ராஜ்யங்களுக்குமாகச் சேர்ந்து மொத்தம் 191 கோடி ரூபாய் செலவிட உத்தேசித்துள்ளன. இதில் சென்னை ராஜ்யம் ஒன்றே 80 கோடி ரூபாய் செலவிடும். மற்ற ராஜ்யங்களெல்லாம் சேர்ந்து 111 கோடி செலவிடும். இதில், மற்றொரு முக்கிய விஷயம் கவனிக்கத்தக்கது. அதாவது, அந்தந்த ராஜ்யங்கள் நிறைவேற்றும் திட்டங்கள் அல்லாமல், பொதுவாக சில பெரிய திட்டங்களை மத்திய சர்க்காரே நிறைவேற்ற முடிவுசெய்துள்ளனர். அவற்றிற்காக 176 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்களால் பஞ்சாப், பீஹார் மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய ராஜ்யங்களுக்கே அதிகமான பலன் ஏற்படும். நம் ராஜ்யத்துக்கு அது போன்ற உதவி அதிகம் இல்லை.

செலவிடுவதில் மட்டும், நம் ராஜ்யம் முன்னணியில் நிற்கவில்லை. சிறந்த பலனைக் காண்பதிலும் அது முன் நிற்கிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் உத்தரப் பிரதேசம் 800,000 டன், பீகார் 874,000 டன், மேற்கு வங்காளம் 787,000 டன், பஞ்சாப் 650,000 டன், பம்பாய் 367,000 டன் தானியம் அதிகயாக உற்பத்தி செய்யும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் 834,000 டன் உணவுப் பொருள் அதிகம் விளைவிக்கும். எனவே, பீஹாருக்கு அடுத்தபடியாக, அதிக உற்பத்தி செய்யும் ராஜ்யம் சென்னையேயாகும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின், ஒரு சிறப்பான அம்சம், அனுபவ சாத்தியமானதாக இருப்பதேயாகும். நாட்டின் எதிர் கால வாழ்வில் நோக்கங்கொண்ட அதே நேரத்தில், மக்களின் நிகழ் கால நிலையையும் சர்க்கார் மறக்கவில்லை. ஜனங்களுக்கு அதிக கஷ்டமின்றியே, இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியைச் சேகரிக்க உத்தேசித்துள்ளனர். பொதுஜன சுபிட்சத்துக்கான காரியங்களை உடனடியாகச் செய்தால் மக்கள் தாமாகவே மனமுவந்து அரசாங்கத்துக்கு அதிக வருமானம் அளிக்கத் தயங்கமாட்டார்கள் அல்லவா?

சர்க்கார் வருமான விவரம் வருமாறு:—

	கோடி ரூபாய்.
1. நிலவரி மூலம் சுமார்	30
2. அரசாங்கச் செலவில் சிக்கனம் செய்வது மூலம்	5
3. டெபாசிட் செலவினுல் மிகுதியாகும் தொகை	8
4. அரசாங்கக் கடன் வசூல் மூலம் ...	17
5. ரிசர்வ் நிதியிலிருந்து திருப்பிப் பெறும் வகையில்	27
6. அதிகப்படி வரிவிதிப்பின் மூலம் ...	20
7. மத்திய சர்க்காரிடமிருந்து மான்யம்	30
ஆக மொத்தம் ...	137

முன்பெல்லாம் நாட்டில் அமைதி நிலைநிறுத்தும் பொறுப்பைமட்டுமே அரசாங்கம் வகித்து வந்தது. சுருங்கச் சொன்னுல் அது போலீஸ் ராஜ்யமாக இருந்தது. ஆனுல் இன்றோ மக்கள் சர்க்கார் பராமரிப்பு ஆட்சியை நடத்துகின்றனர். அதாவது, பொது ஜன சர்க்காரின் வருமானமும் செலவும், மக்களின் சமூக, கலாசார, பொருளாதார க்ஷேமத்தை லட்சியமாகக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. சர்க்கார் வசூலிக்கும் பணம் முழுவதும், மக்களின் பல்வேறு சௌகரியங்களுக்கே திரும்பி வருகிறது. அதற்காக பல்வேறு சமூக நல வேலைகள் துரிதமாக நிறைவேற்றவே சர்க்கார் முயன்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் சிறந்த அபிவிருத்தியை ஏற்படுத்திய மக்கள் சர்க்கார் அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்சொன்ன திட்டத்தை வெற்றியோடு நிறைவேற்றி, நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கி, பொது ஜனங்கள் சுபிட்சமாக வாழ வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

முக்கியக் குறிப்புகள்

நாற்புற எல்லைகள்

கிழக்கில்—வங்காளக் குடாக்கடல்.
மேற்கில்—வட ஆற்காடு, சித்தூர் ஜில்லாக்கள்.
வடக்கில்—நெல்லூர் ஜில்லா.
தெற்கில்—தென் ஆற்காடு ஜில்லா.

தாலூகாக்கள்

பொன்னேரி தாலூகா, திருவள்ளூர் தாலூகா, சைதாப்பேட்டை தாலூகா, ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா, செங்கற்பட்டு தாலூகா, காஞ்சீபுரம் தாலூகா, மதுராந்தகம் தாலூகா.

இந்த ஜில்லாவின் விஸ்தீர்ணம் சுமார் ...	3,100	சதுர மைல்.
இங்குள்ள கிராமங்களின் எண்ணிக்கை.	2,200	

வைத்திய ஸ்தாபனங்கள்

சர்க்கார் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரி—செங்கற்பட்டு.
சர்க்கார் ஆஸ்பத்திரி—காஞ்சீபுரம்.
சர்க்கார் என்ஜினியரிங் கல்லூரி டிஸ்பென்சரி—கிண்டி.
போலீஸ் ஆஸ்பத்திரி—பரங்கிமலை.
சர்க்கார் டிஸ்பென்சரி—பொன்னேரி, பூவிருந்தவல்லி திருவள்ளூர்.
அகதி முகாம் ஆஸ்பத்திரி—ஆவடி.

லோகல் பண்டு டிஸ்பென்சரி—ஆலந்தூர், ஆரணி, செய்யூர், சூணம்பேட்டை, கும்மிடிபூண்டி, மதுராந்தகம், நாகலாபுரம், பழவேற்காடு, சத்தியவேடு, ஸ்ரீபெரும்பூதூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், திருவொற்றியூர், உத்திரமேரூர். வெங்கல்.

முனிசிபல் டிஸ்பென்சரி—பெரிய காஞ்சீபுரம், சின்ன காஞ்சீபுரம்.
சர்க்கார் க்ஷயரோக ஆரோக்கிய விடுதி—தாம்பரம்.
குஷ்டரோகிகளுக்கான ஆரோக்கிய நிலையம்—திருமணி.

கல்வி ஸ்தாபனங்கள்

சென்னை கிருஸ்துவக் கல்லூரி—தாம்பரம்.
பச்சையப்பன் கல்லூரி—காஞ்சீபுரம்.
என்ஜினியரிங் கல்லூரி—கிண்டி.
சர்வகலாசாலை தொழில் நுணுக்கக் கல்லூரி—கிண்டி.
சென்னை தொழில் நுணுக்க கல்வி ஸ்தாபனம்—குரோம்பேட்டை.
சர்க்கார் பயிற்சி பாடசாலை—செங்கற்பட்டு.
மாதர்க்குரிய சர்க்கார் செகண்டரி அண்டு பயிற்சி பாடசாலை—காஞ்சீபுரம்.
ஞானோதய பயிற்சி பாடசாலை—பரங்கிமலை.
சர்க்கார் அடிப்படைக் கல்வி பயிற்சி பாடசாலை—திரூர்.
மாதர்க்குரிய சர்க்கார் அடிப்படைக் கல்வி பயிற்சி பாடசாலை—காஞ்சீபுரம்.

தொழில் ஸ்தாபனங்கள்

காஞ்சீபுரம்—காஞ்சீபுரம் ஸில்க் டுவிஸ்ட்டிங் பாக்டரி, வேத விநாயகர் அண்டு கோ (டையிங் அண்டு பிளீச்சிங்).

திருவொற்றியூர்—தி கிராம்டன் என்ஜினியரிங் ஒர்க்ஸ், அஜாக்ஸ் புரொடக்ட்ஸ், லிமிடெட், ராஜ் மெக்கானிக்கல் ஒர்க்ஸ். தி வெஸ்ட்டெர்ன் இண்டியா மாச் பாக்டரி, சியா அப்துல் கரீம் சாயப் அண்டு கோ (டானரி), தி சௌத் இண்டியா ஸ்கின் கார்ப்பொரேஷன் டானரி, ஈஸ்டர்ன் லெதர் கம்பெனி.

செங்கற்பட்டு—லிங்க் இன்டஸ்ட்ரீஸ், லிமிடெட்.

பரங்கிமலை— தி சௌத் இண்டியன் பஸ் ட்ரான்ஸ்போர்ட், லிமிடெட்.

பல்லாவரம்—கார்டன் உட்ராப்ட்ஸ் டானரி அண்டு பாக்டரி.

ஜமீன் பல்லாவரம்—ஜி. கோவிந்தராஜுலு நாயுடு (நாயுடு ஷாப்) டானெரி, எஸ். எ. அப்துல் ரஹீம் அண்டு கோ 'நரி ஷாப்' டானெரி.

குரோம்பேட்டை—பேயோட்டி ஷாப் டானெரி, சி. கல்யாணம் அண்டு கோஸ் 'கன்னத் டானெரி' டி. டி. மூர்த்தி அண்டு சன்ஸ் டானெரி, பழனியப்ப செட்டியார் டானெரி, லைட் லெதர், லிமிடெட்.

பூவிருந்தவல்லி—காந்தா இன்டஸ்ட்ரீஸ் அண்டு ஸையன்டிபிக் ட்ரேடிங் கோ.

மாதவரம்—சீனிவாசன் கம்பெனி 'மேட்டை ஷாப் டானெரி', பாஸெல் கரீம் 'நாய்க்கர் ஷாப்' டானெரி, பி. ஹாஜி பாஷா சாயப் அண்டு கோ டானெரி, எம். மகமத் ஹுஸேன் 'மூலைக் கடை' டானெரி, சௌத் இண்டியா லெதர் கோ, கினு டானெரி, மகமத் பஷீர் அண்டு கோ டானெரி.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

சேயாற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்று அமைத்தல்—62·6 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நேமம் ஏரியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கால்வாய் வெட்டுதல்—மதிப்பிட்டுள்ள செலவு ரூபாய் 6·4 லட்சம்.

பழைய செங்கல்வராயன் கால்வாயைப் புதுப்பித்தல்—மதிப்பிட்டுள்ள செலவு ரூபாய் 24,000.

சாவரி சிற்றாற்றுக்குக் குறுக்கே ஓர் அணைக்கட்டு அமைத்தல்—(பொன்னேரி தாலுகா) மதிப்பிட்டுள்ள செலவு ரூபாய் 62.000.

ரெட்டித் தாங்கலைப் புதுப்பித்து அபிவிருத்தி செய்தல்—(பொன்னேரி தாலுகா) மதிப்பிட்டுள்ள செலவு ரூபாய் 32.000.

அயனம்பாக்கம் ஏரிக்குத் தண்ணீர் சப்ளை செய்ய கூவம் ஆற்றுக்குக் குறுக்கில் அணைக்கட்டு ஒன்று அமைத்தல்—மதிப்பிட்டுள்ள செலவு ரூபாய் 1.05.000.

ரஸூல கண்டிகை எல்லைக்குள் அடங்கிய ரஸூகுண்ட்ட வெங்காவுக்குக் குறுக்கே நீர் நிலை ஒன்றும், கல்லணை ஒன்றும் அமைத்தல்—(பொன்னேரி தாலுகா)— இதற்குச் செலவாகும் தொகை இவ்வளவென்று மதிப்பிடப்படவில்லை.

வீணுய்ப் போகிற சிற்ருேடை ஒன்றின் ஜலத்தை மடக்கிக்கட்ட ஒட்டியம்பாக்கம் ஏரிகரையை உயரமாக அமைத்தல்—(சைதாப் பேட்டை தாலுகா) இதற்கு மதிப்பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூபாய் 20,000.

தாமல் கசம், கால்வாய்களைப் பழுது பார்த்தல்—மதிப்பிட்டுள்ள செலவு ரூபாய் 2,700.

முசறிவாக்கம் கசம், கால்வாய்களைப் பழுது பார்த்தல்—மதிப் பிட்டுள்ள செலவு தொகை ரூபாய் 26,000.

மெய்யூர் ஏரி, சப்ளை கால்வாய் ஆகியவற்றைப் புதுப்பித்தல்—மதிப்பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூபாய் 23,900.

பிணையாற்றுக் கால்வாயில் தூர் எடுத்தல்—மதிப்பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூபாய் 7,400.

படலம் புலிப்பார்கோயில் கால்வாயைப் பழுது பார்த்தல்—மதிப் பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூபாய் 11,200.

அல்லிக்குழி ஓடையிலிருந்து சென்ருயன்பாளையம் ஏரிக்குத் தண்ணீர் சப்ளை செய்யும் கால்வாயைப் புதுப்பித்தல் (திருவள்ளூர் தாலுகா)—மதிப்பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூபாய் 20,000.

பிசாத்தூருக்கு அருகில் உள்ள ஆரணி ஆற்றுக்குக் குறுக்கே நீர் நிலையமைத்தல் (திருவள்ளூர் தாலுகா)—மதிப்பிடப்பட்டுள்ள செலவு தொகை ரூபாய் 95 லட்சம்.

காணவேண்டிய இடங்கள்

மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், திருப்போரூர், காஞ்சீபுரம், ஆத்தூர்பண்ணை, திருமணி, பழவேற்காடு, ஸ்ரீபெரும்பூதூர்.

1950–51-ம் ஆண்டு முடிய செங்கற்பட்டு ஜில்லாவில் மேட்டூர் மின் சாரத்திட்டத்தின் மூலம் சர்க்கார் மின்சார இலாகா நேரடியாக மின் சாரம் வழங்கும் கிராமங்கள்.

திருவள்ளூர் தாலூகா

ஈக்காடு, கடம்பத்தூர், ஒண்டிக்குப்பம்.

காஞ்சீபுரம் தாலூகா

தாமல், வெய்யாவூர், வாலாஜாபாத், வேங்குடி. பாலு செட்டி சத்திரம், பஞ்சுப்பேட்டை, அச்சுக்காண்டூர், பூசவாக்கம்.

சென்னை மின்சாரத் திட்டத்தின் மூலம் சர்க்கார் மின்சார இலாகா நேரடியாக மின்சாரம் வினியோகிக்கப்படும் இடங்கள் :

சைதாப்பேட்டை, சின்னமலை, கிண்டி, செம்பியம் பஞ்சாயத்து உள்ளிட்ட சென்னை நகரம், பல்லாவரம், மீனம்பாக்கம், தாம்பரம், குரோம்பேட்டை, விருகம்பாக்கம், திருமங்கலம், அனகாபுத்தூர், ராஜ கீழ்ப்பாக்கம், மணப்பாக்கம், பம்மல், சந்தோஷபுரம், சுன்னேரிக் குப்பம், பூவிருந்தவல்லி, வலசரவாக்கம், ஹஸ்னுபுரம் (நேரு நகரம்), தாங்கநல்லூர், துலுக்கஞ்சேரி, வெங்கடாபுரம், குண்ணத்தூர், செங்கற்பட்டு. மானஞ்சேரி, திருநாகேஸ்வரம், அகரம் மேல், அரும் பாக்கம், செம்பரம்பாக்கம், கொல்லன்சாவடி, கரம்பாக்கம், கடப்பேரி

கிராமம், கோடம்பாக்கம், மாடவிளாகம், மாங்காடு, மேப்பூர், மலையம்பாக்கம், மாடம்பாக்கம், மூன்றக்கட்டளை, நசரத்பேட்டை, போரூர், பெரியக்கூடல், சேலையூர், திருவான்மியூர், வரதராஜபுரம், வில்லிவாக்கம், ஆலந்தூர்.

லைசென்ஸ் பெற்றவர்கள் மூலம் மின்சாரம் வினியோகிக்கப்படும் கிராமங்களும், பட்டணங்களும்

லைசென்ஸ் பெற்றவர்—காஞ்சீபுரம்.
ஜில்லா—செங்கற்பட்டு.
தாலூகா—
கிராமங்கள் பட்டணங்கள்—காஞ்சீபுரம்.
லைசென்ஸ் பெற்றவர்கள்—செங்கற்பட்டு.
ஜில்லா—செங்கற்பட்டு.
தாலூகா—செங்கற்பட்டு.
கிராமங்கள், பட்டணங்கள்—செங்கற்பட்டு, திருமணி, திம்மவரம், ஆத்தூர், மேலமாயூர், எடயனக்காடு, வடபாதி, வில்லியம்பாக்கம். வெம்பாக்கம், ஆத்தூர்க்குப்பம்,
லைசென்ஸ் பெற்றவர்—திருவள்ளூர்.
ஜில்லா—செங்கற்பட்டு.
தாலூகா—திருவள்ளூர்.
கிராமங்கள், பட்டணங்கள்—ஐவேலி அகரம், திருவள்ளூர் டவுன், பெரும்பாக்கம், காக்களூர், பெரியகுப்பம், புளியங்குப்பம், புங்கத்தூர்.
லைசென்ஸ் பெற்றவர்—திருவொற்றியூர்.
ஜில்லா—செங்கற்பட்டு.
தாலூகா—திருவொற்றியூர்.
கிராமங்கள், பட்டணங்கள்—திருவொற்றியூர், காலாடிப்பேட்டை; சாத்தங்காடு, செம்பியம், சிறுவள்ளூர், பெரவள்ளூர், அயனுவரம், சின்ன செம்பரம்பாக்கம்.

மேட்டூர் மின்சாரத்திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்பெறும் மின்சார நிலையங்கள்.

எக்ஸ்ட்ரா ஹைடென்ஷன் மின்சார டிரான்ஸ்பார்மர் நிலையம்.

காஞ்சீபுரம்.

ஹைடென்ஷன் மின்சார டிரான்ஸ்பார்மர் நிலையம்.

காஞ்சீபுரம்.

சென்னை மின்சாரத்திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கப்பெறும் மின்சார நிலையங்கள்.

எக்ஸ்ட்ரா ஹைடென்ஷன் மின்சார டிரான்ஸ்பார்மர் நிலையம்

கொரட்டூர்.

ஹை டென்ஷன் மின்சார டிரான்ஸ்பார்மர் நிலையங்கள்

குரோம்பேட்டை, கோடம்பாக்கம், மீனம்பாக்கம், நசரத்பேட்டை, பல்லாவரம், போரூர், பரங்கிமலை, தாம்பரம்.

வினியோக டிரான்ஸ்பார்மர் நிலையங்கள்

விருகம்பாக்கம், பூவிருந்தவல்லி.

அபிவிருத்திப் பட்டியல்

விவசாயம்

மொத்த விஸ்தீரணம்	19,65,897	ஏக்கர்.
சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்கள்.	11,22,830	,,
சாகுபடியாகும் நிலங்கள்	9,94,204	,,

இந்த ஜில்லாவில் நெல், ராகி, வேர்க்கடலை பயிராகின்றன.

சென்ற நான்கு வருஷ காலத்தில் விற்பனையான உரவகைகள்

பிண்ணாக்கு ...	35,750	டன்.	814	பவுண்டு.
ரசாயன உரம் ...	7,325	,,	2,079½	,,
எலும்புமா ...	210	,,	1,085	,,
பசுந்தழை விதைகள்.	186	,,	1,942	,,

64,000 ஏக்கர் பூமியில் விதைக்க 1,147 டன் 1,100 பவுண்டு எடையுள்ள உயர்ந்த ரக வித்துக்கள் விற்பனை யாயின. அவற்றின் உபயோகத்தால் கிடைத்த அதிகப்படியான அரிசி ...	3,430	டன்.
கிணறுகள் வெட்டவும், நீர்ப்பாய்ச்சவும் 1,201 ரயத்துகளுக்கு பம்ப்செட்டுகள் விற்கப்பட்டன. இவற்றின் உபயோகத்தால் கிடைத்த அதிகப்படியான உணவுத் தானியங்கள்	108	,,
15 டிராக்டர்களும் புல்டோஸர்களுங் கொண்டு 3,691 ஏக்கர் பூமி உழுது பயிர் செய்யப்பட்டது; 700 பூமி சமப் படுத்தி சாகுபடி செய்யப்பட்டது. இவற்ருல் கிடைத்த அதிகப்படியான உணவுத் தானியங்கள்	1,110	,,
218 ஆயில் என்ஜின்கள் உபயோகிக்கப் படுகின்றன.		
ரூ. 20,000 பெறுமானமுள்ள 8 டன் 714 பவுண்டு பூச்சிக் கொல்லி மருந்து களின் உபயோகத்தால் பாதுகாக்கப் பட்ட உணவுத் தானியங்கள் ...	4,015	,,
நான்கு வருஷ காலத்தில் இந்த ஜில்லா வில் தோண்டப்பெற்ற குழாய்க் கிணறுகள்	779	
4,167 ரயத்துக்களுக்கு வழங்கிய தக்காவிக்கடன்	2,99,758	ரூபாய்.

திரூர் குப்பத்தில் நெல் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று பணியாற்றி வருகிறது.

1950-ம் ஜூலை மாதம் முதல் வாரத்தில் 154,789 மரங்கள் நட்டுப் பயிராக்கப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

	செலவு ரூபாய்.	
செய்யாற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்ட	6·26	லட்சம்.
நேமம் ஏரியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு ஜல சப்ளை கால்வாய் வெட்ட.	6·4	,,
செங்கல்வராயன் ஜல சப்ளை கால்வாய் பழுது பார்க்க	24	ஆயிரம்.
சாவரி சிற்ருற்றுக்குக் குறுக்கே அணைக் கட்டு அமைக்க	62	,,
ஆர்தூர் ரெட்டித் தாங்கலைப் புதுப்பிக்கவும் அபிவிருத்தி செய்யவும் ...	32	,,
அயனம் பாக்கம் ஏரிக்கு ஜல சப்ளை செய்ய கூவம் ஆற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு அமைக்க	1,05,000	ரூபாய்.
ராஸகுண்ட்ட வெங்காவுக்குக் குறுக்கில் நீர் நிலையம் அமைக்க... ...	செலவு மதிப்பு கணிக்கப் படவில்லை.	
ஒட்டியம் பாக்கம் ஏரிகரையை உயர்த்தி வீணுகும் ஜலத்தைக் கட்டி மடக்க	20	ஆயிரம்.
தாமல் கசம், கால்வாய்களைப் பழுது பார்க்க	8,700	
முசிறிவாக்கம் கசம், கால்வாய்களைப் பழுது பார்க்க	26	ஆயிரம்.
மெய்யூர் ஏரி, சப்ளை கால்வாய் இவற்றைப் பழுது பார்க்க	23,900	
பிணையாற்றில் தூர்வார	7,400	
பாடலம் புலிப்பார் கோயில் கால்வாயைப் பழுது பார்க்க	11,200	
அல்லிக்குழி ஓடையிலிருந்து சேன்ராயன் பாளையம் ஏரிக்கு ஜல சப்ளை செய்யும் கால்வாயைப் புதுப்பிக்க	20	ஆயிரம்.
ஆரணியாற்றுக்குக் குறுக்கே நீர் நிலையம் அமைக்க	95	லட்சம்.

மின்சாரத் திட்டம்

மேட்டூர் மின்சாரத் திட்டத்தின் மூலம் வீட்டுபயோகத்துக்கும், விவசாயத்துக்கும், கைத்தொழில்களுக்கும் மின்சாரம் விநியோகிக்கப் படுகிறது ; 37 கிராமங்கள் மின்சார வசதி பெற்றுள்ளன.

சென்னை மின்சாரத் திட்டத்தின் மூலம் 44 கிராமங்கள் மின்சார வசதி பெற்றுள்ளன.

தற்போது மக்கள் உபயோகிக்கும் மின்சார அளவு 4,937,894 யூனிட்டுகள்.

ரஸ்தாக்கள்

இந்த ஜில்லாவில் ஐந்து வருஷ காலத்தில் 155 மைல் நீளமுள்ள ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டன.

சர்க்கார் ரஸ்தாக்களின் மொத்த நீளம் 650 மைல், சுமார் ரூ. 55 லட்சம் மதிப்புள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

செங்கற்பட்டுக்குச் சமீபத்தில் பாலாற்றின்மீது பாலம் அமைத்தல். இதற்கான செலவு ரூ. 19 லட்சம்.

மதராஸிலிருந்து தெற்கு தேசீய சாலையில் தாம்பரம் வரையிலும்,

மதராஸிலிருந்து வடக்கு தேசீய சாலையல் ரெட்ஹில்ஸ் வரையிலும்,

திருவள்ளூரிலிருந்து திருவள்ளூர் ரெயில்வே ஸ்டேஷன் வரையிலும்,

காஞ்சீபுரம் - வந்தவாசி ரோடில் சுமார் 1½ மைல் வரையிலும்,

சிமிட்டி - கான்கிரீட் போடுதல். இவற்றுக்கான செலவு ரூ. 25 லட்சம்.

காஞ்சீபுரம் முனிசிபல் எல்லையில், செங்கற்பட்டு – காஞ்சீபுரம் ரோட்டை உயர்தர தார் ரோடாக அமைத்தல்; இதற்கான செலவு ரூ. 3½ லட்சம்.

திருவொற்றியூர் – பொன்னேரி ரோட்டை ஜல்லி ரோடாக அமைத்தல்; இதற்கான செலவு ரூ. 1 லட்சம்.

வாலாஜா, ஜயம்பேட்டை, முத்தியால்பேட்டை, செய்யூர், மதுராந்தகம், செங்கற்பட்டு, திருவள்ளூர், சத்தியவேடு, பொன்னேரி, திருமழிசை, குண்ணத்தூர் முதலிய ஸ்தலங்களின் எல்லைக்குள் செல்லும் பிரதம ரஸ்தாக்களுக்கு தார் போட்டு தூசியில்லாமல் செய்தல்.

லாட்டிஸ் பாலம் (பலகை வாராவதி) இதற்குப் பதிலாகப் புதிய பாலம் அமைத்தல்.

கல்வி

இந்த ஜில்லாவில் இப்போதுள்ள ஆரம்பப்பாட சாலைகள் 1,185.

அவற்றில் படிக்கும் சிறுவர் எண்ணிக்கை 76,307.

ஷை சிறுமியர் எண்ணிக்கை 37,793.

ஷை ஹரிஜனச் சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை 2,607.

அவற்றில் படிக்கும் முஸ்லீம் சிறுவர் எண்ணிக்கை 324.

செகண்டரி பாடசாலைகள் 35.

திரூரில் ஒரு ஆதாரக்கல்வி பயிற்சிசாலை நிறுவப்பட்டது; அதில் 80 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

திருவிலுள்ள ஆரம்பப்பாடசாலைகளை ஆதாரக்கல்வி சாலைகளாக்க வழிகோலப்படுகிறது. மாம்பாக்கத்தில் இன்னொரு ஆதாரக்கல்வி பயிற்சி சாலை நிறுவ ஏற்பாடாயிருக்கிறது.

முதியோர் கல்விப் பாடசாலைகள் 12.

முதியோருக்குக் கல்வி கற்பிக்கும் முறையில் பயிற்சியடைந்துள்ள ஆசிரியர் 23.

கொஞ்சம் கொஞ்சமாக கிராமங்களில் கட்டாயக் கல்விமுறை புகுத்தப்பட்டு வருகிறது.

சுகாதாரம்

வெட்டப்பட்ட குடிதண்ணீர் கிணறுகள் 360.

பிரசவ, சிசு சம்பரக்ஷணை நிலையங்கள் 21.

இந்த நிலையங்களில் ஏழைக் குழந்தைகளுக்குப் பால் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

பழவேற்காடு, தோணிரேவு முதலிய இடங்களில் முறைக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வசிக்கும் மக்களுக்கு கொய்னா மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

காஞ்சீபுரத்திலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியில் ரண சிகிச்சைக்கும், க்ஷய ரோகத்துக்கும் பிரத்தியேக விடுதிகள் கட்ட சர்க்கார் ரூ. 1,09,000 அனுமதித்துள்ளார்கள். இந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள் தங்கியிருக்கும் விடுதியைப் பழுது பார்ப்பதற்கு சர்க்கார் ரூ. 7,500 அனுமதித்துள்ளார்கள்.

திருவள்ளூரில் சர்க்கார் டிஸ்பென்சரியை அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 12,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு

நிலக்குடியேற்றக் கூட்டுறவு சங்கங்கள் 5 :

இச் சங்கங்கள் மூலம் 569 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமி 225 ஹரிஜனக் குடும்பத்தினருக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இச் சங்கங்கள் மூலம் 468 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பூமி சாகுபடி செய்யப்டுள்ளது.

நெல்வாய் பண்ணை கூட்டுறவு சங்கம் 1 :

இச் சங்கம் 386 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள தரிசு நிலங்களை 20 வருஷ காலத்துக்குக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அவற்றை அங்கத்தினருக்குப் பகிர்ந்து கொடுத்துள்ளது. ஆறு பம்ப் செட்டுகளைக் கொண்டு இந் நிலங்களைச் சாகுபடி செய்ய ஏற்பாடாகியுள்ளது.

வீடுகள் கட்டித்தரும் கூட்டுறவு சங்கங்கள் 9,

பால் விநியோகக் கூட்டுறவு சங்கங்கள் 101,

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் 38,

வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் 2,701 :

இச் சங்கங்கள் மூலம், விவசாயிகள், நெசவாளர், ஏழை ஹரிஜனங்கள், மாஜி கள்ளிறக்குவோர், மாஜி-ராணுவத்தினர் முதலியோர் கூட்டுணர்ச்சியுடையவர்களாய்ப் பெரும் பயன் அடைந்து வருகிறார்கள்.

தொழில் அபிவிருத்தி

இந்த ஜில்லாவில் சர்க்கார் ஐந்து தொழில் நுணுக்கப் பயிற்சிப் பாடசாலைகளுக்கு மான்யம் வழங்குகிறார்கள். 1946-47-ம் ஆண்டு முதல் 1949-50-ம் ஆண்டு முடிய இப் பாடசாலைகளுக்குச் சர்க்கார் வழங்கியுள்ள மொத்த மான்யத் தொகை ரூ. 17,147.

குடிசைத் தொழில்

காக்களூரில் மட்பாண்டங்கள் செய்வதற்கு 11 பேருக்குப் பயிற்சி யளிக்கப்பட்டது. அவர்களுள் 6 பேர் நல்ல தேர்ச்சி பெற்றார்கள்.

காக்களூரில் கருமாரத் தொழிற்சாலை நிறுவப்பட்டு அங்கு அத் தொழிலில் மக்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

விவசாயக் கருவிகள் உற்பத்தி செய்வதற்கு 8 பேர் தேர்ந்தெடுக் கப்பட்டார்கள். குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 1949-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 1உயிலிருந்து 1950-ம் ஆண்டு டிசம்பர் மீ 31உ வரையில் 47 டன் இரும்பும் எஃகும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

135 சர்க்காக்கள் பாதிவிலைக்கும், 100 சர்க்காக்கள் இலவசமாக வும் கிராமப் பிரதேசங்களில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

கிராம முன்னேற்றம்

இந்த ஜில்லாவில் கிராம நல அபிவிருத்திக்காக மூன்று பிர்க்காக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன—

திருவள்ளூர் பிர்க்கா, மப்பேடு பிர்க்கா, பாண்டூர் பிர்க்கா.

இந்த பிர்க்காக்களில் உள்ள கிராமங்களை இணைக்கும் ரஸ்தாக்கள் பல அமைக்கப்பட்டன.

திருவள்ளூர் பிர்க்காவில் 5 ரஸ்தாக்கள் 21 கிராமங்களை இணைத்துள்ளன. பாண்டூர் பிர்க்காவிற்கு 11 ரஸ்தாக்களும், மப்பேடு பிர்க்காவுக்கு 11 ரோடுகளும் அமைக்க ஏற்பாடாயிருக்கிறது.

குடி தண்ணீர் வசதிக்காக திருவள்ளூர் பிர்க்காவில் 24 கிணறு களும், பாண்டூர் பிர்க்காவில் 10 கிணறுகளும், மப்பேடு பிர்க்காவில் 11 கிணறுகளும் தோண்ட திட்டம் வகுக்கப்பெற்று வேலைகள் நடந்து வருகின்றன.

முதியோர் பாடசாலைகள் 10.

மத்திய நூல் நிலையம் 1.

கிளை நூல் நிலையங்கள் 20.

கிராமங்களிலுள்ள கால்நடைகள் நன்கு பரிபாலிக்கப்பட்டு வரு கின்றன.

உயர்ந்த ரக கால்நடைகள் உற்பத்தி செய்ய வழிவகைகள் கோலப்பட்டுள்ளன.

புதிதாக நியமித்துள்ள அபிவிருத்தி கமிட்டியின் ஆலோசனை யின் பேரில் இந்த மூன்று பிர்க்காக்களிலும் அபிவிருத்தி திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஹரிஜன முன்னேற்றம்

ஹரிஜனச் சிறுவர், சிறுமியருக்கென ஏற்பட்டுள்ள ஆரம்பப் பாட சாலைகள் 116.

ஹரிஜனங்களுக்கும் பிற்போக்கு வகுப்பினருக்கும் ஸ்காலர்ஷிப் பாக நான்கு வருஷகாலத்தில் வழங்கிய மொத்த தொகை ரூ. 98,924.

சர்க்கார் மான்யம் பெறும் ஹரிஜன ஹாஸ்டல்கள் 15.

சர்க்கரே நடத்திவரும் ஹாஸ்டல் ஒன்று பொன்னேரி தாலுகாவில் இருக்கிறது. அதில் 20 ஹரிஜனச் சிறுவர் தங்கியிருக்கிறார்கள்.

முப்பத்தைந்து கிராமங்களில் ஏழை ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள நிலங்கள் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதிக்காக தோண்டிய கிணறுகள் 22,

பழுது பார்க்கப்பட்ட கிணறுகள் 33.

மற்றப் பொதுநலப் பணிகள்

மதுவிலக்குச் சட்ட அமல்

1948-ம் ஆண்டு அக்டோபர் மீ 2உ இந்த ஜில்லாவில் மது விலக்குச் சட்ட அமல் ஆரம்பித்தது. அதனால் வேலையிழந்த மாஜி-கள்ளிறக்குவோர் எண்ணிக்கை 9,050.

அவர்களுள் 1,158 பேர் விவசாயக் கூலிகளாகவும், 464 பேர் கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்களில், பணியாட்களாகவும் 27 பேர் காவல் காப்போர், பியூன்கள் ஆகவும், 124 பேர் காங்க் கூலியாட்களாகவும், 2701 பேர் வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினராகவும், வெல்ல உற்பத்தி செய்வோராகவும், 21 பேர் பால் வினியோக சங்கங்களில் அங்கத்தினராகவும் 333 பேர் இதர தொழில்களிலும் ஈடுபட்டுப் பிழைத்து வருகிறார்கள்.

மாதர்நல இலாகா

இந்த இலாகாவின் கிளை காரியாலயங்கள் செங்கற்பட்டு, திரூர் கிழானூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு மாதருக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த பணியாற்றி வருகின்றன.

இவ்விடங்களில் மூத்தோர்கல்வி கற்பிக்கப்படுகின்றனர். அவர்கள் நூல் நூற்கவும், தையல் வேலை, கயிறு திரித்தல், ஓலை முடைதல், பின்னல் வேலை செய்தல் முதலிய கைத்தொழில் வேலைகளில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிக்கவும் பயிற்சியளிக்கப்படுகின்றனர்.

இதனால் மாதர்களுக்கிடையே கூட்டுணர்ச்சியும் முன்னேற்றமும் அபிவிருத்தியடைகின்றன.

சமூக ரேடியோ செட்டுகள் அமைப்பு

1946-ம் ஆண்டு ஏப்ரல் மாத ஆரம்பத்தில் பஞ்சாயத்து போர்டுகளில் 24 ரேடியோ செட்டுகளும், முனிசிபாலிடிகளில் 7 ரேடியோ செட்டுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

தற்போது பஞ்சாயத்து போர்டுகளில் 40 ரேடியோ செட்டுகளும், தனிப்பட்ட ஸ்தாபனங்களில் 4 ரேடியோ செட்டுகளும், சர்க்கார் ஸ்தாபனங்களில் 2 ரேடியோ செட்டுகளும், முனிசிபாலிடிகளில் 13 செட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவை திறமையுடன் நடைபெறுவதைக் கண்காணிக்க செங்கற்பட்டிலும் சென்னையிலும் 2 ரேடியோ சேவை நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.


"செல்வம் எத்தனையுண்டு புவிமீதே
அவை யாவும் படைத்த தமிழ்நாடு"
"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு."